கல்விச் சிறப்பிதழ்

# தமிழரசு

1-6-1979 50 காசு





# சிறைச் சீர்திருத்த ஆணைக் குழுவின் அறிக்கை!

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிக்கை, 28.4.79 அன்று அக் குழுவின் தலைவர் பாட்னா உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு ஆர். எல். நரசிம்மன் அவர்களால் மாண்புமிகு தமிழக முதல்வரிடம் அளிக்கப்பட்டது.

மூன்று தொகுப்புக்களைக் கொண்ட தனது அறிக்கையில் சிறைச் சீர்திருத்த ஆணைக்குழு மொத்தம் 178 பரிந்துரைகளை வழங்கியுள்ளது. மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு நாராயணசாமி அவர்களின் பொது அறிவுரைக்கிணங்க இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளை நடத்துவது பற்றிய முதல்வரின் தாராள மனப்பான்மை மற்றும் முன்னேற்றக் கருத்துகளுக்கிணங்கவுள்ள தனது பரிந்துரைகளை விரைவில் செயலுக்குக் கொண்டுவருவதன் மூலம், சிறைக் கைதிகளை நடத்த வேண்டிய முறை, அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய இட வசதி முதளியவற்றில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் நிற்கும் மாநிலமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் நன்னாளை எதிர்பார்ப்பதாகக்கூறி, குழுவின் தலைவர் தனது அறிக்கையை முதல்வரிடம சமர்ப்பித்தார்.



# பிரதமர் வேண்டுகோள்

குழந்தைகளே நாட்டின் மிகச் சிறந்த செல்வங்கள், அச்செல்வங்களைப் பேணிப் பாதுகாத்து வருவதே நமது கடமை. இதுவே குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை என ஏற்றுக் கொள்வோம். இந்த மனிதச் செல்வங்களை வளர்ப்பதே அரசின் நோக்கமாகும். அங் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

உலகக் குழந்தைகள் ஆண்டு, நமது ஆக்கப்பணிக்கு புதிய வேகத்தைக் கொடுத்துள்ளது. குழந்தைகளுக்குச் சத்துணவு, உடல்நலம், கல்வி ஆகியவற்றை அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசின் தேசீய செயல் திட்டம் எடுத்துக் காட்டியுள்ளது. இதில் அரசுத்துறை மட்டுமல்லாது சொந்த முயற்சியில் இயங்கும் தனியார் நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பங்கையும் செயல் திட்டம் சுட்டிக்காட்டுகிறது. பக்குவத்துடனும் பாசத்துடனும் உருவாக்கப்பட வேண்டிய குழந்தைகளின் நலத்திலும் வளர்ச்சியிலும், சொந்த முயற்சியில் நடத்தப்படும் தனியார் நிறுவனங்கள் சிறப்பான பங்கேற்றுச் செயல்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும். அவர்களுக்கு உதவ, தேசீய குழந்தைகள் நிதியை நாங்கள் துவக்கியுள்ளோம். குழந்தைகளின் நலனுக்காக-குறிப்பாக தாழ்த்தப்பட்ட மலைவாழ் வகுப்பினரின், குழந்தைகளுக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கும், உதவிகளைச் செய்யவிருக்கிற சொந்த முயற்சியில் இயங்கும் தனியார் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிப்பது இதன் குறிக்கோளாகும்.

வருங்காலத் தலைமுறையினராக விளங்கப்போகும் குழந்தைகள், அவர்களது வளர்ச்சிக்குரிய முழுவசதிகளையும் பெறுகிறார்களா என்பதைக் கண்காணிப்பது சமுதாயத்தின் கடமை. வருங்கால மானிட சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்ய, ஒவ்வொருவருக்கும் அருமையான வாய்ப்பை இந்த தேசீய குழந்தைகள் நிதி வழங்குகிறது. இந்நிதிக்கு தாராளமாக வழங்குவதன்மூலம் இந்நிதிக்கான குறிக்கோளை அடைய உதவ வேண்டும் என்று தொழிலதிபர்களையும், வணிகப் பெருமக்களையும் கருணை உள்ளங்கொண்ட மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு வழங்கும் நிதிக்கு வருமான வரி சட்டப்பிரிவு 80 ஜியின் கீழ் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

"செயலாளர் மற்றும் பொருளாளர், தேசிய குழந்தைகள் நிதி, சாஸ்திரிபவன் புதுடெல்லி-1" என்ற முகவரியில் நிதி நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(ஒ-ம்) மொரார்ஜி தேசாய.

புதுடெல்லி,
மார்ச் 16, 1979.

தமிழரசு

மலர்: 9 இதழ்: 23

1. 6. 1979

# பாருக்கு நல்ல பணிசெய்வோம்!

## மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர்.

எனக்கு மன நிறைவு தரக் கூடிய மூன்று நிகழ்ச்சிகள் இணைக்கப் பெற்றிருக்கின்றன. முதலாவது தமிழ் இசை விழா. தமிழ் இசைச் சங்கத்திற்கு மதுரையில் ஒரு நல்ல கட்டடம் கட்டப்பெற்றுப் பல்லோர் பாராட்டுகின்ற



வகையிலும், தமிழ் வளர்வதற்கும், காப்பதற்கும் உறுதுணையாக இருக்கின்ற இசையை இணைத்து அதன் மூலம் தமிழைக் காப்பாற்றுகின்ற கடமைக்கு ஒரு பாதுகாப்பு நல்குகின்ற வகையிலும் இந்தச் சிறந்த கட்டடத்தை உருவாக்கி அதனைச் செட்டிநாட்டு அரசர்பெயரால் ராஜா முத்தையா மன்றம் என இங்கு அமைத்திருப்பது என் மனத்திற்கு நிறைவு தரக் கூடிய நல்ல பணி என்று சொல்ல ஆசைப்படுகின்றேன். எனவே, ஐந்தாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற மதுரைத் தமிழ் இசைச் சங்கத்தினைப் பாராட்டுகின்றேன். அதன்பணி வளர்க என வாழ்த்துகின்றேன்.

முப்பெரும் விழாக்களில் ஒன்றாகச் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களுக்குப் பாராட்டு விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. செட்டி நாட்டு அரசர் அவர்களுக்குத் ''தமிழிசைக் காவலர்'' என்னும் சிறப்புப் பட்டத்தினை நான் வழங்குமாறு பெருமை தந்திருக்கின்றீர்கள். செட்டிநாட்டு அரசர் அவர்களைப் போன்றவர்களுக்குப் பட்டம் அளிக்கின்ற தகுதியோ, அறிவோ, ஆற்றலோ, அனுபவமோ இல்லாத என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதனை அழைத்து அந்தப் பெருமையைத் தந்ததற்கு நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

முப்பெரும் விழாக்களில் மற்றொன்று பாவேந்தர் விழா. இங்கு மேலவைத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி அவர்களும், என் தம்பி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் பாரதியாரைப் பற்றியும், பாரதிதாசனைப் பற்றியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். ஒருமொழியினுடைய தோற்றம், வளர்ச்சி, வாழ்வு இவைகளை எண்ணிப் பார்த்து அந்த மொழியினுடைய வயது என்ன என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்போது தான் அந்த மொழிக்கு உரிய மரியாதையும் உயர்வும் எல்லோருடைய உள்ளத்திலும் ஆழமாகப் பதிகின்றன என்பதனை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். தமிழைக் காப்பதற்காக யார் யார் பாடுபட்டிருக்கின்றார்கள்? தமிழை அழிப்பதற்காக யார் யார் — முயன்றிருக்கின்றார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மதுரையை நெருப்புக்கூட அழிக்க முயன்றது என்று மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவ்வாறு அழிக்கத் தொடங்கிய நிலையையும் மீறி, மதுரை காப்பாற்றப்பட்டிருக்கின்றது; தமிழ் காப்பற்றப்பட்டிருக்கின்றது. இந்தி என்று இப்போது பேசப்படுகின்ற மொழியும், வடமொழி என்று கூறப்படுகின்ற சமஸ்கிருதமும் அதனை ஒட்டிய தாய் அதற்கு முன்பிருந்த பிராகிருதமும் அதற்கும் முன்னால் இருந்த பாலிமொழியும் தமிழை அழிப்பதற்காக இங்கே அடியெடுத்து வைத்தனவாகும்.

பாலிமொழிக்குச் சொந்தக்காரர்கள் மதுரைமீது படையெடுத்து வந்து தமிழை அழிக்க முயன்றார்கள். அவர்கள் அரசோச்சும்போது தமிழுக்குச் சொந்தக்காரர்கள் ஒளிந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாலிமொழிக்குச் சொந்தக்காரர்கள் முதலில் தமிழ் மொழியை அழித்துவிட்டால், தமிழர்களை அடிமைப் படுத்திவிடலாம் என்று எண்ணினார்கள். அப்போதெல்லாம் தமிழ் மக்கள் தமிழுக்கு மரியாதை தந்தார்கள். தமிழ் தங்களின் சொத்து, அதனை அழிக்கவிடமாட்டோம் என்று வீரமுழக்கம் செய்தார்கள்.

அயர்லாந்து விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் எத்தனையோ முறைகளைக் கையாண்டும் மக்களை ஒருங்குகூட்டி விடுதலை பெற முடியாமல் போனபின் அயர்லாந்து மொழியை முன் நிறுத்தி அந்த மொழிக்குத் தனி உரிமை வேண்டும் என்று போராடிய பின்னரே அந்த நாடு இன்

றையதினம் விடுதலை பெற்ற நாடாக விளங்குகின்றது.

மதுரையை எத்தனையோ மொழிகள் முற்றுகையிட்டன. வேற்றரசர்கள் மதுரை மீது படையெடுத்தார்கள். அப்போதெல்லாம் மதுரை மாநகரம் தலை வணங்காமல் தலை நிமிர்ந்து நின்று தமிழால் நிலை பெற்றது. இவ்வகையில் அயர்லாந்து வரலாறும் மதுரை வரலாறும் ஒற்றுமையாக அமைந்திருப்பதனைக் காணலாம். இத்தகைய வரலாற்றுப் புகழ்பெற்ற மதுரையில் தமிழ் இசைச் சங்கத்திற்காகத் தனிக்கட்டடம் உருவாகியுள்ளது.

தமிழில் பாடினால் அவர்களைச் சங்கீத வித்துவான்களாக ஏற்றுக் கொள்வதில்லை என்ற நிலைமை, நம் தமிழ்நாட்டில் இருந்தது.

திருவாசகத்தை மதித்தார்கள். திருக்குறளை மதித்தார்கள். திருப்பாவையை-திருவெம்பாவையை மதித்தார்கள். ஆனால் அவற்றை இசையோடு பாடும்போது அவ்வாறு பாடிய சங்கீத வித்துவான்களை மதிக்காத காலம் ஒன்று இருந்தது, என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதும், தேவாரம் பாடும் ஓதுவராக வாழ்ந்தார்கள் என்பதும் நமக்கும் தெரியும். பின்னால் அவருக்கு எத்தனையோ சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அவையெல்லாம் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கம் தோற்றுவித்த பிறகு தேசிகர் அவர்களுக்குக் கிடைத்த பட்டங்கள் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே நாம் ஒவ்வொருவரும் செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவிக்காமல் இருந்திருந்தால், ஒரு புலவர் அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் புலவர் குழு அம்முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அந்தத் தமிழிசை இயக்கம் பணம், பதவி, சாதி உயர்வு இவைகளால் உறுதியாக அழிக்கப்பெற்றிருக்கும். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் இவ்வியக்கத்தில் ஈடுபட்டமையால், பணத்தைக்கொண்டு யாராலும் அவரை விரட்டமுடியவில்லை. அவர் நெஞ்சு உரத்தோடு இவ்வியக்கத்தில் ஈடுபட்டமையால் பதவியைக் கொண்டும் அதிகாரத்தைக் கொண்டும் விரட்டமுடியவில்லை. அச்சுறுத்தி அடிமைப்படுத்தவும் முடியவில்லை. அண்ணாமலையார் அவர்கள் தமிழன் என்ற எண்ணத்துடனும், துணிவுடனும் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்ட காரணத்தால் அவரை எதிர்த்து நின்றவர்கள் தம் கருத்தை எதிர்த்து வெளியிட முடியாது தோல்வியடைந்து புறங்கண்டார்கள். கடைசியில் அண்ணாமலையாருடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள்.

பாராட்டப் படுகின்றவர்கள் பணத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் புகழுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், உழைக்கின்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் கண்களுக்கு விரோதிகளாகத் தெரிகின்ற அளவிற்கு வசதி படைத்தவர்களாக இருந்தாலும் அவர்களை அவர்கள் செய்த தொண்டுக்காக நாங்கள் பாராட்டுகின்றோம். செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள்,

**எதனையும் அறிய வேண்டும் என்னும் ஆசை, இசை நுகர்ச்சியின் மீதேற்படும் ஆசைபோல் ஆற்றல் மிக்கது. இளவயதில் இயல்பாய் அமைந்திருக்கும் இவ்வாசையில்லை என்றால் அறிவியலோ கணிதமோ இராது.**

**—ஐன்ஸ்டின்.**

செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் போன்றவர்கள் தமிழிசை இயக்கம் என்ற தியாகத் திருப்பணியில் எதனைப் பற்றியும் கவலைப் படாமல் ஈடுபட்டார்கள்.

இவர்கள் செல்வமும், புகழும் பெருமையும் சுற்றமும் பெற்றவர்கள் எங்கு சென்றாலும் தனக்கென்று ஒரு தனி மரியாதை கொண்டவர்கள். இவ்வளவும் படைத்த இவர்கள் - இவற்றை நாம் ஏன் இழக்க வேண்டும்? எதிரிகளை எதற்காக உருவாக்க வேண்டும்? என்று கருதியிருந்தால் இந்தத் தமிழிசை இயக்கம் வளர்ந்திருக்க முடியுமா? அவர்கள் வளர்க்காவிட்டால் வேறு யாராவது துணிந்து இந்த அளவிற்கு வளர்த்திருக்க முடியுமா?

ஒருவேளை அரசியல்வாதிகள் முயன்றிருக்கலாம். அவர்கள், அதனால்சிறைச்சாலைக்குச்சென்றிருக்க முடியும். தமிழைக் காப்பாற்ற முடிந்திருக்கும். ஆனால் இந்தத் தமிழிசையின் வளர்ச்சி இடையறாத தொடர்ச்சி எதிர்காலத்தை வெற்றிகொள்ளுமாறு நமக்குத் தந்திருக்கும் துணிவு, அத்தனையும் அரசியல் வாதிகளால் கிடைத்திருக்க முடியாது. இதனை நான் முதலமைச்சர் என்ற முறையிலும், சாதாரணக்குடிமகன்என்றமுறையிலும் துணிந்து மனநிறைவுடன் கூறிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களைப் பாராட்டும்போது எனக்கு உள்ள மனநிறைவே இதுதான்.

பிறரால் ஓரளவு செய்ய முடிந்ததை முழுமையாகச் செய்து வெற்றி கிடைக்கச் செய்தவர் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் என்று சொல்வதில் பெருமைப்படுகின்றேன்.

தமிழிசை விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்று செட்டிநாட்டுஅரசர்முத்தையாஅவர்கள் பலமுறை என்னிடம் கேட்டார்கள். சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகிறது என்பதனை எடுத்துக்கூறி, அது முடிகின்ற நிலையில் நான் வந்து கலந்து கொள்கிறேன், என்று குறிப்பிட்டேன். அவ்வாறு குறிப்பிட்ட பின் நான் வரும்வரை இவ்விழாவினை நடத்தாமல் ஏன் காத்திருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் பாகவதர் அவர்களோடும், தண்டபாணி தேசிகர் அவர்களோடும், கலைவாணர் அண்ணன் என்.எஸ்.கே. அவர்களோடும் தொடர்புகொண்டிருந்தது பற்றி இப் பணியை எனக்களிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

முதலமைச்சர் என்பதற்காக என்னை அவர்கள் அழைக்கவில்லை. முதலமைச்சர் பதவி என்பது விரும்பினால் வரும்; விரும்பாவிட்டால் போய்விடும். ஆனால், அந்தப் பழைய காலத் தொடர்புகள் யாராலும் மாற்றவும் முடியாது. போக்கவும் முடியாது, ஆகவே, அந்த முறையில் என்னை இங்கே அழைத்திருக்கிறார்கள்.

ஒரு மொழிக்குச் சொந்தக்காரர்களாக யார் யார் இருக்க வேண்டும் என்பதனை முதலிலேயே நாம் புரிந்து கொள்வது சரியாக இருக்கும் என்று கருதுகின்றேன். வசதி படைத்தவர்கள், செட்டி நாட்டு அரசர் முத்தையா போன்றவர்கள் இதற்காக உழைத்தாலும்கூட உழைக்கும் வர்க்கம் தாய்மொழியைக் காக்கத் துணிந்து முன்வந்தாக வேண்டும். அந்த நினைப்பும் நம்பிக்கையும் அவர்களது உயிர்

16-6-79 தமிழரசு இதழ்



அரசின்
இரண்டாண்டுப்பணித்
தொகுப்பு மலராக
வெளிவருகிறது!

அழகிய முகப்போவியம்! அதிகப் பக்கங்கள்!
அனைவரும் பாதுகாக்கவேண்டிய கருத்துப்பேழை!

மூச்சாக இருக்க வேண்டும். இங்கே தமிழிசைச் சங்கத்திற்காக பெரிய கட்டடம் உருவாகியுள்ளது. இது பணக்காரர்களுக்காக மட்டும் கட்டப்பெறவில்லை என்னும் உணர்வு அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஏற்படவேண்டும். அவ்வகையில் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் கலந்துகொண்டு தமிழிசையைக் கேட்டு அனுபவிக்கும் நல்ல வாய்ப்பு ஏற்படுமாறு இத் தமிழிசைச் சங்கம் பாடுபட்டு வருகிறது. அதற்காகத் தமிழிசைச் சங்கத்தைப் பாராட்ட விரும்புகிறேன்.

செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்களுக்குத் 'தமிழிசைக் காவலர்' என்னும் சிறப்புப் பட்டம் பொறித்த பதக்கத்தை அவர் கழுத்திலே நான் அணிவிக்கும்பொழுது அப்பதக்கம் நன்றாகத் தெரிய வேண்டும் என்று விரும்பினேன். அதனால் அப்பதக்கத்தினை ஒழுங்காக அணிவித்து நன்றாகத் தெரியுமாறு செய்தேன். அப்பதக்கத்தின் விலை என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் செட்டிநாட்டு அரசர் முத்தையா செய்திருக்கின்ற தொண்டிற்கு விலை மதிக்க முடியாது.

அவர்களின் தொண்டிற்கு அடிப்படையாக அமைந்தவர்கள் உழைக்கின்ற வர்க்கத்தினர் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவ்வர்க்கத்தினர் இன்னிசையைக் கேட்க வேண்டும். இன்னிசை என்பது காதுக்கு இனிமையான ஒலியாக இருந்துவிட்டால் மட்டும் போதாது. அதில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் மக்களுக்குப் புரிந்தாக வேண்டும். இசையைவிட்டு இறைவனையே பார்க்க முடியாது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அத்தகைய நல்ல இசையைத் தாய்மொழியில் பாடும்போது ஒவ்வொருவனும் உள்ளம் உருகுகின்றான். அதன் விளைவாக உற்சாகம் பெறுகின்றான். அந்தக் கணத்திலிருந்து துணிவு பெறுகின்றான். ஆகவே மொழிப்பற்று உயிர் மூச்சாக மாறுகின்றது. பின் தன்மானம் பிறக்கின்றது. இறுதியில் தன்மானத்திற்குச் சொந்தக்காரன் தமிழன் என்ற உணர்வு மேலோங்கி நிற்கின்றது.

இத்தகைய மாபெரும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்ற செட்டிநாட்டு அரச குடும்பத்தாருக்கு ஒவ்வொருவரும் நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கு நகரத்தார்கள் மிகவும் பணி செய்திருக்கிறார்கள். நகரத்து மக்கள் என்று அழைக்கப்படுகின்ற நகரத்தார்கள், தமிழை வளர்ப்பதற்காக உழைத்தார்கள் என்பதனை எண்ணிப்பார்க்கும்போது அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ் வெறும் வழக்குமொழியாக, பேச்சுமொழியாக, மேடைப் பேச்சு மொழியாக இருந்துவிடாமல் கருத்துக்கும், இந்த நாட்டின் வாழ்வுக்கும், இந்த நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்கும் வழி தேடித்தருகின்ற ஒரு மொழியாக அமைந்தாக வேண்டும். அந்தத் திறமையும் தகுதியும் தமிழ் மொழிக்கு உண்டு என்பதனை நான் இங்கே பெருமையுடன் சொல்ல விரும்புகின்றேன்.

நான் பாரதிதாசன் அவர்களோடு பல காலம் தொடர்ந்து பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவன். பாவேந்தர் அவர்கள் தமிழின் அருமை பெருமைகளை மிகத் தெளிவாக உலகுக்கு எடுத்து உணர்த்தியவர்கள். அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களிடம் மிகவும் ஈடுபட்டவர்கள். பாவேந்தர் அவர்களின் உயர்ந்த வாழ்க்கையை நாம் ஒவ்வொருவரும் பாராட்ட வேண்டும்.

தமிழைப் பற்றி பேசுவதால் மட்டும் தமிழ் பாதுகாக்கப்பட்டு விடும் என்று யாரும் தயவுசெய்து எண்ணி ஏமாந்து விடாதீர்கள். நம்முடைய உயிர் மூச்சாகத் தமிழ் கலந்திருக்க வேண்டும். தமிழ் தமிழ் என்ற சிந்தனை நம் உள்ளத்தில் ஊறவேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டும். இதனைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். ஆனால், தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் எதையும் தாங்கும் இதயம் நமக்கு வேண்டாம். தமிழைத் தாங்குவோம். தமிழை மட்டும் தாங்குவோம். தமிழ் வாழ்வதற்காக இந்த உலகைத் தாங்குவோம்.

தமிழிசைச் சங்கத்தில் தமிழ் வளர, தமிழிசை வளர ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன என்பதறிந்து மகிழ்கின்றேன். இவ்வியக்கத்தைக் கட்டிக் காத்து வரும் செட்டிநாட்டு அரசர் முத்தையா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இந்தப் பாருக்கு நல்ல பணி செய்து தமிழுக்குத் தொண்டாற்றி, தமிழ் உள்ளங்களுக்குச் சொந்தக்காரராக வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். அண்ணா நாமம் வாழ்க. தமிழ் வாழ்க.

(மதுரையில் 29.4.79 அன்று தமிழ் இசைச்சங்கம் ''ராஜா முத்தையா மன்றம்'' ஐந்தாம் ஆண்டுத் தமிழிசை விழாவில், செட்டிநாட்டரசர் ராஜா சர் முத்தையா அவர்களுக்குத் தமிழிசைச் அன்பர்களின் சார்பாகத் 'தமிழிசைக் காவலர்' என்னும் சிறப்புப் பட்டம் பொறிக்கப் பெற்ற பொற் பதக்கத்தை அணிவித்து ஆற்றிய பாராட்டுரை)




# ஓங்கி உயரும் கல்வித் துறை

மாண்புமிகு கல்வியமைச்சர்
திரு. செ. அரங்கநாயகம்

தமிழ்நாட்டு மக்களின் ஆவல்களையும், தேவைகளையும் நிறைவேற்றும் நோக்குடன், சமுதாயத்தின் சிற்றூரைச் சார்ந்த கிராமப்புறத்து மக்கள் மற்றும் நலிந்த பிரிவினரின் தேவைகள் ஆவல்களை நிறைவேற்றும் கருத்துடன், கல்வியில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு மாநில அரசு ஆவல் கொண்டிருந்தது. அது தொடர்பாக இடையறாத முயற்சிகளையும் மேற கொண்டது. இவற்றின் விளைவாக, 1978-ஆம் ஆண்டு ஜூலை திங்களில் இருந்து தமிழ்நாட்டில் 10+2+3 என்னும் புதிய கல்வி முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி முறை பொதுப்பாடக் கல்வி, தொழிற் கல்வி என இரு பிரிவுகளைக் கொண்டதாக வகுக்கப்பட்டுள்ளது: அவை மாணவர்களில் பல்வேறு வகையினரின் தேவையை நிறைவு செய்வனவாகும்.

மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக்கூட வசதிகள் ரூ. 6.40 கோடி அளவில் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களும் இரண்டு கோடி ரூபாய் மதிப்பில் அளிக்கப்படும்.

மேலும் எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் 37 இலட்சம் ரூபாய் அளவில் அளிக்கப்படும்.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகள், நூலக வசதிகள், ஆய்வுக்கூட வசதிகள் ஆகியவை பற்றி விரிவான கணக்கு எடுக்கப்படும்.

பல உயர்நிலைப் பள்ளிகளில் கட்டடங்கள் இல்லை என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் கட்டடங்கள் இல்லை என்பதை மறுக்காத அதே நேரத்தில் கடந்த காலத்தில் இருந்துவந்த நடைமுறைகளை அரசுஆராய்ந்து பார்த்ததில் ஒரு கட்டடம் கூட இல்லாத பள்ளிகளும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் நாம் அந்தப் பிரச்சினையை நியாயமான ரீதியில் அணுகவில்லை என்ற குறைபாடுதான். ஆகவே, இந்த அரசு எந்தவிதமான வேறுபாடும் காட்டாமல் பிரச்சினைகளை நியாயமான ரீதியில் அணுகி, ஒரு கட்டடம்கூட இல்லாத பள்ளிகளுக்கு முதல் வாய்ப்புத் தரும். அதன் பின் வசதிகள் குறைவாக இருக்கும் பள்ளிகளுக்கு உடனடியாக வசதிகள் செய்து தரும். பின்னர் படிப்படியாக எல்லாப் பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கும் வகையில் திட்டம் வகுக்கும்.

நிரந்தரக் கட்டடம் ஏதும் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு



உடனடியாக, வரும் ஆண்டில் ஒரு நிரந்தர கட்டடமேனும் கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

உள்ளூரில் கிடைக்கும் வசதிகளையும், கட்டடப் பொருட்களையும் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

கிராமப்புறங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஆங்காங்கே குடி இருக்க வசதிகள் செய்யும் வகையில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கடன் வழங்க சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புற வீட்டு வசதிக்காகச் செலவிடப்படும் தொகைகளும் வரும் ஆண்டில் அதிகப்படுத்தப்படும்.

## தலைமை ஆசிரியர் பணி

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள் பணி இடம் நிரந்தரமாகக் காலி ஏற்படும்போது அந்தப் பணியிடங்கள் கீழ்க்கண்ட வகையில் நிரப்பப்படும் :—

குறிப்பிட்ட நடுநிலைப் பள்ளி அல்லது அந்தப் பள்ளியை நடத்தும் நிர்வாகத்தில் உள்ள மற்ற பள்ளிகள் இவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ, முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ இருந்தால், அவர்களில் பணி மூப்பு உடையவரை இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ, முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ நடுநிலைப்

பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்த அவர் இடைநிலை ஆசிரியர் ஊதியம் தற்போது பெற்று வந்தால் அவர்கள் அனைவருக்கும் 1-9-79 முதல் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும். இந்த முறையில் தற்போது தலைமை ஆசிரியராக இருப்பவர்கள் இவ்வாறு வருங்காலத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியராகவோ, முதல் நிலைத் தமிழ் ஆசிரியராகவோ தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளும் பொழுது ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் முதல் தேதி இவ்வாறு அவர்களின் பதவி பட்டதாரி ஆசிரியர் நிலைக்கு உயர்த்தப்படும்.

நடுநிலைப் பள்ளியிலோ, அந்தப் பள்ளியின் நிர்வாகத்தின் கீழோ, பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் அல்லது முதல் நிலை தமிழ் ஆசிரியர் அங்கு பணியில் இல்லாதபோது காலி ஆகும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணி இடத்தை முதல்நிலை தமிழ் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பி அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழாசிரியர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டுமென்ற, கோரிக்கையை முன் வைத்து வருகிறார்கள். கடந்த பல்லாண்டுக் காலமாக அது ஒப்புக்கொள்ளப் படவில்லை. ஆசிரியர் பெருமக்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் உயர்தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியராகத் தமிழாசிரியர் வரலாம்.- வரவேண்டும் என்ற விருப்பத்தை இந்த முடிவின் மூலம் இந்த அரசு இன்றைய தினம் அறிவிக்கிறது.

இந்த நேரத்தில் தமிழாசிரியர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு இந்தப் பொறுப்பைத் தருவதன் மூலம் உங்கள் கட்டுப்பாட்டில் படிக்கின்ற மாணவர்கள் ஒழுக்கம், நன்னடத்தையில் சிறந்து, தமிழ்ப் பண்பாடு மிக்கவர்களாக, இனப்பற்று மிக்கவராக, மொழிப்பற்று மிக்கவராக, எதிர்காலத்தில் அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வந்தாலும், கல்லூரிக்கு வந்தாலும் சிறந்த மாணவர்களாக இருக்கக் கூடிய வகையில் அந்த மாணவர்கள் உங்களிடம் பயிற்சி பெறுவார்கள். நல்ல கல்வி பெறுவார்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறேன்.

**பள்ளி சாராக் கல்வி**

அடுத்தபடியாக, பள்ளிசாராக் கல்வி வருகிற ஆண்டில் இருந்து முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்களின் நன்மைக்காக 8-வது வகுப்பு நிலையில் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வு நடத்தப்படும். தேர்வு நடக்கும் மாதத்தில் முதல் தேதியன்று 14 வயது முடிந்தவர்கள் முறையான பள்ளிகளில் கீழ் வகுப்புக்குள் எதிலாவது படித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் விரும்பினால் அவர்களும் இத்தேர்வு எழுதலாம். இப்பொதுத் தேர்வு 1979 டிசம்பர் மாதம் முதல் நடைபெறும். இச்சலுகையினால் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பள்ளி சாராக் கல்வி வசதிகளின் முழுப் பயன் எய்த இத்தேர்வு உதவும்.

இன்றைக்கு நாம் கட்டாயமாகக் கல்வியைச் சொல்லித்தர வேண்டுமென்று சொன்னாலும், பல்வேறு பொருளாதாரக் காரணங்களாலும் பள்ளிக்கு வந்து பள்ளிக் கல்வியை முறைப்படி படிக்க முடியாத நிலையில் இருக்கின்றவர்கள் இதனைப் பயன்படுத்திக்கொண்டு நல்ல வாய்ப்புக்களை இதன் மூலமாகப் பெறுவதற்குரிய வாய்ப்பினைத் தருகிறோம்.

**கல்லூரிக் கல்வி**

அடுத்து, கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுடைய பிரச்சினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1979-80 முதல், புகுமுக வகுப்பு நீக்கப்படுவதால் கல்லூரி ஆசிரியர் எவரும் பாதிக்கப்படாதபடி அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

கல்லூரி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்க்குச் சலுகைகைகள் வழங்கி பிறப்பித்துள்ள ஆணைகளின் விவரம் வருமாறு:

தனியார் கல்லூரிகளில், முறை பிறழ்ந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்பத் திரும்ப பணியிலமர்த்தாவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் இசைவுடன் அந்த ஆசிரியரை அவருடைய பணி பதவியோடு வேறொரு கல்லூரிக்கு மாற்ற கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் 1-4-1978 முதல் நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப் படி ஆகியவைகளை மூன்றாம் ஊதியக் குழு விகிதத்தில் பெறுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதே சமயத்தில் பழைய விகிதங்கள் அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும் பட்சத்தில் தொடர்ந்து அந்த விகிதங்களைப் பெறவும் அவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்த பிற துறைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக்குழு ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1975-76 முதல் தமிழ்க் கல்லூரிகளில் புலவர் படிப்பிற்குப் பதிலாக பி. லிட். பட்ட வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டப் படிப்பையும் மற்றும் இதற்குத் தேவையான கூடுதல் ஆசிரியர்களையும் அங்கீகரித்து மானியம் அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது,

1979-80-ல் கோயம்புத்தூரில் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக ஆக இரண்டு சட்டக் கல்லூரிகள் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டப் படிப்பில் முதுகலைப் பட்டப் படிப்பு மதுரை சட்டக் கல்லூரியில் வருகிற ஆண்டிலிருந்து துவக்கப்படும். இப்போது படித்து வெளியேறுகின்ற மாணவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு இல்லை என்ற அடிப்படையில், நிறையப் பேர்களைத் தயார் செய்வதற்குப் பதிலாக நாட்டின் தேவைக் கேற்ப கல்வியின் தரத்தை உயர்த்தி, எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது.

**தன் விருப்ப ஓய்வு**

20 ஆண்டு பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஓய்வூதியத்துடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்ற அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி



மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமெனத் தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி

விதி விலக்களித்த இனங்களைத் தவிர, மற்ற இனங்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழையே கையாள வேண்டும் என்பது அரசின் கொள்கை ஆகும். இதனைச் செயல்படுத்தத் தயக்கம் காட்டும் அதிகாரிகள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. தமிழை ஆட்சி மொழியாக்குவதிலே யாருக்கும் மாறுபாடான கருத்து இருக்காது.

### தொல்பொருள் ஆய்வு

ஏற்பளித்த நான்கு மாவட்டத் தொல்பொருள் ஆய்வு அலுவலர்கள் மூலம் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இதுகாறும் 200-க்கும் மேற்பட்ட பண்டைய ஓலைச் சுவடிகளைச் சேமித்துள்ளது. இவற்றை, சுவடகள் வைத்திருந்தவர் இலவசமாகக் கொடுத்துள்ளனர். பலர் கொடுக்கவும் முன்வருகின்றனர். பொருள் கொடுத்து வாங்கவும், அரசு அனுமதி அளித்துள்ளது. சேமித்துள்ள சுவடிகளில் பல சித்த, மருத்துவச் சுவடிகளாகும். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தளவாய் முதலியார் குடும்பத்தினர் திருநெல்வேலிப் பகுதியில் கட்டடங்கள் எழுப்பி கலைத்தொண்டு புரிந்ததைக் குறிக்கும் ஓலைச் சுவடி ஒன்றும் 18ஆம் நூற்றாண்டு 'கப்பல் இலக்கியம்' ஒன்றும் புதிதாகக் கிடைத்தவையாகும்.

இத்துறை இதுகாறும் பாண்டியர், பல்லவர், சோழர் காலத்தைச் சார்ந்த 130-க்கும் மேற்பட்ட சிலைகளைச் சேகரித்துள்ளது. இதுபோல் 100-க்கும் மேற்பட்ட சிலைகளைகண்டு அவற்றை எடுத்துப் பாதுகாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை இன்னும் விரிவுபடுத்துவதற்காக மேலும் 5 மாவட்டங்களில் மாவட்டத் தொல்பொருள் ஆய்வு அலுவலர்களை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்ப் பண்பாட்டு மையம்



உலக நாகரிகத்திற்குத் தமிழர் நாகரிகம் முன்னோடியாக அமைந்து தன் பெரும் பங்கையும் பணியையும் ஆற்றியுள்ளது. தமிழர் பண்பாட்டின் பல்வேறு சிறப்புக் கூறுகளை வெளிநாட்டினரும், உள்நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் செயல்பட தமிழ்ப்பண்பாட்டு மையம் தோற்றி வைக்கப்பட்டுள்ளது. தமிழர் வாழ்வில் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகள் வாழ்க்கை மரபில் கையாளப் பெற்றுவரும் கருவிகள், இசை, நாட்டியம், நாடகத்துறை செய்திகள், வீர விளையாட்டுகள், முதலியவற்றைச் சித்திரிக்கும் நூல்கள், ஏடுகள், பண்டங்கள் போன்றவற்றைத் திரட்டி வெளிநாட்டவரும் கண்டு மகிழும் வண்ணம் நூலகம், கலை அரங்கம், காட்சிக் கூடங்கள் முதலியவை ஏற்படுத்தப்படும். இம் முயற்சியில் சில அரிய நூல்களும் சுவடிகளும், ஏடுகளும் அருக்கலைப் பொருள்களும் தற்பொழுது திரட்டி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பண்பாட்டினைப் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் இலக்கியப் பாடல்கள் கொண்ட இசைத்தட்டுகள் வெளியிடப்படவுள்ளது. மேலும் நாட்டுப் பாடல்கள் தொகுப்பு நூல்களை வெளியிடவும் திரைப்படத்துறை வாயிலாகத் தமிழர் பண்பாட்டைக் காணவும் வகை செய்யப்பட்டும் வருகிறது.



# நாங்கள் அவன் வயிற்றில் அடித்துவிட்டோம்!

## பிச்சைப்பாத்திரத்தைப் பிடுங்கியதன் மூலம்.



ஆம். அவன் பிச்சைப் பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்து விட்டோம். நாங்கள் அவனைச் சந்திக்கும்முன்...அவன் மனிதர்களின் இறுதிச் சடங்குகளில் பாடுவான். ஒரு வறண்ட ரொட்டிக்காக, அழுது கொண்டிருக்கும் உறவினர்களின் கால்களை முத்தமிடுவான்.

### தன் கையே தனக்குதவி:

உண்மைதான். ஆயின் ஒரு பிச்சைக்காரன், ஓரடி முன் வைத்தால், மற்றவர்கள் ஓரடி பின்வாங்குவார்கள்......பிச்சைக்காரனுடன் உறவு வைத்துக்கொள்ள யார்தான் விரும்புவார்கள்?

### நாங்கள் செய்வது என்ன:

கையில் காசில்லாத இந்த ஏழைகளில் சிலர், ஒவ்வொரு நாளும் எங்களிடமிருந்து பணவுதவி பெறுகின்றனர். ஒரு தொழிலைத் தொடங்க, வீடுகட்ட, புத்தகங்கள் வாங்க, சமுதாயத்தில் அவர்களும் மனிதர்களாய் தலைநிமிர்ந்து உலவ உதவுகிறோம்.

### புதுமையான பாங்கிங் முறை:

சமுதாயத்தில் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு உதவும் இத்தகைய தன்னிகரற்ற திட்டங்களை ஸ்டேட் பாங்கின் ஒரு விசேஷ அமைப்பு உருவாக்கித் தருகிறது.

நகர்ப்புறச் சேரிகள், பள்ளிகள், மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், துயரால் பாதிக்கப்பட்ட பகுதிகள், ஸ்டேட் பாங்கின் நேசக் கரம் எட்டாத இடமே இல்லை.

### பண்ணைகளும் விவசாயிகளும்:

விவசாய அபிவிருத்திக் கிளைகள் கொண்ட ஒரே பாங்க் இதுதான். விவசாயத்தின் அன்றாடத் தேவைகள், புதுமையான விவசாயத் திட்டங்கள் ஆகியவற்றுக்குப் பொருளுதவி செய்ய விசேஷ பாங்குகள் உண்டு.

### ஒவ்வொரு கனவையும் நனவாக்கும திட்டம்:

உங்கள் மகனை மேற்படிப்புக்கு வெளி நாடு அனுப்ப, தொல்லையற்ற ஓய்வுகால வாழ்வுக்கு, சொந்த வீடு கட்ட, காய்கறித் தோட்டம் அமைக்க, புத்தம் புதிதாக மின்னும் வாடகைக்கார் வாங்கிவிட, நேர்மையான வியாபாரத்திற்கு நேர்மையான முதலீடு செய்ய.....

### உலகிலேயே மிகப் பெருமளவு பாங்கிங் வசதி கொண்டது:

ஏறக்குறைய 5000 அலுவலகங்கள் கொண்ட ஸ்டேட் பாங்க், தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகப் பெருமளவு பொருளுதவி செய்கிறது. அதோடு சர்வதேச பாங்கிங் துறையில் பாரதத்தின் பிரதிநிதியாகப் பெரும்பங்கு வகிக்கிறது.

நாங்கள் வளர்கிறோம். அளவில் மட்டுமல்ல. எங்கள் ஈடுபாட்டிலும்தான்.

## ஸ்டேட் பாங்க்

நேசக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்

SB: 3955A

# படி! படி!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



எடுப்பு

நூலைப்படி—சங்கத்தமிழ்
நூலைப்படி—முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு

காலையிற் படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும்படி
நூலைப் படி!

அடிகள்

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர்கள் வாழ்வ தெப்படி?
நூலைப் படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ் நான்மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைப் படி!

அகப்பொருள் படி அதன்படி,
புறப்பொருள் படி நல்லபடி,
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என் சொற்படி
நூலைப் படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக் கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி
நூலைப் படி!

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி?
நூலைப் படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி
நூலைப் படி!

# இலக்கியத்தில் கல்வி



* கண்ணுடையர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

—திருவள்ளுவர்.

* எண்ணெழுத் திகழேல் !
இளமையிற் கல் !
கேள்வி முயல் !
நூல் பல கல்!

—ஆத்திசூடி.

* கைப்பொருள் தன்னின்
மெய்ப்பொருள் கல்வி !

—கொன்றைவேந்தன்.

* ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டா !

—உலகநீதி.

* கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே !

—வெற்றிவேற்கை.

* கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பால்உண் குருகில் தெளிந்து !

—நாலடியார்.

* இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு !

—ஏலாதி.

* கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே !

—திருமந்திரம்.

* கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—உற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார் !

—நீதிநெறி விளக்கம்.

* கற்றது ஒழுகு !
நீதி நூல் பயில் !
நூலினைப் பகுத்துணர் !
உலோகநூல் கற்றுணர் !
வானநூற் பயிற்சிகொள் !
வேதம் புதுமை செய் !

—பாரதி புதிய ஆத்திசூடி.

* ஓவியம் பயில் !
கல்லார் நலிவர் !
கேட்டு விடையிறு !
நுண்ணிதின் நுண்மை தேர் !

—பாவேந்தர் ஆத்திசூடி.



# தமிழ் நாட்டில் கல்லூரிக் கல்வி

புதிய கல்லூரிகள் திறப்பதிலும், பெருமளவில் அவற்றில் மாணவர்கள் சேர்வதிலும் கடந்த இருபது ஆண்டுகளாக வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வி வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் கவனம் செலுத்தும் எண்ணத்தோடு, 1965-ல் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்ட தனித்ததொரு கல்லூரிக் கல்வி இயக்ககம் உருவாக்கப்பட்டது. இன்றைய கணக்குப்படி கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் 235 கல்லூரிகள் உள்ளன; 1978-79 ஆம் கல்வியாண்டில் 2,06,051 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 1978-79-ல் கல்லூரிக் கல்விக்கான மொத்தச் செலவு ரூ. 18.67 கோடி.

தமிழ்நாட்டிலுள்ள 188 கலை அறிவியல் கல்லூரிகளில், 110 சென்னைப் பல்கலைக் கழகத்தோடும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தோடும், ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தோடும் இணைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 23 பயிற்சிக் கல்லூரிகளும், 16 கீழ்த்திசைக் கலைக் கல்லூரிகளும், 3 உடற்பயிற்சிக் கல்லூரிகளும், 2 இசைக் கல்லூரிகளும் ஒரு கிராம உயர் கல்வி நிலையமும், இரு சமுதாயப் பணிப் பள்ளிகளும் உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் ஒரு பயிற்சிக் கல்லூரி உள்ளது. மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் 62 பெண்களுக்கு மட்டுமே உள்ளவை. 51 கலைக் கல்லூரிகளும் 7 பயிற்சிக் கல்லூரிகளும் அரசால் நடத்தப்படுபவை. அரசு மானியம் பெறும் தனியார் கல்லூரிகள் மாநிலத்தில் மொத்தமுள்ள கல்லூரிகளில் 75 விழுக்காடாக அமையும். மாநிலத்தில் 10 கல்லூரிகளுக்கு, தன்னுரிமைத் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

**புதிய பல்கலைக் கழகங்களின் தேவை:**

ஒரு பல்கலைக் கழகத்திற்கு 30 அல்லது 40 கல்லூரிகளுக்கு மேல் இருத்தலாகாது என்ற நிலையில், சென்னைப் பல்கலைக் கழகத்துடன் 110 கல்லூரிகள் இணைந்துள்ளன. எனவே, சென்னைப் பல்கலைக் கழகத்தின் பணிப் பளுவைக் குறைக்கும் எண்ணத்துடன் மேலும் இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக் கழகப் பண உதவிக் குழுவின் இசைவினைப் பெற்றபின், திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் இருக்கும் விரிவு மையங்கள் கல்லூரிகளை இணைக்கும் தகுதியுடைய பல்கலைக் கழகங்களாக உயர்த்தப்படும். இப்புதிய பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள வட்டாரங்களுக்குத் தேவையான புதிய பாடத்துறைகளும் ஆராய்ச்சித் திட்டங்களும் வளர வழி வகுக்கும்.

**கல்லூரிகளின் வளர்ச்சி:**

பெரு நகரங்களில் மையங்கொண்டுள்ள பல கல்லூரிகளில் சில பாடத்துறைகளுக்கு, மாணவர் மிகுந்த எண்ணிக்கையில் சேர விழைந்தார்களென்றாலும் மாநில முழுமையிலுமான கல்லூரிகளில் பெரும் எண்ணிக்கையில் இடங்கள் காலியாய் இருந்தமை கண்கூடு. மாநிலத்தில், கல்லூரிக் கல்வியின் தேவையைச் சரிகட்ட இப்போதுள்ள கல்லூரிகளே போதுமானவை எனும் உண்மையை உணர்த்தும் குறிப்பாகவே இதனைக் கொள்ளலாம். எனவே, சிறப்புச் சூழ்நிலை ஏதேனும் ஏற்பட்டாலே தவிர புதுக் கல்லூரிகளைத் திறக்க வேண்டிய தேவையிராது. கல்லூரிக் கல்வியின் கடந்தகால 'எண்ணிக்கைப் பெருக்கம்' பெற்ற வலிவினை, இக்காலத் 'தரமேம்பாடு' பெறும்படியாக மாற்றப்பட்டுள்ளது.

10+2+3 கல்விமுறை அமல் படுத்தப்படுவதால், நம் மாநிலத்திலுள்ள கலைக்கல்லூரிகளில் 1979-80லிருந்து புகுமுக வகுப்புகள் கைவிடப்படுகின்றன. இதனால் கலைக் கல்லூரிகளின் மாணவர் எண்ணிக்கை குறையும். இப்போது வகுப்பறைகளுக்கும் பிறவற்றிற்கும் இடப்பற்றாக் குறை உள்ளது. புகுமுக வகுப்பைக் கைவிட்ட பிறகு இருக்கின்ற இட வசதிகளை ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றுப் பயனடைவர். பெரும்பாலான கல்லூரிகள் புதிய பாடத்துறைகளைத் தொடங்க, மற்ற கல்லூரிகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மேலான வசதிகளைச் செய்திடும்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியால் கல்லூரி

**திருமதி ஸ்டெல்லா சௌந்தரராஜ்**
**இயக்குநர் : கல்லூரிக் கல்வி**



களின் தரமேம்பாட்டுப் பெருக்கமும் ஏற்பட்டுள்ளது. அரசு கல்லூரிகளின் வளர்ச்சிக்கு மாநில அரசு 'இணை நிதி'கள் வழங்கியுள்ளது. அரசு கல்லூரி, தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழகப் பண உதவிக் குழுவின் 'பல்கலைக் கழகக் கலையியற்குழு மேம்பாட்டுத் திட்டத்தை' அமல்படுத்த அரசு இசைந்துள்ளது. 'பல்கலைக் கழகக் கலையியற் குழு மேம்பாட்டுத் திட்டத்தின்' அடிப்படையில் ஆசிரியர்கள் எம்ஃபில், பிஎச்.டி. பட்டம் பெற அனுப்பப்படுகின்றனர். நூலகங்கள், ஆய்வுக் கூடங்கள், கல்லூரிகளில் பெற்றுள்ள வளர்ச்சிகளே, தரமேம்பாட்டுக்கான வேறு கூறுகளாகும்.

**கல்லூரி முதல்வர்களின் கருத்தரங்கு:**

தற்காலப் புதிய முறைக் கல்வித் திட்டத்தின் ஆளுமைபற்றிக் கல்லூரி முதல்வர்களுக்கு வேண்டிய பயிற்சி தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, புதுடெல்லி கல்வித்திட்ட ஆளுநர் தேசிய ஆசிரியர் கல்லூரியின் ஒத்துழைப்போடு, தமிழ்நாட்டிலுள்ள கல்லூரி முதல்வர்களுக்குக் கல்லூரி கல்வி இயக்குநர் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்தார். 1978 அக்டோபர் - நவம்பரில், இக்கருத்தரங்குகள் 7 மையங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு மையத்திலும் மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அரசு, தனியார் கல்லூரி முதல்வர்கள் பங்கேற்றனர். கருத்தரங்குகளில் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவுகளும், கலந்துரையாடல்களும் உண்மையிலேயே பயன்தரக் கூடியவை என்றும் இக்கருத்தரங்கில் பரிந்துரைக்கப்பட்ட வழிவகையிலேயே மாற்றியமைக்கப்பட்ட வகுப்புக்களை வைத்துக் கொண்டு கல்லூரிக்கான திட்டங்களையும் வளர்ச்சிக்கான வழிகளையும் காண முடியும் என்றும் கல்லூரி முதல்வர்கள் கருதினர்.

ஆங்கில மொழித் திறமையைச் செறிவோடு கற்பிக்க, இளைய துணைப் பேராசிரியர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் ஒரு புத்தொளிப் பயிற்சி தரப்பட்டது. குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று என்னவென்றால் அந்தக் கல்லூரி இணையங்களைச் சார்ந்துள்ள மேல் நிலைப் பள்ளிகளின் பல ஆசிரியர்கள் அந்தத் திட்டத்தால் பயன் பெற்றதாகும்.

சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் பிரிவின் ஒத்துழைப்போடும் பல்கலைக் கழகமானியக் குழுவின் உதவியோடும், 3.1.79 முதல் 16.1.79 முடிய 'நுண்ணி

**அறியாமையைவிடக் கேவலமான அடிமைத்தனம் வேறு எதுவுமில்லை; அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளின் பெயர் சுதந்திரம், விடுதலை, உரிமை எல்பவைகளாகும்!**

**—இங்கர்சால்.**

தின் கற்பித்தல்' என்பதுபற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. மாநிலமெங்கணுமுள்ள பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து 27 ஆசிரியர்கள் கலந்துகொண்டு இந்தப் புதிய கருத்தால் பலன் பெற்றனர். ஸ்காட்லாந்தில் உள்ள ஸ்டர்லிங் பல்கலைக் கழகத்திற்கும் இயக்ககத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒரு மூன்றாண்டுத் திட்டத்தின் தொடக்கமே இக்கருத்தரங்காகும். பயிற்சிக் கல்லூரிகளில் திறம்பெற்ற ஆசிரியப் பயிற்சி முறைகள் எல்லாப் பாடங்களிலும் முயற்சிக்கப்பட்டு வருகின்றன.

**பணிப் பாதுகாப்பு**

31.1.1977-ல் பணியிலிருந் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணி பாதுகாப்பு வழங்கி(1978 மே) தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தது. 1979-80 முதல் கல்லூரிகளிலிருந்து புகுமுக வகுப்புகள் கைவிடப்படுவதால், 31.3.77க்குப் பிறகு பணியில்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் பணியின்றி அனுப்பப்படுவர் என்றதோர் ஐயம் கல்லூரி ஆசிரியர்களிடமிருந்தது. கல்லூரிகளில் நிலையான இடங்களில் 26.2.1979 அன்று தற்காலிகமாகப் பணிபுரிந்த ஆசிரியர்களும் பணியின்றி அனுப்பப்படமாட்டார் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

முறையான கல்லூரியில் சேர இயலாதோர்க்குக் கல்வியைத் தொடர்ந்திட வசதிகள் உள்ளன. மாலை வகுப்புகள் பல கல்லூரிகளில் மாநிலத்தில் நடத்தப்படுகின்றன. மதுரை- - காமராஜ் பல்கலைக் கழகம் பல்வேறு துறைகளுக்குரிய பாடங்களை அஞ்சல் வழியாகப் புகட்டுகின்றன. மேலும் அது, திறந்தவெளிப்பல்கலைக் கழகம் என்ட தன் வழியாகப் படிப்பை இடையில் நிறுத்திய இளைஞன் ஒருவன் கல்வியைத் தொடர்ந்து ஒரு பட்டத்தைப் பெறும் வாய்ப்பையும் தந்துள்ளது. அடுத்த கல்வியாண்டு (1979-80) முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அஞ்சல் வழியாகப் பாடங்களை வழங்கும்.

**கல்லூரிகளில் தேசிய மாணவர் படை:**

தேசிய மாணவர் படை கல்லூரிகளில் சிறப்பான பங்குவகிக்கிறது. முறையான உடற்பயிற்சி போன்ற இராணுவப் பயிற்சி, கருவிப் பயிற்சி, கருவியில்லாப் போர்ப் பயிற்சி முதலியன மட்டுமின்றிக் குருதிக் கொடை, நிதியும் உடலுழைப்பும் நல்கும் வெள்ள நிவாரணப் பணி, சாலை இடுதல், போக்குவரத்தைக் கட்டுடுப்படுத்தல், கோயில் கலைக் கூடங்கள் புதுப்பித்தல், மருத்துவ மனைகளுக்குச் சென்று வயோதிகர்களுக்கும் ஊனமுற்றோருக்கும் உதவுதல் போன்ற சமுதாயப் பணித் திட்டங்களில் மனத்தை ஈடுபடச் செய்து இளைஞர் உள்ளத்தில் மனிதாபிமான உணர்ச்சிக்கு வித்திடவும் செய்கிறது.

1977-ல் கொண்டு வரப்பட்ட 'வீரசாதனைப் பயிற்சித் திட்டம்' உள்ள உரத்தையும், உடல்வலிமையையும் மேலோங்கச் செய்துள்ளது. சுமைதாங்கிச் செல்லல், மலை ஏறுதல், சைக்கிள் ஓட்டுதல், படகு செலுத்துதலும் இவ்வாண்டு இராணி மேரி கல்லூரி மாணவப் படையினருக்கான 'கடல் உலா'வும் இதில் அடங்கும்.

**தேசியச் சமுதாய நலத்திட்டமும் சமுதாயப் பணித் திட்டமும்:**

சமுதாயப் பணித்திட்டம் கொண்டு வரப்பட்டதால், அடித்தளத்தில் உள்ளவர்களையும், ஏழைகளையும் உயர்த்திடவேண்டும் என்ற மாணவர்களின் கூர்மையான ஆவல் வெளிப்படுகின்றது. திறமை மிக்க ஆர்வமிகுந்த வழிகாட்டலும் தலைமையும் கொண்ட தங்களின் ஆசிரியர்களின் கீழ்ப் பலவிடங்களிலும் மாணவச் சமுதாயம் சுறுசுறுப்புடன் துயர்துடைப்புப் பணிகளில் பங்கேற்ற காரணத்தால் தான் குடிசைப் பகுதிகள் பொலிவுறுகின்றன.

தேசிய சமூக நலத்திட்டம் மாநிலத்தினுடைய தேசிய வளர்ச்சியெனும் குறிக்கோளுக்காகப் பாடுபட்டு வருகிறது. கல்விப் படிப்பைத் தொடருகின்றபோதே, சமுதாயப் பண்பாட்டு மாற்றத்தில் தீவிரப் பங்கேற்றுப் பணியாற்றுமாறு பொதுமக்களைத் தயார்செய்ய, அறியாமைக்கும் வறுமைக்கும் எதிராகத் தெளிவாகத் திட்டமிட்டுத் தளராது போராடும் அரசுக்கு உதவுவதான மாபெரும் பணியில் மாணவர்கள் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேசிய நலத்திட்டம் சமுதாயப்

பணித்திட்டம் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க பணி, கல்லூரி மையங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கிராமங்களில் நடைபெற்ற 'கிராமப் புனரமைப்பு' பத்து நாள் இளைஞர் முகாம் ஆகும். மாணவர்கள் தங்களின் தனித்தநிலையினின்று இறங்கி ஏழ்மையில் தவிக்கும் மக்களோடு கூடி எளிதாகப் பழகி, அவர்களின் பிரச்னைகளை அறிந்து கொண்டு, ஒரு மேலான இந்தியாவை உருவாக்க உதவுகின்றனர். மாற்றத்திற்கான ஒரு விழிப்புணர்ச்சியை அவர்கள் உருவாக்குகிறார்கள்.

தேசிய சமூக நலத்திட்டம் சமுதாயப் பணித்திட்டம் ஆகியவற்றில் இடுபாடுடைய தொண்டர்கள் இப்போது 'முதியோர் கல்வி' என்ற மாபெரும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இத்தகைய வளர்ச்சித் திட்டங்களினாலும், செம்மையாக உருவாக்கப்பட்ட கல்வித் திட்டங்களாலும் தமிழ்நாட்டுக் கல்லூரிக் கல்வியின் எதிர்காலம் உண்மையிலேயே ஒளிரும். இவ்வனைத்துச் சமுதாயப் பயன்தரும், பலன்தரு கல்வித் திட்டங்களால், பயனடைடையும் தமிழ்நாட்டு இளைய ஆடவரும் மகளிரும் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பெறுவர்.

ஆசிரியர்கள், இயற்கையாய், அவர்களைப் பற்றிப் பெருமைப் படுவர். புகுமுக வகுப்பினைக் கைவிடுத்தலால் கல்லூரிக் கல்வியில் இருந்து வந்த தேவையற்ற சுமை குறிப்பிடத் தக்க அளவிற்குக் குறைவது உறுதி. இதன் பயனாய்க் கற்பித்தலில் தர மேம்பாட்டையும் ஆராய்ச்சியையும் உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் புதுமையையும் கொண்டுவர முடியும். காளையரும் கன்னியரும் இன்றைய நிலையிலிருந்து மேம்பட்டு மேலான எதிர்காலத்தை உறுதியாய்க் காண்பர்!

**ஆசிரியர்களுக்கான மாற்றுப்பணி விரிவாக்கம்.**

அடுத்த ஆண்டு புகுமுக வகுப்பு கைவிடப்படுவதால் தேவைக்கு மேல் உள்ளவர்களாகும் கல்லூரி ஆசிரியர்களை மாற்றுப் பணியில் அமர்த்திக் கொள்வதற்கான ஒரு திட்டம் செயல்படுத்துவதற்குத் தயாராக உள்ளது. மிகுதியாயுள்ள ஆசிரியர்களில் சிலருக்கு வேலைவாய்ப்பளிக்கத் தொடர்புடைய பல்கலைக் கழகத்தின் ஆலோசனையுடன் சில கல்லூரிகளில் முதற்பாடம் இணைப்பாடம் ஆகிய புதிய பாடத்துறைகள் தொடங்கப் பெறும். மிகுதியாக உளள ஆசிரியர்கள் எம்ஃபில் படிக்கவும் மாநில அரசால் அனுப்பப் பெறுவர். சமுதாயப் பணித் திட்ட வேலையும் கல்லூரி இணையங்களின் தொடர்புத் திட்டங்களும் எஞ்சிய ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பினைத் தரும்.

**பல்கலைக் கழக மானியக்குழு ஊதிய வீதங்கள் செயல்படுத்தல் :**

கல்லூரி ஆசிரியர்களுக்கு 1.1.1977 முதல் பணப்பயன் பெறும் வகையில், 1.1.1977 லிருந்து பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய வீதங்களை மாநில அரசு செயல்படுத்தியுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் இப்போது பல்கலைக் கழக மானியக் குழு ஊதியம் பெற்று வருகின்றனர். கலைக் கல்லூரிகளில் பேராசிரியர்கள் ஆற்றிவரும் சீரிய பணியை அறிந்தேற்று, மாநில அரசு அவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தின் தொடக்கத்தை ரூ. 1,100-ஆக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்லூரி முதல்வர்கள் அனைவரும் ரூ. 1,200-1900 ஊதிய வீதம் பெறச் செய்யப்பட்டது. மூன்றாம் ஊதியக் குழு பரிந்துரைத்த, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, ஆகியவற்றின் பயன்கள் கல்லூரியில் பணிபுரிவோர்க்கும் பரிந்துரைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளால் மாநிலத்தில் கல்லூரி ஆசிரியர்கள் கணிசமான கூடுதலான மொத்த வருமானத்தைப் பெற முடிந்தது.

**பயிற்றுநர் விளக்குநர் பதவி நிலை உயர்த்துதல் :**

கல்லூரிகளிலுள்ள பயிற்றுநர் விளக்குநர் இனத்தை நீக்குவதென அரசு முடிவெடுத்துவிட்டது. தம்பாடத்தில் முதுநிலைப் பட்டம் பெற்ற, தகுதிவாய்ந்த மூன்றாண்டு பணிபுரிந்த பயிற்றுநர்களும், விளக்குநர்களும் 1.12.77 முதல் துணைப் பேராசிரியர்களாகப் பதவி நிலை உயர்வு பெற்றனர். இதுவரை 415 அரசுக்கல்லூரி ஆசிரியர்களும், 916 உதவிபெறும்கல்லூரி ஆசிரியர்களும் உயர்த்தப் பட்டுள்ளனர்.

**உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கான விடுப்பும் ஓய்வுக்கால பயன்களும் :**

உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு இதுவரை கிட்டாதிருந்த விடுப்பு, ஓய்வுக் காலப் பயன்கள் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளன. தாராளமாக்கப்பட்ட ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் அவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

**கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியரல்லாதார் :**

உதவிபெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் போலவே, ஆசிரியரல்லாதாருக்கும் பணிப்பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. 1.4.1979 முதல் ஊதியமும் படிகளும் மூன்றாம்



ஊதியக் குழுவின் பரிந்துரையின் படி திருத்தியமைக்கப்பட்டுள்ளன. ஐந்து ஆண்டுப் பணி நிறைந்த சார்புநிலைப் பணியாளர்களின் பணிகள் 1.1.79 முதல் நிலைப்படுத்தப்பட்டன. விடுப்பு ஓய்வுகாலப் பலன்கள் ஆசிரியரல்லார்க்கும் நீட்டிக்கப்பட்டன.

**உதவிபெறும் கல்லூரிகளுக்கு நிதி வழங்கல் :**

உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதால் ஏற்படும் பணப்பற்றாக் குறையில் 100 விழுக்காடு 1.6.77 முதல் ஏற்றுக் கொள்வதற்கு அரசு முன்வந்துள்ளது. ஊதியங்களைக் குறித்த காலத்தில் முழுமையாகத் தருவதற்கு வசதியாக உதவிபெறும் கல்லூரிகளின் நிருவாகங்களுக்கு இவ்வாண்டில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் முன் நிதிகள் தடங்கலின்றித் தரப்பட்டன. கணக்குத் தணிக்கை முடிந்ததும் ஊதியச் சார்பில்லா நிதிகளும் விடுவிக்கப்பட்டன. உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம் வழங்கலுக்கான ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது.

**மாணவர்க்கான வசதிகள் :**

மாணவர்களின் வசதிகளைப் பெருக்குவதன் தேவையை உணர்ந்து சிற்றுண்டிச்சாலைகள், சைக்கிள் கொட்டகை, தண்ணீர் வழங்குதல், சுகாதாரச் சூழல் முதலிய மாணவர்க்கான வசதிகளைப் பெருக்கிட அரசு கல்லூரிகளுக்கும் உதவிபெறும் கல்லூரிகளுக்கும் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசு கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களின் மேம்பாட்டுக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏழைமாணவர்கள் பாடப் புத்தகங்களை இரவலாகப் பெற்று ஆண்டு முழுமையும் பயன்படுத்திக்கொள்ளத்தக்க வகையில் நூலகங்களில் புத்தக வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன. நேரிய விலையில் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள் முதலியன விற்கும் மாணவர் கூட்டுறவுக் கடைகள், பல கல்லூரிகளில் உள்ளன. மாணவர் இல்லங்களில் மாணவர்களுக்கு வசதிகளைப் பெருக்க வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**மாணவர்க்கான கட்டணச் சலுகைகளும், படிப்பு உதவித்தொகைகளும் :**

வருமான எல்லை இன்றித் தாழ்த்தப்பட்ட, மலைச்சாதியைச் சார்ந்த மாணவர்களுக்கு முழுக்கட்டணச் சலுகை உண்டு. பெற்றோரின் ஆண்டு வருவாய் ரூ 1,500-க்கு மிகாமல் இருந்தால் மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் முழுக் கட்டணச் சலுகை உண்டு. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1,500க்கும் கீழிருந்தால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், மாணவ மகளிர்க்கும் அரைக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட - மலைச்சாதி, பிற்பட்ட வகுப்பு மாணவர்கள், மாநில அரசின் சமூக நலத்துறை வழங்கும் படிப்பு உதவித் தொகைகளைப் பெறத் தகுதியுள்ளவராவர். தேசிய படிப்பு உதவித் தொகை, பள்ளியாசிரியர் குழந்தைகளுக்கான தேசிய படிப்பு உதவித் தொகை, தேசிய கடன் படிப்பு உதவித்தொகை ஆகியவையும், தம் பெற்றோர்க்கான ஆண்டு வருமானம் ரூ. 6,000க்கு மிகாமல் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசியல் தியாகிகள், இராணுவப் பணியாளர், மறைந்த அரசு ஊழியர் ஆகியோரின் சந்ததியினருக்கும் சலுகைகளும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன. தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகைகளை மாநில அரசு அளிக்கிறது.

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மிகாமல் உள்ள தகுதி வாய்ந்த மாணவர்களுக்குப் புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு ஆகிய கல்வி நிலைகளில் மாநிலப் படிப்பு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. பள்ளி இறுதித் தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண்ணுக்கு மேலும் பெற்றுப் புகுமுக வகுப்பிலும், புகுமுக வகுப்புத் தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண்ணுக்கு மேலும் பெற்றுப் பட்ட வகுப்பில் சேரும் தாழ்த்தப்பட்ட மலைச்சாதி மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கிய சிறப்பு நிதியாக ரூ 300 கொடுக்கப்படுகிறது.

**தனிப்பயிற்சித் திட்டம் :**

தாழ்த்தப்பட்ட - மலைச்சாதியைச் சார்ந்த தகுதி மிக்க மாணவர்கள் தங்களின் ஆற்றலை வளர்த்துக் கொள்ள தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1978-79-ல் இவ்வகுப்புக்களை நான்கு மையங்களில் நடத்துவதற்கு ஏறக்குறைய ரூ 58,000 செலவிடப்பட்டுள்ளது.

**பிற திட்டங்கள் :**

மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஆய்வுக்கூட வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு கல்லூரி இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 10 முதல் 15கிலோ மீட்டர் தூரத்தில் சுற்றிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளின் தேவைக்கு உதவிட ஒவ்வொரு

## கல்விக்கே அதிகத் தொகை !

**தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கையில் கல்விக்கான நிதி ஒதுக்கம் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.**

**கல்விக்காக 1979-80—ஆம் ஆண்டில் ரூபாய் 209 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1979-80—ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 849 கோடியில் 25 விழுக்காடாகும்.**

**வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.**

**கல்வி மானியத்தின்கீழ் 1975-76-ல் ரூபாய் 123 கோடியும், 1976-77-ல் 143 கோடியும், 1977-78-ல் ரூபாய் 163 கோடியும், செலவாயின.**

**1979-80-க்கான திருத்த மதிப்பீடு ரூபாய் 191 கோடியாகும். கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதை இது காட்டும்.**

** ** ** ** **

**கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத் தான் ஆகிறது. 1979-80-ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 209 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூபாய் 160 கோடியாகும்.**



கல்லூரியும் எதிர்பார்க்கப்படுகிறது. கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் - ஆசிரியரல்லாதார், கருவிகள் ஆய்வுக்கூடத்திலுள்ள வசதி ஆகியவற்றைக் கல்லூரி இணையங்கள் திறம்பட பயன்படுத்திக் கொள்ளும்.

| மாநிலம் | தொழிற் கல்வியில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| தமிழ்நாடு | 24,400 |
| குஜராத் | 3,516 |
| கர்நாடகம் | 2,412 |
| மேற்குவங்காளம் | 2,300 |
| மகாராஷ்டிரம் | 2,400 |
| டில்லி | 1,180 |

**''பயிலும்போதே ஊதியம் ஈட்டுதல்''- தொழிற்பயிற்சி-சட்டாம்பிள்ளைகள் திட்டம்.**

தலைமைக்கான தகுதிகளை வளர்க்கும் நோக்கத்துடன், சட்டாம்பிள்ளை முறை மீண்டும் மாணவரிடையே கொண்டு வரப்பட்டுள்ளது. அது புகழ்பெற்ற தொன்மையான முறை என்பதோடு ''சென்னைத் திட்டம்'' என்ற பெயரில் முன்னர் ஆங்கிலேயரும் அதைப் பார்த்துப் பின்பற்றிய சிறப்புடையதாகும். இத்திட்டத்தின் கீழ், பகுதி நேர ஆசிரியர்களுக்கு உதவி புரிய பாட வகுப்பு ஒன்றுக்கு ஒருமாணவர் சட்டாம்பிள்ளையாய் நியமிக்கப்படுகிறார். இவருக்கு வருடத்தில் 10 மாதங்களுக்கு, மாதம் ரூ20 -வீதம் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த ஊதியம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு இந்த ஊக்கத் தொகை பேருதவியாக உள்ளது. அறிவியல் சோதனைக் கூடங்களுக்கும் இத் திட்டத்தை விரிவாக்குவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

**தொழிற்சாலைகளுடன் தொடர்:**

தொழிற்பயிற்சி குறித்து இந்திய அரசின் கல்வித்துறை செயலாளர் திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவின் பரிந்துரைக்கிணங்க, பள்ளிகளுக்கு அருகாமையில் உள்ள தொழிற்சாலைகள், வங்கிகள் பண்ணைகள், பணி நிறுவனங்கள் ஆகியவற்றுடன்தொழிற் பயிற்சிப் பாடக் குறைகள் இணைக்கப்பட்டுள்ளன.

தொழில், வணிக நிறுவனங்களுடன் தொழிற் பயிற்சிக் கல்வியை இணைப்பது குறித்து, பெருந்தொழிலதிபர்கள், வர்த்தகச் சபைத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியவர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டது.

தொழிற்சாலை அலுவலர்களுடன் கல்வித்துறை அலுவலர்கள் இது பற்றிக்கொண்ட தொடர்பு பயனுள்ளதாக அமைந்தது. கல்வி அமைச்சர் சென்னையில் உள்ள அனைத்து வர்த்தகச் சபை அலுவலருடனும் கலந்துரையாடினார். கல்வித்துறைக்கும், தொழில் துறைக்கும் இடையே பயனுள்ள இணைப்புப் பாலம் உருவாகியுள்ளது.

**மாவட்ட தொழில் முறைப் பயிற்சிக் குழு:**

வருவாய் மாவட்டம் ஒவ்வொன்றிலும் தொழில் முறைப் பயிற்சி கல்வி குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், முதன்மைக் கல்வி அதிகாரியை அமைப்பாளராகவும் கொண்ட மாவட்டக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. மருத்துவம், பொது சுகாதாரம், தொழில் வணிகம், வேலை வாய்ப்புப் பயிற்சி ஆகிய துறைகளில் உள்ள மாவட்ட அதிகாரிகள் குழுவின் உறுப்பினர்களாக இருந்து குழுவிற்கு வழி காட்டுகின்றனர். இம்முறையின் மூலமாகக் கல்வியுடன் வேலையினையும் இணைக்கும் நோக்கம் நிறைவேறி வருகிறது. இதுவரையில் இந்தத் துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மனநிறைவடையலாம். ஆனால், கல்வியை வேலையோடு இணைக்கும் முறையை இன்னும் உறுதிபடுத்த வேண்டியுள்ளது. பொது நிறுவனங்களை முதன் முறையாகப் பள்ளிகளுக்குக் கொண்டு செல்லும் இப்பணி அதாவது இன்னும் சரியாகச் சொல்லப்போனால் பள்ளி மாணவர்களை அந்நிறுவனங்களுக்குக் கொண்டு செல்லும் பணி எளிதானதல்ல.

**தொழில்களை நேரடியாகத் தாமே செய்து கற்றல்**

**மாதிரி ஆய்வுகள்**

தொழில்களை நேரடியாக மாணவர்கள் தாமே செய்து பயிற்சி பெறச் செய்வதில் அரசு முனைப்பாக உள்ளது. அந்தந்த வேலையைச் செய்து நடைமுறைப் பயிற்சி பெறுவது என்பது தொழிற் பயிற்சித் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். சான்றாக, ''செவிலியர் பணி'' யைத் தமது பாடமாக எடுத்துள்ள மாணவ மாணவியர் அருகாமையில் உள்ள மருந்தகங்களில் அல்லது மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு நடக்கும் மருத்துவப் பணிகளை நேரடியாகக் காணும் வாய்ப்பைப் பெறுகின்றனர். கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகள் ஊக்கமளிப்பவையாக உள்ளன.

அ. அவ்வை இல்லம் மேல்நிலைப்பள்ளி, அடையாறு சென்னை. இப்பள்ளியில் மாணவர்கள் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர் செவிலியர் பணியின் அடிப்படை வழிமுறைகள் கற்றுத் தரப்படுகின்றன.

ஆ. எம். என். வி. ஜெயராஜ் நாடார் மேல்நிலைப்பள்ளி, நாகமலை. சிறு பண்ணை நிருவாகம்என்னும் தொழிற்பாடம் இங்கு நடத்தப்படுகின்றது. மாணவர்க

ளுக்கு இப் பள்ளியின் பண்ணையில் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலுள்ள உயிரியல், தாவரயியல் துறைகள், திருநகரிலுள்ள மண்வளச் சோதனை ஆய்வுக்கூடம், பசுமலையிலுள்ள விதைப் பண்ணை, ஆகியவை மாணவர்களுக்கு பண்ணைப் பயிற்சி அளிப்பதற்குப் பேருதவியாக உள்ளன..

இ. சர்வஜன மேல்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர் இப்பள்ளி, மிக அதிகமான தொழிற்பாடங்களை (6 பல்வேறு தொழில் பாடங்களை) நடத்தி வருகிறது. இங்கு மாணவர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுவதால், இந்தப் பாட வகுப்பில் பயிலும் 180 மாணவர்களில் எவரும் பாதியில் விட்டுச் செல்வதில்லை.

ஈ. வெஸ்லி மேல் நிலைப் பள்ளி, சென்னை. இப்பள்ளியில் தொழிற் பாடங்கள் மட்டுமே நடத்தப்படுகின்றன. தொழிற் பயிற்சிப் பாடங்களில் உள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாக இது அமைந்துள்ளது.

**தொழில் கல்வியில் பணிப்பயிற்சி:**

**தலைமை ஆசிரியர்களுக்கு**

நல்ல மாணவர்களைப் பள்ளிகளில் உருவாக்குவதில் தலைமை ஆசிரியரின் நிருவாகத் திறனுக்கு முக்கியமான பங்கு உண்டு. இதனைக் கருத்தில் கொண்டு, தொழிற் பயிற்சி வகுப்புகளைக் கொண்டுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர்களுக்கு ஆறு மாவட்டங்களில் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கான கோடைக்கால வகுப்பு**

ஆசிரியர்களுக்குத் தொழிற் பயிற்சியில் மறு பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் புது டில்லியிலுள்ள கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி தேசிய நிறுவனம் ஆறு கோடைக் காலப் பயிற்சி வகுப்புகளை நடத்த முன்வந்துள்ளது. இப்பயிற்சிக் கால அளவு 21 நாட்கள். அந்நிறுவனத்தில் ''கல்வியைத் தொழில் மயமாக்குவதற்கான'' துறையின் பேராசிரியரும் தலைவருமான திரு சி.வி. கோவிந்தராவ் அவர்களின் முயற்சியாலும், ஒத்துழைப்புடனும்



இந்த வகுப்புகள் கோடை விடுமுறையின் போது நடத்தப்படும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்துறை அலுவலர்கள் ஆகியோரின் சிறந்த ஒத்துழைப்புடன், முக்கியமான இந்தக் கல்விச் சீர்திருத்தம் தமிழ்நாட்டில் வெற்றி பெறுவது உறுதி என்பது திண்ணம். 10+2+3 என்ற ஒரே மாதிரியான கல்வி அமைப்பு நாட்டு ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வலுபடுத்தும். இந்தியாவின் பல மாநிலங்களிலும் வழங்கப்படும் சான்றிதழ்களும் சமமானவையாகிவிடுமாதலால் மாணவரும் பெற்றோரும் ஒரு மாநிலத்தினின்று மற்றொன்றிற்குச்செல்ல இந்த அமைப்பு உதவும். படித்த இளைஞர்களிடையே தன்னம்பிக்கையையும் மனநிறைவையும், மகிழ்ச்சியையும் இப்புதிய திட்டம் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**அரசுத் தேர்வுகள்:**

தற்கால நிலைக்கேற்ப, தேர்வு முறையில் சில சீர்திருத்தங்கள்



செய்யப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**அ. பகுதி முறைத் தேர்வு:**

மேல் வகுப்பில் சேருவதற்குத் தகுதி பெற வேண்டுமானால், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஒரே தடவையில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை முன்பு இருந்தது. இப்பொழுது அதை மாற்றி, பகுதி முறைத் தேர்வு முறையை அரசு அமலுக்கு கொண்டு வந்துள்ளது. இம்முறையில், ஒரு மாணவன், தான் தவறியுள்ள பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி அதில் தேறினால்போதும், இது, தமிழக அரசு கல்வித்துறையில் கொணர்ந்துள்ள ஒரு முதன்மைவாய்ந்த சீர்திருத்தமாகும். இதனால் நலிந்த பிரிவைச் சார்ந்த மாணவர்கள் பெரிதும் பயன் பெறுவர் என்பது திண்ணம்.

**ஆ. அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் பள்ளித் தேர்வு:**

**(Open School System)**

14 வயது நிரம்பியவர்கள் எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வை எழுதலாம். ஆங்கிலத்துடன் எட்டாம்வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற 18 வயது நிரம்பியவர்கள், எஸ்.எஸ்.எல்.சி தேர்வையும் தனிப்பட்ட முறையில் எழுத அனுமதிக்கப்படுவர். முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்களின் நன்மைக்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சீர்திருத்தங்களால் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது.



# தமிழகத்தில் பள்ளிக் கல்வி


**டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம்**

**பள்ளிக் கல்வி இயக்குநர்**


**பி**றவிகளுள் மிகச்சிறந்த பிறவி மனிதப்பிறவியேயாகும். கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியை மாண்புறச்செய்வது கல்வியேயெனில் அது மிகையாகாது.

*அறம் பொருள் இன்பமும்*
*வீடும் பயக்கும்;*
*புறங்கடை நல்லிசையும்*
*நாட்டும்;- உறுங்கவலொன்*
*நுற்றுழியும் கைகொடுக்கும்;*
*கல்வியின் ஊங்கில்லை*
*சிற்றுயிர்க் குற்றதுணை.*

என்று நீதி நெறி விளக்கம், கல்வியின் பயனைப்பற்றிப் பேசுகின்றது. ஒருவனுக்கு நிலையான செல்வமாக அமைவது கல்வியேயாகும். இன்றைய குழந்தையை எதிர்காலத்தில் நல்ல குடிமகனாக வாழச் செய்வது கல்வியேயாகும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த கல்வியை நல்குவது, அனைவரது கடமையாகும். எனவேதான், நம்முடைய அரசு இலவசமாகக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக நம்முடைய அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அரசின் கருணைமிக்க இந்த ஏற்பாட்டினால், நலிந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகளும் கல்வி அறிவு பெற்று சமுதாயத்தில் சிறப்புற்று வாழ, வழி ஏற்படுவது திண்ணம். இதனால் நாட்டின் நிலை உயரும்.

பள்ளிக் கல்வியின் இன்றியமையாமையையுணர்ந்த நம் அரசு, கல்விச் செலவில் பெரும் பகுதியைப் பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ளது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். 1979-80ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 209 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூபாய் 160 கோடியாகும். தமிழ்நாட்டில் மொத்தம் 36,238 பள்ளிகள் உள்ளன. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 27,425; உயர் தொடக்கப்பள்ளிகள் 5,705; உயர் நிலைப்பள்ளிகள் 3,108 எனத் தொகுத்துக்கூறலாம்.

இந்த உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கையில் 912 மேல் நிலைப்பள்ளிகள் அடங்கும். மேற்குறித்த பள்ளிகள் அனைத்திலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை $2\frac{1}{2}$ இலட்சம் ஆகும். கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 85.43 இலட்சமாகவுள்ளது.

**தொடக்கக் கல்வி:**

6-11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94 விழுக்காட்டினரும், 11-14 வயது தொகுதிச் சிறுவரில் 58 விழுக்காட்டினரும் இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1978-79 ஆம் ஆண்டில் இருந்த 33,130 தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 67.46 இலட்சமாகும். ஆசிரியர் மாணவர் விகிதம் 1:37 ஆகும். இப்பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,81,887 ஆகும்.

தொடக்கப்பள்ளியில் சேரும் மாணவ, மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்று விடும் நிலையினை மாற்ற பலநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிடைத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து, முதல் வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5 ஆம் வகுப்புவரை தொடர்ந்து படிக்கின்றனர் என்றும், மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்று விடுகின்றனர் என்றும் அறிகின்றோம். தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத்திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ, மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய உதவுகின்றன. மேலும், தமிழகத்தில், 1 முதல் 3 வகுப்பு

களில் பயிலும் மாணவ, மாணவியர் அனைவரையும், மேல் வகுப்பிற்கு அனுப்பும் முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**நண்பகல் உணவுத் திட்டம்:**

தொடக்க உயர் தொடக்கப் பள்ளிகளில் (1-8 பள்ளிகளில்) பயிலும் ஏறக்குறைய 20.25 இலட்சம் மாணவர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறக்குறைய ரூ 5.37 கோடி செலவிடப்படும். 'கேர்' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிடைக்கும் சுமார் 20,000 டன் உணவுப் பொருள்களைப் பள்ளி நண்பகல் உணவுத்திட்டம் பயன்படுத்துகிறது.

மைய சமையற்கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயற்பட்டு வருகிறது. அங்கு நவீன அடுப்புகளில், சுகாதார முறைப்படி சமைக்கப்பெற்ற உணவு, சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது.

இம்மாவட்டங்களில் இயங்கி வரும் 97 சமையற்கூடங்களும், 'கேர்' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். மைய சமையற் கூடங்களிலிருந்து, பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 உந்து வண்டிகளையும் 'கேர்' நிறுவனம் வழங்கியது. இந்தச் சீரிய திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக இந்தத் திட்டம் வரும் நிதி ஆண்டில் இராமநாதபுரம், தருமபுரி வருவாய் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப் பெற்று, அந்த மாவட்டங்களில் 42 மத்திய சமையற்கூடங்கள் நிறுவப்பெறும். நிறுவனச் செலவு ரூ. 144 இலட்சம் ஆகும். இதில் 45 விழுக்காட்டுச் செலவினை, 'கேர்' நிறுவனம் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் மாணவர்களுக்கு நன்முறையில் சமைக்கப்பெற்ற சத்துணவு கிடைப்பது மட்டுமின்றி ஆசிரியர்களுக்கு மதிய உணவு வழங்கும் பொறுப்பு வெகுவாகக் குறைக்கப்படுகிறது. உணவுப் பொருள்களைச் சேமித்துவைக்க 'கேர்' நிறுவன உதவியுடன், வட்டாரக் கிடங்குகள் ஒன்பதும் அடையாற்றில் மையக்கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன.

**இலவசப் புத்தகங்கள் வழங்குதல**

1 முதல் 3 வகுப்புக்களில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், கற்பலகைகளும் இரண்டு மூன்று வகுப்புகளில் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 13 இலட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். இலவசமாகப் புத்தகங்களை வழங்குவதற்கான செலவை, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் ஏற்றுள்ளது.

**அறிவியல் சாதனங்கள்:**

தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் கற்பித்தலை மேம்படுத்தும் பொருட்டு, பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்களை வாங்கும் பொருட்டு, ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முந்நூறு ரூபாயும், ஒவ்வொரு உயர் தொடக்கப்பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதனால், 12,620 தொடக்கப்பள்ளிகளும், 3,980 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயனடைந்துள்ளன.

**தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள்**

பள்ளிக் கட்டடங்கள், கட்டுவதற்காக உள்ளாட்சி நிறுவனங்கட்கும், தனியார் நிறுவனங்கட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1979-80ல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டட மான்யம் தர ரூ. 4 இலட்சமும் அரசுத் தொடக்கப்பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ 17 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1979-80ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கூடங்களுக்காக ரூ 1 கோடி சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

**கல்வியின் நோக்கம் அறிவு தேடுவது ஆகும். எல்லாக் கல்வியின் நோக்கமும் நல்ல மனிதனை உருவாக்குவதாகவே இருக்கவேண்டும்!**

**—விவேகானந்தர்**

**உயர்நிலைப்பள்ளிக் கல்வி:**

1978-79ல் தமிழகத்தில் 3,108 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இப்பள்ளிகளில் 65,379 ஆசிரியர்களும், 16.83 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். 3108 உயர்நிலைப்பள்ளிகளில் 912ல் மேல்நிலைப் பள்ளி முதலாண்டு வகுப்பும் இருந்தன.

**அறிவியல் கல்வி;**

புதிய பாடத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பிலிருந்தே இயற்பியல், வேதியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங்களாக கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக்கூடங்களை



**பள்ளிக்கூடங்களும் கலா சாலைகளும் தொழிற்சாலை கள் போன்றவை. அங்கே உயர்ந்த பண்புள்ள மனிதத் தன்மை என்ற அருமையான பொருள் உற்பத்தி செய்யப் படுகிறது!**

**—காந்தியடிகள்.**

அமைப்பதற்கான திட்டத்தின் கீழ், தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ரூபாய் 55,000- செலவிடப் படுகிறது. (அறிவியல் ஆய்வகக் கட்டடத்திற்கு ரூ. 37,000- என்றும் அறிவியல் கருவிகளுக்கு ரூ. 18,000- என்றும் பிரிக்க வேண்டும்.) தனியார் மற்றும் நகராட்சி உயர் நிலைப்பள்ளிகள் பெறும் மானியம் ரூ 40,200- ஆகும். 1979-80ல் மேலும் 25 உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர் நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம், தற்போது 48 கல்வி மாவட்டங்களில், 42 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட ஊர்தி உள்ளது.

**நூலக வசதி :**

உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூல்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ 7 இலட்சம், இதற்காகச் செலவிடப்பட்டது. 1979-80ல் இப்பணிக்கு ரூ 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஒலி-ஒளிக்கல்வி :**

மக்கள் அளித்த நன்கொடை வாயிலாக, எல்லாப் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் இடம் பெற்றுள்ளன. 700 உயர்நிலைப்பள்ளிகளில் 16 மி.மீ திரைப்படம் காட்டும் கருவிகளும், 1250 பள்ளிகளில் துண்டுப் படம் காட்டும் கருவிகளும் உள்ளன. பள்ளிக்கல்வி இயக்குநரகத்திலுள்ள ''மாநில திரைப் படச்சுருள் சேமிப்பகம்'' பள்ளிகளுக்குத் திரைப்படங்களையும், துண்டுப்படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. சென்னையிலும், அதன் அண்மையிலும் (90 கி.மீ. வரை) உள்ள பள்ளிகள், சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒளி பரப்பின் மூலம் பயனடைகின்றன. இதற்கு உதவும் வகையில் 'கல்வித் தொழில் நுட்பப்பிரிவு' ஒன்று பள்ளிக்கல்வி இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**பள்ளி இணையங்கள் :**

2178 உயர்நிலைப்பள்ளிகளில் பள்ளி இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, தொடக்கப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை உயர்த்த உதவுகின்றன. தொடக்கப்பள்ளிகளின் தேவைகளையும் நிறைவேற்றுகின்றன.

**உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்கள் :**

நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப்பள்ளிகளுக்கு கட்டடமானியம் அளிக்க 1979-80ல் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப்பள்ளிகளின் கட்டடப்பணிகளுக்காக 1979-80ல் ரூ 37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**நடமாடும் மருத்துவ ஊர்திகள் :**

சென்னை தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென, நடமாடும் மருத்துவ ஊர்திகள் இயங்கி வருகின்றன.

**மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் :**

தமிழ்நாட்டில் 31 மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் உள்ளன. இவை முன்னர், சென்னை மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்திருந்தன. 1976-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து இவை, பள்ளிக்கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டன.

**ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் :**

இப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடமிருந்து 1978-79ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால், ஆங்கிலோ- இந்தியரல்லாத பிற மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது.

**தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் :**

தமிழ்நாடு கல்வி நிறுவனம், தமிழ்நாடு அறிவியல் கல்வி நிறுவனம், மாணவர் கல்வித்தர மதிப்பீட்டிற்கான மாநிலப்பிரிவு ஆகிய மூன்றையும் இணைத்து, 1975-ல் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. அது பள்ளிக் கல்வி நிலை ,ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. 28.8.78ல் இருந்து இந்நிறுவனம், அரசுத் தேர்வு இயக்குநர் பொறுப்பிலிருந்து, பள்ளிக் கல்வி இயக்குநர் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது.



## மேல்நிலைப் பள்ளிக்கல்வி :

'கேடில் விழுச்செல்வம்' என்று கல்வியின் சிறப்பை, திருவள்ளுவர் எடுத்துக் கூறுகிறார். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை நாம் அறிவோம். 'வீதி தோறும் இரண்டொருபள்ளி' என்ற மகாகவி பாரதியாரின் கனவு நனவாகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். சீர்திருத்தம் சமுதாயத்தில் மட்டுந்தானா? கல்வியிலும் வேண்டுமன்றோ? அதனால் ஒரு புதிய திட்டம் உருவாகியது. இதைத்தான் 10+3+2 என்று கூறுகிறோம். இதனை 'மேல் நிலைப் பள்ளிக் கல்வி' என்று கூறுகிறோம்.

1978-79 முதல், தமிழ்நாட்டில், மேல் நிலைப் பள்ளிக்கல்வி தொடங்கப்பட்டுள்ளது. + 2 நிலையாகிய மேல்நிலைப் பள்ளிக் கல்வி இரண்டாண்டுகள் கொண்டது. அதன் முதலாண்டு வகுப்பு 1.7.1978 முதல் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு மேல்நிலைப் பள்ளியாவது இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், மேல் நிலைக்கல்வி வசதி அளிப்பதற்கான பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. தொழில் சார்ந்த கல்விக்கு முதன்மை அளிக்கும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி வசதி கிராமப்புற மக்களுக்கெல்லாம் எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன், கிராமப்புற பகுதிகளின் தேவைக்கு முதன்மை அளித்து அப்பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. 912 பள்ளிகளில், மேல்நிலைப்பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேல்நிலைக் கல்வியின் முதலாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,14,000 ஆகும். புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 78,000 ஆகும். இவ்வாறாக மேல் நிலைக்கல்வியின் முதலாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை புகுமுக வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் 36,000 அதிகமாகவுள்ளது.



இதனைக் கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம். மேல்நிலைக் கல்வியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொத்த மாணவர்கள்.

| | |
|---|---|
| பொதுப்பாடக் கல்விப்படிப்பு: | 89,600 |
| தொழிற்கல்விப்படிப்பு | 24,400 |
| மொத்தம் | 1,14,000 |

| | |
|---|---|
| புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 78,000 |
| அதிகமாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. | 36,000 |

இத்திட்டம், குறிப்பாக, கிராமப்புறத்திலுள்ள ஏழை, மற்றும் நலிந்த பிரிவினருக்கு ஒரு மகிழ்ச்சியான வரமாகும். ஒவ்வொரு அரசு மேல் நிலைப்பள்ளியிலும் பல்நோக்குச் சோதனைக்கூடத்துடன் வகுப்பறை ஒன்றும் கட்ட ரூ. 1.57 இலட்சம் செலவிடப்படும்.

1979-80ல் ஒவ்வொரு மேல் நிலைப்பள்ளிக்கும் ரூ. 6,000- மதிப்புள்ள நூல்கள் வழங்கப்படும். மேல் நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்விப் படிப்பில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 24,000 - என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். தொழிற் கூடங்களின் பட்டியலை 6 பெரும் பிரிவுகளாகப் பிரிந்து அதனுள் 37 பாடங்களை அடக்கியுள்ளனர்.

பட்டினங்களிலும், பெரு நகர்களிலும் அமைந்துள்ள கல்லூரிகளில் தங்கிப் படிக்க, பிள்ளைகளைப் பெற்றோர்கள் அனுப்ப வேண்டியிருப்பதால் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்காக அதிகச் செலவு செய்கின்றனர். மேல் நிலைப் பள்ளிகளைக் கிராமப்புறங்களில் அமைப்பதன் வாயிலாக ஒரு புறம் பெற்றோர்களுக்குப் பணச் செலவு குறைகின்றது. மற்றொரு புறம் உயர் கல்வியால் பயனடையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. மேல்நிலைப் பள்ளிக் கல்வியால் மாணவர்கள் தொழில் திறமையுடன் தாமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

## முன்னணியில் தமிழகம் :

சீர்திருத்திய புதிய கல்வித் திட்டத்தின் காரணமாகதொழிற் கல்வி முறையைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு பிற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் உள்ளது மனநிறைவைத் தருகிறது. நடப்பாண்டில் தொழிற் கல்வி பயிலச் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:

## பயிற்று மொழி

மேல் நிலைப்பள்ளி மாணவர்களின் பயிற்று மொழி பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | தமிழும் சிறுபான்மை மொழிகளும் | ஆங்கிலம் | மொத்தம் |
|---|---|---|---|
| பொதுக் கல்வி | 65,300 | 24,300 | 89,600 |
| தொழில் கல்வி | 22,200 | 2,200 | 24,400 |
| மொத்தம் | 87,500 | 26,500 | 1,14,000 |

# முதற்பரிசுக்கவிதை

எஸ். சந்திரசேகரன் ஆரல்வாய்மொழி,
81/6, பெருமாள்புரம், கன்னியாகுமரி மாவட்டம்



# கண்ணான பாவேந்தர்

பாவேந்தர் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள்

சமுதாயம் புத்தமைப்பில்
சார்ந்துவிட வேண்டி,
அமுதாய நல்வாழ்வு
அமைத்துவிட வேண்டிமிக

வேட்கையுடன் பாவேந்தன்
வெற்றிப்பா நெய்தளித்தான்.
காட்சிப் புதுமையங்கே
காணுமிடம் எங்கெங்கும்

பூத்துக் குலுங்கிப்
பொதுமை மணங்கமழும்;
மூத்திருந்த வீண்பழைமை
மொய்த்திருந்த மக்களுளப்

பாங்கையவன் மாற்றிப்
படைத்த சமுதாயம்,
ஓங்கு புகழ்பெருக்கும்
ஒப்பில் சமுதாயம்;

நச்சரவாம் சாதிபல
நாட்டில் மதப்புற்றில்
அச்சுறுத்தும் வன்பல்லால்
அன்றாடம் தீண்டியதைக்

கண்டு துடித்தெழுந்தே
காய்ந்து கவிதைத்தீ
கொண்டழித்த கொள்கையினால்
கோலச் சமுதாயம்;

காலப் பழைமையிலே
கால்கொண்டு நல்லறிவுச்
சீலத்தை என்றென்றும்
சீரழித்து வாழ்ந்துவரும்

மூடப் பழக்கமெனும்
மூலக் கதையொன்று
நாடகமாய் நாட்டில்
நடப்பதையும், பார்த்ததனை

பாம்பு நிலாவிழுங்கும்
பாழ்மூடச் செய்தியெல்லாம்
ஓம்பித் திரிவதையும்
ஓட்டும் சமுதாயம்;

காட்டைக் கழனியாக்கிக்
காட்டும் உழைப்பீந்தும்
ஓட்டைக் குடிசையில்லா
ஓடப்பர் வாழ்வுயர்த்தி

வாட்டத்தை ஓட்டுகின்ற
வல்லதொரு சட்டத்தை
நீட்டி நிறைவேற்றும்
நிகர்நேர் சமுதாயம்;

ஏழ்மையென்றும், தாழ்மையென்றும்
ஏற்படுத்தும் கீழ்மைவிதி
வீழ்த்தியதால் வீறுகொண்டு
வென்ற சமுதாயம்;

பெண்பிறந்து தந்தைக்கும்,
பின்னர் கணவனுக்கும்,
மண்ணுலகில் தாயாய்
மகனுக்கும் மாறிமாறி

கொத்தடிமை பூணும்
கொடுமைகண்டு சாடுவதால்
ஒத்ததொரு பெண்ணுரிமை
ஊட்டும் சமுதாயம்

பெண்ணைத் திருமணத்தில்
பேசிவிலை போக்குகின்ற
எண்ணமழித்தே ஆண்பெண்
இருவரும் காதலித்து

நன்மணத்தை நாடி
நலம்பெறுக என்பதனால்,
வென்றிக் குடும்ப
விளக்குச் சமுதாயம்;

''மக்கட் பெருக்கம்,
மனிதர் துயர்பெருக்கும்;
தக்கமுறை தேர்ந்தால்,
தணியாது இன்பமெனக்''

காதல் வளர்ந்தும்
கருவளராச் சீர்வழியை
ஆதரித்துக் கட்டுக்குள்
ஆழ்த்தும் சமுதாயம்;

வெங்கொடுமை மன்னர்
வெறியாட்சி நீக்குதற்குப்
பொங்கியே மக்கள்
புரட்சிக் குடியாட்சி

உற்றமைத்து வாழும்
'உதார' நற்கருத்தால்
நற்புரட்சி நல்லாட்சி
நாடும் சமுதாயம்;

நாட்டும் பகுத்தறிவை,
நாட்டுணர்வை நல்கிநலம்
கூட்டுகின்ற இன்பமிகு
கொள்கைச் சமுதாயம்:

''போற்றும் மொழிப்பற்றைப்,
பொய்யகற்றும் தன்மதிப்பை
ஏற்றிடுதல் தன்மானம்''
என்னும் சமுதாயம்;

கல்வி கலையுணர்வுக்
காவியப் போக்கிலெல்லாம்
வெல்லும் மறுமலர்ச்சி
வேண்டும் சமுதாயம்;

கண்ணான பாவேந்தன்
கண்ட சமுதாயம்
உண்டானால் பாருயரும்
உய்ந்து.



இரண்டாம் பரிசுக் கவிதை

# பாட்டுத் தீக்கனல் பாவேந்தர்

—ஜி. ராஜாராமன்,
13-A, திரௌபதி அம்மன் கோயில் தெரு,
திருவில்லிபுத்தூர், இராமநாதபுர மாவட்டம்.

பாவேந்தன் ஒரு பாட்டுத் தீக்கனல்!
காவியம் உயிர்த்திட்ட கவிதைப் பிரளயம்!
''மானிட சமுத்திரம் நானென்று கூவிய
வானப் பெருமிதம்! கவிதை வானில்
புரட்சி பாடிப் பறந்த பூங்குயில்,
சர மழை கொட்டிய பாட்டுக் கருமுகில்!
புதிய சமுதாயம் புலர்ந்திடக் கவிதை
விதி செய்திட்ட வித்தகச் சிற்பி;
சமத்துவப் பாட்டு சாற்றிக் கொள்கைச்
சமர்நடத் திட்ட சொல்லேர் வீரன்!
'உடைமை மக்களுக்குப் பொது' வாக்கி
மடமைகள் தவிர்த்த மறவன் அணையாக்
கருத்து விளக்கால் கண்கள் திறந்து
திராவிடக் கவிதைக்குச் சிகரம் ஆனவன்!
'மங்காத தமிழென்று சங்கே முழங்கி'
'எங்கெங்கு காணினும் சக்தி' யிழைத்துத்
தேய்நில வாக இருந்த சமுதாயத்தைப்
பாய்புலி யாக்கிய பாவலன்! அவன்தான்
இன்பக் கவிநிலா, எனினும் செம்பரிதி!
தென்றல் சிலபோது சீறி எழுந்த புயல்!

பாரதி தாசன் கண்ட சமுதாயம்
ஆர்த்தெழும் நாளே யார்க்கும் திருநாள்!
நாளை வருமோர் நாளில் சமத்துவம்
ஆள வருகின்ற அச்சமு தாயமே—

ஆலைச் சங்கொலி சங்கீ தத்தில்
காலை விடியும் புதிய சமுதாயம்!
'நித்தம் திருத்திய நேர்மை யினால் மிகு
சித்திரச் சோலைகள்' செய்த நன்னிலம்,
ஆக்க மாகி அனைத்து வளங்களும்
தேக்கிய உழைப்புச் செல்வப் பெட்டகம்!
ஒன்றே குலம் ஒருவனே தேவனென
ஒன்றில் ஒன்றாய் ஒன்றிய மானிடம்—



இடையில் வைத்த சுவரை இடித்து,
வீதிகள் இடையில் திரையை விலக்கி,
மூடப் பழக்கங்கள் முளையைக் கிள்ளி
கேடுகள் அகற்றிக் கீழ்மைக் கொடுமைச்
சாதிகள் தகர்த்தே எழுந்த சமத்துவ
நீதி மண்டபம்! நெறிக்கொரு கோபுரம்!
புரட்சி ஆலயம்! புதுமைப் பூங்கா!
உரிமை கீதம்! ஒலிக்கும் காவியம்!
பகுத்தறி வோடு கலைகள் ஆயிரம்
மிகுத்துக் காக்கும் பல்கலைக் கழகம்!
மொழியெனும் தாயை உயிருக்கு நேராய்
விழித்துக் காக்கும் வீரர்தம் பாசறை!
புறநா னூறு புதுக்கி வைத்து
அறங்கள் வளர்க்கும் அமைதிச் சாசனம்!
'போரிடும் உலகை வேருடன் சாய்த்து
நேரிடும் அமைதித் தேரிடும் வீதி!

## மூன்றாம் பரிசுக் கவிதை

# சமுதாயச் சிற்பி பாவேந்தர்

சண்முக தாயுமானவன்
87, மலையடிவாரம்
பொன்மலை
திருச்சி

சீங்கத்தின் பார்வை; சிறுத்தை நடைவேகம்;
வெங்கோப வேழம்; வெடிக்கும் இடிமுழக்கம்;
செங்கனற் கொப்பரை; சீறும் எரிமலை;
சங்கீத மேகம்; சலசலக்கும் காட்டாறு;
பொங்குமதுச் சாறு; புரட்சி விடிவெள்ளி;
இங்கிவைப்பா வேந்தர் எழிலுருவைச் சித்திரிக்க;
போதையினை யூட்டுகிற பொங்கு நுரைக்கள்ளோ?
மேதையரும் பாராட்டும் மேன்மை அறத்தொகுப்போ?
தித்திக்கும் தேனோ? திகட்டாச் சுவைவிருந்தோ?
முத்தமிழ் போலினிக்கும் முக்கனியோ? தீம்பாகோ?
கன்னல் பிழிசாறோ? கற்கண்டோ? பாலமுதோ?
என்று வியந்துரைக்க இன்கவிதை பாடியவர்!
பாரதிரப் பாடிப் பகைவென்று சீர்பெற்ற
பாரதிக்குத் தாசனெனப் பாரில் திகழ்ந்தகவி—
கண்ட சமுதாயக் காட்சிகளைப் பாடுதற்குக்
கொண்ட விழைவால் கொடுக்கும் கவிதைஇது!
பார்திருந்த வேண்டிப் பகுத்தறிவு மந்திரத்தால்
சீர்திருத்தப் பாட்டெழுதிச் சிவ்வென் றெழுந்தகுயில்!
வெங்கொடிய தீண்டாமை வீழ்ந்தொழிய நாத்திகத்துச்
சங்கொலித்த தந்தைவழி சார்ந்த கவிமுரசு!
''நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் சுரக்குமென் நாவெலாம்'' என்றகவி;
''முத்தமிழும் நாடும் முழுநலமும் எய்துமெனில்
செத்தொழியும் நாளே திருநாளாம்'' என்றகவி;
பாடும் வரிப்பாட்டால் பாரோர்க்கு இனவுணர்வைக்
கூடும் படிசெய்த கொள்கைகளின் பாசறை!
தூங்கிக் கிடந்தாரைத் துள்ளி எழவைக்க
ஓங்கிக் குரல்கொடுத்த உன்னதப் போர்முரசு!
சண்டாள சாதிகளைச் சாய்க்கும் கலப்புமணம்
கொண்டு தமிழினமே கோதகற்ற வேண்டுமென்றும்
கண்ணீர் வரைந்த கவின்மிகு ஓவியமாய்
மண்ணில் கலங்கிதினம் மாண்டழியும் கைம்பெண்கள்
மீண்டும் மறுமணத்தால் மிக்கோங்க ஊக்குவித்தும்
தீண்டாமைத் தீங்கதனைத் தீய்த்தொழிக்கத் திட்டமிட்டும்
பாவேந்தர் கண்டுரைத்த பாட்டுச் சமுதாயம்
ஆவேசத் தோடின்று அகிலத்தில் தோன்றியது!
நற்றமிழைக் காக்கின்ற நல்லறிஞர்க்கு ஆதரவு!
கற்ற கலைவல்லார் களிப்புறப் பேருதவி!
ஏங்கும் தமிழ்மணக்க ஏக்கமுற்ற பாவேந்தர்
தங்கக் கவிதைகளால் தந்த கருத்துக்கள்
இன்று செயலாகி இன்பத் தமிழ்மணமே
மன்றிலெலாம் வீச மகிழ்வு பிறக்கிறது!
மன்றிலெலாம் ஆழ்ந்திருந்த பாவேந்தர்
ஆசைக் கனவுகளில் ஆழ்ந்திருந்த பாவேந்தர்
ஓசைக் கவிதை ஒலித்த சமுதாயம்
தூயோரின் தொண்டாலே தோன்றிச் சிறக்கிறது!
தூய பகுத்தறிவுத் தொண்டு தொடர்கிறது!
சீரார் சமுதாயச் சிற்பியாம் பாவேந்தைப்
பாராட்டும் நான்தொடுக்கும் பாட்டு!



# அமைச்சரிடம் 10 கேள்விகள்



*சுற்றுலா பற்றிய பத்துக் கேள்விகளுக்கு மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர்*

**திரு. இராம வீரப்பன் அவர்கள்**

*அன்புடன் பதில் அளித்திருக்கிறார்.*

***கேள்வி :*** மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதால், தமிழ் நாட்டுக்கு வரும் வெளி மாநில-வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறையக்கூடும் என்று சொல்லப்படுகிறதே, அது பற்றித் தங்கள் கருத்து என்ன?

***பதில் :*** மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதால் தமிழ் நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறையும் என்று சொல்வது தவறு. ஏனெனில் இந்தச் சட்டத்தால் அவர்களுக்கு எந்தவிதமான அசௌகரியமும் சிறிதும் ஏற்படாதவாறு எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தங்கள் பாஸ்போர்ட்டுகளைக் காண்பித்தால் போதும், எத்தனை நாட்களுக்குத் தமிழகத்தில் தங்குவதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்களோ—அதைக் கணக்கிட்டு, அவர்களுக்கு மது அருந்துவதற்கான தற்காலிக 'அனுமதி' உடனடியாகத் தரப்படுகிறது. விமான நிலையத்தில் இந்த 'பர்மிட்'டைப் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் சென்னையில் வருவாய் வாரியத்திலும், மாவட்டத் தலை நகரங்களில் சுற்றுலா அதிகாரிகளிடத்திலும் 'அனுமதி' பெற்றுக் கொள்ளலாம்.

இந்த ஏற்பாட்டினால் வெளிநாட்டுப் பயணிகளுக்கு எந்தச் சிரமமும் இல்லை. இவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்படும் — அவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும்' என்பதெல்லாம் மதுவிற்கு அடிமையான சிலர் கிளப்பிவிடுகிற புரளிகள்!

கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளில் சராசரியாக முப்பது சதவீதம் பேர் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். 1975-ல் தமிழ்நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து நாற்பதாயிரம். இதுவே 1978-ல் இரண்டேகால் இலட்சமாக அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து வெளி நாட்டுப் பயணிகள் தமிழகத்துக்கு வருவதற்கும் — மதுவிலக்குச் சட்டத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இந்தச் சட்டத்தால் பயணிகள் சிறிதளவும் பாதிக்கப்படுவதில்லை என்பது தெளிவாகும்.

***கேள்வி:*** மதுவிலக்கு அமலில் இல்லாத இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து வருகிற பயணிகள் நிலை என்ன?

***பதில்:*** இவர்களுக்கும் இத்தகைய தற்காலிக பர்மிட்கள் வழங்கப்படுகின்றன. இதில் சில நிபந்தனைகள் உண்டு. அவர்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கும், மது அருந்தாவிட்டால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்படும் என்பதற்கும் டாக்டர்களிடமிருந்து அத்தாட்சி இதழ்கள் பெற்று அதற்குரிய கட்டணத் தொகையையும் செலுத்தினால் தற்காலிக 'அனுமதி' உடனடியாக வழங்கப்படுகிறது.



# விவசாயிகளுக்கு தமிழக அரசின்

# ரூ. 40 கோடி

# சலுகைகள்



தமிழக விவசாயிகளுக்குள்ள பிரச்னைகளை ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து, அவற்றுக்கு நிலையான தீர்வு காண்பதற்கென அரசுக்குப் பரிந்துரைகள் சொல்வதற்கென்று தமிழக அரசானது, ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தது. இத்தகைய குழு இந்தியாவில் வேறு எந்த மாநில்த்திலும் அமைக்கப்படவில்லை.

இந்தக் குழுவானது தனது அறிக்கையை 15.5.79 அன்று அரசுக்குச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையையும், அதன் பல்வேறு பரிந்துரைகளையும், அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதால் அரசுக்கு ஏற்படும் நிதிப் பொறுப்புகளை நிதானமாகவும்—முறையாகவும் ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரப் போதிய அவகாசம் வேண்டும்.

விவசாயிகள் நம் நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருப்பவர்கள். அவர்களுக்குள்ள பிரச்னைகள், நீண்ட நெடுங்காலமாக சங்கிலித் தொடர்போல் பெரும் சுமையாக இருந்து, அவர்களைத் துன்பத்திலாழ்த்தி வருவதை இனியும் அனுமதிக்கக் கூடாது என்ற உயரிய மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன், உடனடி நிவாரணம் வழங்கிட 40 கோடி ரூபாய் அளவுக்கு தமிழக அரசு சலுகைகள் வழங்கியுள்ளது.

மின்கட்டணத்தை 16 காசுகளிலிருந்து பெரும்விவசாயிகளுக்கு 14 காசுகளாகவும், சிறு விவசாயிகளுக்கு 12 காசுகளாகவும் குறைத்து அரசு ஏற்கெனவே அறிவித்த சலுகைகள் உள்பட பத்துகோடி ரூபாய் மதிப்புள்ள பிற சலுகைகள் இதில் அடங்கா.

**விவசாயிகளுக்காக அரசு தன்னுடைய நிதி நிலைச் சக்திக்கும் மீறி, இந்தச் சலுகைகளை அறிவித்திருப்பதிலிருந்து, விவசாயிகள் நல்வாழ்விலும்-அவர்களது நலனிலும் அரசுக்குள்ள ஆர்வத்தையும்-அக்கறையையும் அறிந்து கொள்ள முடியும்.**

## நெல்லின் கொள்முதல் விலை :

நெல்லின் கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ. 120 ஆக நிர்ணயிக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டுமென்று உயர்மட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. குவிண்டாலுக்கு ரூ. 129 ஆக நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும், உடனடியாக அது சாத்தியமில்லையென்றால், கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது முதல் கட்டமாக நிர்ணயிக்க வேண்டுமென்றும், தமிழக அரசு வலியுறுத்தி வருகின்றது. 21-5-1979 அன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இக்கருத்து தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் முடிவு இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழகம் மட்டுமல்லாமல், நாட்டில் பல மாநிலங்களும் வற்புறுத்தியுள்ள இக்கோரிக்கைக்கு, மத்திய அரசு செவி சாய்க்கும் என்று எதிர்பார்க்கின்றோம். மத்திய அரசின் முடிவு நமக்கு மன நிறைவு அளிக்காத நிலை ஏற்பட்டால், சிறு விவசாயிகளுக்குக் கணிசமான நெல் விலை கிடைக்கச் செய்யத் தமிழக அரசு தன் சொந்தப் பொறுப்பிலேயே சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதிகொண்டுள்ளது. நெல் கொள்முதல் விலை பற்றி மத்திய அரசின் அதிகாரபூர்வமான அறிவிப்பு வந்ததற்குப் பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

அதே நேரத்திலே, வெளிச்சந்தையில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு மேலும் வசதி செய்யும் பொருட்டு, வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லுக்கும் அரிசிக்கும், இப்போது மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டு வரும் 20 விழுக்காடு லெவியைக்கூட ஜூன் முதல் தேதி முதற்கொண்டு அடியோடு நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது.

## தக்காவிக் கடன்கள் :

அரசு வழங்கியுள்ள தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்று, உடனடியாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

விவசாய இடுபொருள்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், முழுவதும் தள்ளுபடி செய்யப்படும். இந்த இனத்தில் மற்ற விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், கடன் தொகையில் முதல் 500 ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். அடுத்த 5,000 ரூபாய் தொகை வரையில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்.

விவசாயக் கடன்கள் சட்டத்தின் கீழும் நில மேம்பாட்டுச் சட்டத்தின் கீழும் வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், அசலாகவோ, வட்டியாகவோ, இரண்டும் சேர்ந்தோ, வாங்கிய கடனுக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால், கணக்கு தீர்ந்துவிட்டதாகக் கருதப்படும். அது போலவே, வாணிபப் பயிர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், கடனுக்குச் சமமான தொகை, வட்டியாகவோ அசலாகவோ, இரண்டும் சேர்ந்தோ, செலுத்தப்பட்டிருந்தால், கணக்குத் தீர்க்கப்பட்டதாகக் கருதப்படும்.





மூலதன வசதிகளை உருவாக்க வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரையில், அசலாகவோ, வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ, இதுவரை செலுத்தப்பட்டுள்ள தொகை, வாங்கிய கடனுக்கு இரு மடங்குக்குச் சமமாக இருந்தால் கணக்கு தீர்ந்ததாகக் கருதப்படும்.



அதுபோலவே, கிணறு தோண்ட அல்லது குழாய்க் கிணறு அமைக்க, வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் வாங்கிய கடனுக்கு இரு மடங்குக்குச் சமமான தொகை, அசலாகவோ வட்டியாகவோ, இரண்டும் சேர்ந்தோ, செலுத்தப்பட்டிருந்தால் கணக்கு தீர்ந்ததாகக் கருதப்படும்.

கிணறு தோண்டக் கடன் வாங்கி, கிணறு பொய்த்து விட்டிருந்தால் வாங்கிய கடனில் முதல் 10,000 ரூபாய் வரை தள்ளுபடி செய்யப்படும். வாங்கிய கடனுக்குச் சமமான தொகையையேனும் கிணறு வெட்டச் செலவு செய்திருந்தவர்களுக்கே இச்சலுகை உரித்தாகும்.

விவசாயிகளுக்காக வேளாண்மைத் துறை மேற்கொண்ட வேலைகள் தொடர்பாக அளிக்கப்பட்ட கடன்களைப் பொறுத்தவரை, மண் வளப் பாதுகாப்பு, நிலத்தில் பூச்சி மருந்து அடித்தல் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களைத் தவிர, மற்ற கடன்களில் இனிமேல் வசூல் எதுவும் செய்ய வேண்டாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. மண் வள பாதுகாப்பு கடன்களைப் பொறுத்த வரையில், கடன் தொகையில் அசல் வகையில் 50 விழுக்காடு செலுத்தப்பட்டிருந்தால், கணக்கு முழுமையாக தீர்ந்ததாகக் கருதப்படும். நிலத்தில் பூச்சி மருந்து தெளிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்தவரையில், அசலுக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால், கணக்குத் தீர்ந்ததாகக் கருதப்படும்.

மேலே குறிப்பிட்ட இனங்களைத் தவிர மற்ற இனங்களில் வழங்கப்பட்ட தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், கடன் தொகைக்குச் சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால், கணக்குத் தீர்ந்ததாகக் கருதப்படும்.

இந்த சலுகைகளுக்குப் பின்பும், செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அதை வரும் இரண்டு ஆண்டுகளில் இரு தவணைகளாகச் செலுத்த வேண்டும்.

இச்சலுகைகளில் எதுவும் தமிழ் நாடு பொது வணிக வரிச் சட்டத்தின் கீழோ, இந்திய வருமான வரிச் சட்டத்தின் கீழோ, விவசாய வருமான வரிச் சட்டத்தின் கீழோ வரி செலுத்துவோருக்கு உரித்தாகாது.

தக்காவிக் கடன்களைப் பொறுத்த வரை அளிக்கப்படும் இச்சலுகைகளின் காரணமாக, ஏறத்தாழ 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் கிட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**கூட்டுறவுக் கடன்கள் :**

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையிலே, ரிசர்வ் வங்கி விதிக்கின்ற விதிமுறைகளுக்கும் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை நெறி முறைகளுக்கும் நாம் கட்டுப்பட வேண்டியுள்ளது. இருந்தபோதிலும், விவசாயிகளுக்குக் கணிசமான நிவாரணம் கிடைக்க வேண்டுமென்ற அக்கறையில் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கும் கூடுதலாகவே முக்கியமான பல சலுகைகளை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

**அபராத வட்டி தள்ளுபடி :**

30-6-78 அன்று தவணை தவறி நிலுவையில் இருந்த குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால விவசாய கடன்களுக்கு 30-6-79 வரை உரிய அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும். 30-6-77-க்குப் பின் செலுத்தப்பட்ட அபராத வட்டியை உறுப்பினர்களுக்குத் திருப்பித் தரும் வகையில் அவர்களுடைய கணக்கில் அத்தொகை வரவு வைக்கப்படும்.




**சாதாரண வட்டி :**

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் உற்பாதங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்கள் ஏற்கெனவே மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கடன்கள் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ, அதற்கு மேற்பட்டோ ஒரு விவசாயிக்கு இருந்தால், அக்கடன்களுக்கெல்லாம் 30-6-1978 அன்று உரிய வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

வணிக வரி, வருமான வரி, விவசாய வருமான வரி, ஆகியவற்றில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட வரியோ செலுத்த வேண்டியுள்ளவர்களுக்கு, அபராத, சாதாரண வட்டிச் சலுகைகள் உரித்தாகா.



இந்த வட்டித் தள்ளுபடி சலுகை அல்லாமல், மாற்றியமைக்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படும். ஒரு விவசாயிக்கு மாற்றி அமைக்கப்பட்ட இரண்டு கடன்கள் இருந்தால், அவை மொத்தமான ஒரு கடனாக்கப்பட்டு, அதை மூன்று ஆண்டுத் தவணைகளில் செலுத்த அவர் அனுமதிக்கப்படுவார். மாற்றியமைக்கப்பட்ட மூன்று கடன்கள் இருந்தால், அவை ஒரு கடனாக்கப்பட்டு, அதை ஐந்து ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்படுவார். மாற்றியமைக்கப்பட்ட நான்கு கடன்கள் இருந்தால், அவை ஒரு கடனாக்கப்பட்டு ஆறு ஆண்டு தவணைகளில் திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்படுவார்.

இவ்வாறு ஒன்றாக்கப்பட்ட கடன்களில் முதல் தவணையை 30-6-80-க்குள் செலுத்த, வழக்கமான விளைச்சல் காலத்தைப் பொறுத்து உறுப்பினருக்கு உரிய தேதி நிர்ணயிக்கப்படும்.

இச்சலுகைகள் எல்லாம் 30-6-78ல் நிலுவையில் உள்ள கடன்களுக்குப் பொருந்தும். 30-6-78-க்குப் பின் செலுத்த வேண்டி ஏற்பட்ட கடன்கள் உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும்.





இச்சலுகைகளைத் தவிர, 1—1—79-க்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்களாக நிலுவையில் உள்ள கடன்களுக்கும், ஒன்றாக்கப்பட்டுத் திருப்பிச் செலுத்துவதற்கான கால நீடிப்பு கொடுக்கப்படவிருக்கும் கடன்களுக்கும், வட்டி விகிதம் குறைக்கப்படும். மேற்படி கடன்களுக்குத் தற்போதுள்ள விதிகளின்படி, வட்டி விகிதம் 13.8 விழுக்காடு அல்லது 12.5 விழுக்காடாகும். இனி குறைக்கப்படவிருக்கும் விகிதத்தின்படி 1-1-79 முதல் சிறு விவசாயிகளின் கடன்களுக்கு 10.5 விழுக்காடு வட்டி விகிதமும், இதர விவசாயிகளுக்கு 12 விழுக்காடு வட்டி விகிதமும் நிர்ணயிக்கப்படும்.




கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில் அளிக்கப்பட்டுள்ள இச்சலுகைகளின் காரணமாக; ஏறத்தாழ 16 இலட்சம் விவசாயிகளுக்கு 27 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் கிடைக்கும். தக்காவிக் கடன்களைப் பொறுத்தவரையில், அளிக்கப்பட்டுள்ள சலுகைகளின் காரணமாக 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவில், நிவாரணம் கிடைக்கும். மொத்தமாக, விவசாயிகளுக்கு இப்போது அளிக்கப்பட்டுள்ள சலுகைகளின் காரணமாக 40 கோடி ரூபாய் அளவில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

இது தவிர, ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்கு இணங்க, கூட்டுறவு நிறுவனங்கள், விவசாயிகளுக்குக் கடன் வழங்க ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் பெறுவதற்குச் சில நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டியுள்ளது. இப்போது அளிக்கப்பட்டுள்ள சலுகைகளின் காரணமாகக் கூட்டுறவு அமைப்புகளின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்படும். ரிசர்வ் வங்கியிலிருந்து தொடர்ந்து கடன் பெறுவதற்கு உரித்தான நிலையில் அவற்றை வைத்திருக்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு தன் நிதிப் பொறுப்பிலிருந்து பல கோடி ரூபாய்களை முன் பணமாக, இந்த ஆண்டும் அடுத்த சில ஆண்டுகளிலும், அளிக்க வேண்டியிருக்கும். இது, அரசின் நிதி வசதிகளைப் பெரிதும் சோதனைக்கு உள்ளாக்கும்.

### அரசின் வேண்டுகோள் :

இத்துணைச் சிரமங்களையும் பொருட்படுத்தாமல், தமிழக விவசாயிகளுக்குக் கணிசமான நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில், அரசு இந்த முடிவுகளை மேற்கொண்டுள்ளது. இச்சலுகைகளை விவசாயப் பெருமக்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்று அரசு நம்புகிறது. வாங்கிய கூட்டுறவுக் கடன்களை உரிய காலத்தில் செலுத்தினால்தான், விவசாயிகளுக்கு மேலும் கடன் வழங்கும் நிலையில் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட முடியும். கூட்டுறவு இயக்கம் மக்களுடைய இயக்கம் என்பதையும் அதன் நிதிப் பொறுப்புக்கள் மக்களுடைய நிதிப் பொறுப்புக்கள் என்பதையும், கூட்டுறவு அமைப்புகள் விவசாயிகளுக்குத் தொடர்ந்து சேவை செய்ய உதவும் வகையில், காலம் தவறாமல் கூட்டுறவுக் கடன்களைச் செலுத்துவது, தங்கள் தலையாய சமுதாயப் பொறுப்பு என்பதையும், விவசாயப் பெருமக்கள் நன்கு அறிவார்கள். தன்னுடைய சக்திக்குப் பெரிதும் விஞ்சிய பல சலுகைகளை இந்த அரசு அளித்துள்ளது. இதற்கு அடிப்படையான நல்லெண்ணத்தையும், விவசாயிகளின்பால் அரசு கொண்டுள்ள பரிவையும், விவசாயப் பெருமக்கள் பெரிதும் போற்றி, அரசும், குறிப்பாகக் கூட்டுறவு அமைப்புகளும், விவசாயிகளுக்குத் தொடர்ந்து மேலும் பல தொண்டுகளை ஆற்ற உறுதுணையாய் நிற்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொள்கிறது.





***கேள்வி:*** தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள இயற்கை அழகு மிக்க இடங்களுக்காக மட்டுமல்லாமல், புகழ்மிக்க திருக்கோயில்கள் மற்றும் அற்புதமான சிற்பக்கலை அழகினைக் காண்பதற்காகவும் வருகிறார்கள். எனவே கோயில்களையும், அங்குள்ள கலையழகு மிக்க சிற்பங்களையும் நல்ல முறையில் போற்றிப் பாதுகாக்கும் முயற்சிகள் குறித்துத் தாங்கள் திருப்தி அடைகிறீர்களா?....

***பதில் :*** இதுதான் சுற்றுலாவின் முக்கியமான அம்சம். இந்தியாவுக்கு வருகிற வெளிநாட்டுப் பயணிகளின் நோக்கம் இங்குள்ள மலை வளம் போன்ற இயற்கையழகைக் கண்டு ரசிப்பது மட்டுமல்ல. இந்த நாட்டுக்கென், சிறப்பானதொரு கலாச்சார மரபு உண்டு. தொன்மையான வரலாற்றுப் பெருமை உண்டு. அதை ஆலயங்களில் காணலாம். அந்த ஆலயங்களின் வானளாவிய கோபுரங்களில் காணலாம். ஆலயத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிற்பங்களாகக் காணலாம். இந்த கலாச்சாரச் சிறப்புகள் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட தமிழ்நாட்டில் அதிகம்— மிக அதிகம். இவைகளுடன் அழகிய நீண்ட கடற்கரைகளின் கண்ணைக் கவரும் இயற்கை வனப்புகள்.

தமிழ்நாட்டின் எல்லைகளைப் பாருங்கள். வடக்கே குன்றின் மேல் குமரன் குடிகொண்ட — திருத்தணி. தெற்கே — குமரி முனை. மூன்று கடல்களும் முத்தமிடும் அற்புதம். கையை நீட்டி எட்டிப் பிடிக்கிறாற்போல் கதிரவனின் உதயம்—கிழக்கில். அதே இடத்தில் மேற்கே—கதிரவன் கனல் மாறி, கடலில் குளிக்கும் கண்கொள்ளாக் காட்சி. இயற்கையின் இந்த விந்தையை வேறெங்கே காண முடியும்? கிழக்கு எல்லையாக நீண்டிருக்கும் அலைகடல். மேற்கு எல்லையோ பிரமிப்பான மலைத் தொடர். இப்படி, இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத தொரு எழிலை, எல்லைச் சிறப்புகளைப் பெற்றுள்ள தமிழகத்தின் திருக்கோயில்கள், நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற அழியாத கலைக் கருவூலங்கள். விண்முட்டும் கோபு

ரங்கள்—விதம் விதமான சிற்பங்கள்—குகைக் கோயில்கள்—கல்லெல்லாம் கதை சொல்லும் கலை வடிவங்கள்... இவையனைத்தும் உலகப் பயணிகளைக் கவரும் தமிழகத்து மண்ணின் காந்த சக்திகள்.

அதனை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. இந்த ஆலயங்களின் அழகும்—சிற்பங்களின் கலை நுணுக்கமும் பழுதுபடாமல் பாதுகாக்கப்புட வேண்டும், அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு அளவில்லாத அக்கறையும்—கவனமும் இருக்கிறது. அதற்குரிய எல்லாப் பணிககளையும் இந்து அற நிலையத் துறை மேற்கொண்டிருக்கிறது.

**கேள்வி:** நமது தமிழ்நாட்டின் இயற்கை அழகும்—சிற்பக் கலையழகும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அதே சமயத்தில் இந்த இடங்களிலெல்லாம் பிச்சைக்காரர்களால் பயணிகளுக்கு ஏற்படும் அதிருப்தியை நீக்க அரசின் உடனடித் திட்டம் ஏதாவது உண்டா?

**பதில்:** இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பொதுவானது. கன்னியா குமரியில் மட்டும்தான் பிச்சைக்காரர்களா என்றால், இல்லை! காஷ்மீரிலும் இருக்கிறார்கள். மாமல்லபுரத்தில் மட்டும்தான் கையேந்துகிறார்களா என்றால், கிடையாது; தாஜ்மகாலிலும் உண்டு! எனவே இந்தப் பிரச்சினையை தேசியக் கண்ணோட்டத்தில் அணுகி, மத்திய அரசும் — மாநில அரசும் இணைந்து ஒரு தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன!



**கேள்வி:** தற்போது அரசுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் குறைந்த வருவாய் உள்ளவர்கள் தங்கும் அளவுக்கு குறைந்த வாடகையில் இல்லை என்றும், கோடைக் காலத்தில் குறைந்த வருவாய் உள்ளவர்கள் ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக்குப் போகவே முடியாத சூழ்நிலை உள்ளது என்றும் சொல்லப்படுகிறது. இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

**பதில்:** குறைந்த வருவாய் என்றால் எவ்வளவு? முந்நூறா? நானூறா—அல்லது அய்ந்நூறா? அதற்கு எப்படி வரம்பு நிர்ணயிக்க முடியும்? **'குறைந்த வருவாய் உள்ளவர்கள் சுற்றுலாப் போவது'** என்று சொல்வதை விட, **'குறைந்த செலவில் சுற்றுலாப் போவது'** என்று சொல்வதுதான் பொருந்தும். அப்படிப் பார்த்தால் அரசின் சுற்றுலா மாளிகைகளில், எல்லாத் தரப்பினரும் தங்கும் அளவுக்கு மிக நியாயமான வாடகையே விதிக்கப்கிறது. என்றாலும் குடும்பத்தோடு அல்லது குழுவாகச் செல்லும் ஒரு நடுத்தர வருவாயுள்ளவர் தங்குவதற்கு 'டார்மிடரி' என்று சொல்லப்படும் பொது தங்குமிட வசதியைப் பயன்படுத்திக் கொண்டால் செலவு குறையும்.

ஊட்டி, கொடைக்கானல், குற்றாலம் ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட 'பொது தங்கும் வசதிகள்' ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

**கேள்வி:** மாமல்லபுரம் போன்ற இடங்களில் மலிவான சங்குப் பொருட்களை தனி நபர்கள் அதிக விலைக்கு விற்று, கொள்ளை லாபம் சம்பாதிப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுபோன்ற முக்கியமான இடங்களில் எல்லாம் அரசின் விற்பனைக் கூடங்கள் வைப்பது வரவேற்கத் தக்கதல்லவா?

**பதில்:** முக்கியமான இடங்களில் இது போன்ற அரசின் விற்பனைக் கூடங்கள் ஏற்கெனவே உள்ளன. ஒரு வேளை சுற்றுலாப் பயணிகள் அந்த விற்பனைக் கூடங்களைத் தேடிப் போக முடியாத நிலை இருக்கலாம்! அந்தச் சூழ்நிலையைச் சில தனியார்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதை ஓர் ஒழுங்கு முறைக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம்தான். அரசு இது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**கேள்வி:** அரசு ஊழியர்கள், கோடை விடுமுறை மாதங்களில் தம் குடும்பத்தினருடன் தமிழ்நாட்டுக்குள் சுற்றுலா சென்று வரப் பேருந்துக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டால் இப் பிரிவினருக்கு உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இது பற்றிய தங்கள் கருத்து என்ன?

**பதில்:** எனக்கும் இது உடன்பாடுதான். அரசு ஊழியர்கள் மட்டுமல்ல. தனியார் தொழில் அமைப்புகளில் பணிபுரியும் தொழிலாளர்கள்கூடச் சுற்றுலா சென்று வர விடுமுறையும்-முடிந்தால் உதவி நிதியும் அந்தந்தத் தொழில் நிறுவனங்கள் தர வேண்டும் என்று பலமுறை நான் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். ஓரிரு தொழில் அமைப்புகளில் மிகக்



குறுகிய அளவில் இந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தப்படுவது பாராட்டத்தக்கது.

அரசு ஊழியர்களுக்குச் சுற்றுலா சென்று வரப் 'பேருந்துக் கட்டணச் சலுகை' வழங்கு வது பற்றிப் போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசிக்கப்படும்.

***கேள்வி :*** 1980-ஆம் ஆண்டினை இந்திய அரசு சுற்றுலா ஆண்டாகக் கொண் டாடுகிறது. இதனையொட்டி, தமிழக அரசு ஏதேனும் சிறப்புத் திட்டங்களைத் தொடங்க நினைத்துள்ளதா?

***பதில் :*** 1980 ஜனவரியில் மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கப் போகிறது. உலகின் பல பகுதிகளிலிருந்து நூற்றுக் கணக்கில் மாநாட்டிற்குப் பிரதி நிதிகள் வரவிருக்கிறார்கள். இந்த மாநாட்டை ஒட்டி, மதுரை மாநகரமே புதுக் கோலம் கொள்ளப்போகிறது. இதற்கென முப்பது லட்சம் ரூபாய் செலவில் புதிதாக ஒரு சுற்றுலா மாளிகையும் கட்டுவதற்கு முயற்சி எடுத்திருக் கிறோம். இப்படி சுற்றுலா ஆண்டினை, தமிழ் நாடு மகிழ்ச்சியோடு தொடங்குகிறது. இது தவிர, மத்திய அரசு, சுற்றுலா ஆண்டுக்கான புதிய திட்டங்களையும்—செயல் முறைகளை யும் அறிவித்த பிறகு அதற்கேற்பத் தமிழக அரசும் செயல் திட்டங்களை வகுக்கும்.

***கேள்வி :*** சுற்றுலாக் கழகம் நடத்தும் சிக்கனக் குழுச் சுற்றுலா (*Conducted Tours—Package Tours*) கட்டணம் அதிகம். தனியார் நடத்தும் குழுச் - சுற்றுலா செலவு குறைவு என்று சொல்லப்படுகிறதே...உண்மையா ?

***பதில் :*** நான் அப்படி நினைக்கவில்லை. அப்படியே இருந்தாலும் கூட வித்தியாசம் குறைந்த அளவே இருக்கலாம். அதற்குப் பல காரணங்கள். முதலாவதாக பேருந்து வசதி. சுற்றுலா என்றாலே அதில் கொஞ்சம் சுகம் இருக்க வேண்டும். நீண்ட தூரம் பயணம் செய்வதால் வசதியாக உட்கார்ந்துபோக வேண்டும். மக்களின் நலன் கருதி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் குழுச்-சுற்றுலாக் களுக்கு வசதியான பேருந்துகள் பயன்படுத்தப் படுகின்றன. போகிற இடங்களில் சுற்றுலா மாளிகைகளில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த இரண்டுக்கும் சேர்த்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உணவு உட்கொள்வது அவரவர் விருப்பம். அதற்காக அங்குமிங்கும் அலைய வேண்டிய தில்லை. எல்லாச் சுற்றுலா மாளிகைகளிலும் உணவு விடுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பேருந்திலும் ஒரு தேர்ந்த வழி காட்டி உடன் செல்கிறார். இவ்வளவு வசதிகள் தருகிறபோது சிறிது கட்டணம் சேர்த்து வசூலிப்பது தவறாகாது.

***கேள்வி :*** நமது கிராமியக் கலை நிகழ்ச்சிகளை சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளனவா ?

***பதில் :*** நம்முடைய சிறப்புகளில் ஒன்று இந்த கிராமியக் கலைகள். தற்போது ஓரிரு பெரிய ஓட்டல்களில் இந்த கிராமிய நாட்டிய நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடத்தப்படு கின்றன.

இது போதாது என்று நாங்கள் அறி வோம். தாய்லாந்து நாட்டில் குறிப்பிட்ட தொரு இடத்தில் தினந்தோறும் அந்த நாட் டின் கலை நிகழ்ச்சிகளை நடத்தி, சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழ்வதற்கான வாய்ப் பைத் தந்திருக்கிறார்கள். அதேபோல் சென்னை நகரில் மையமான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அரங்கம் அமைத்து, தினந் தோறும் ஒவ்வொரு கிராமியக் கலை நிகழ்ச் சியை நடத்துவதற்கான திட்டத்தினையும் சுற்றுலாத் துறை ஆய்வு செய்து வருகிறது.

—பேட்டி : டி. கே. டி.



தமிழ்நாட்டில்

# தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி

திரு சு. வையாபுரி,
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு.

**தொ**ழில் நுட்பக் கல்வி வளர்ச்சியில் இன்று முன்னணியில் இருக்கும் மாநிலங்களில் தமிழகம் ஒரு சிறந்த இடம் வகிக்கிறது. ஒரு நாட்டின் வளத்திற்கும், நல்வாழ்விற்கும் ஆதாரமாக அமைவது தொழில் நுட்பக் கல்வியாகும். நம் நாட்டில் கடந்த முப்பதாண்டுகளில் தொழில் நுட்பக் கல்வித் துறை பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது. உலகில் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களை அதிக அளவில் பெற்றிருக்கும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டில் தொழில் நுட்பக் கல்வித்துறை செயல்படத் துவங்கிய காலம் முதல் இது நாள் வரை தமிழகம் தொழில் நுட்பக் கல்வியில் பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

தற்போது தமிழ் நாட்டில் 13 பொறியியல் கல்லூரிகள், 44பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள், 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவைகளில் 6 பொறியியல் கல்லூரிகள், 39 பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் மற்றும் 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. இதரத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் தன்னாட்சி முறையிலும், பல்கலைக் கழகங்களின் ஆளுகையின் கீழும் இயங்கி வருகின்றன.

## மேல்நிலைப் பள்ளிகள் (தொழில் பாடங்கள்)

புதிய 10+2+3 கல்விமுறையை ஒட்டி, மேற்சொன்ன 14 பள்ளிகளையும் 1979-80 கல்வி ஆண்டு முதல் மேல் நிலைப்பள்ளிகளாக (தொழில் பாடங்கள்) மாற்றியமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இப் மேல் நிலைப் பள்ளிகள் மேல் நிலைக் கல்வி வாரியத்துடன் இணைக்கப்பட்டவைகளாகவும் தொழில் நுட்பக் கல்வித் துறையின் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வருபவைகளாகவும் விளங்கும். மேல் நிலைக் கல்வி வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட தொழில் பாடத் திட்டங்கள் தவிர, மேலும் சுமார் 20 புதிய தொழில் பாடத் திட்டங்களைத் தற்போதுள்ள தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்துறைத் தொழில் பயிற்சிப் பயிலகங்களிலும் உள்ள வசதிகளைக்கொண்டு துவங்க தேவையான கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

புதிய 10+2+3 பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் மேல் நிலைப் பள்ளிகளுக்குத் தொழில் பாடங்கள் நடத்தத் தேவையான பணிமனை மற்றும் ஆய்வுக்கூட வசதிகளை பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் வழங்குவது பற்றிய திட்டம் உருவாகி வருகிறது. பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் தொழில் பாடங்கள் நடத்தப்பெறும் மேல் நிலைப் பள்ளிகளில் பகுதிநேர விரிவுரையாற்றவும் தக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பொறியியற் கல்லூரிகளில் நான்காண்டு பொறியியல் பட்டப் படிப்பு :

அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக்குழுவின் பரிந்துரைக்கேற்ப பொறியியல் பட்டப்படிப்பின் கால அளவினை ஐந்தாண்டிலிருந்து நான்காண்டாக குறைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இக் கருத்துருவின் மேல் முடிவு எடுக்கப்பட்டவுடன் பொறியியல் பட்டப் படிப்பின் கால அளவு ஐந்தாண்டிலிருந்து நான்காண்டாகக்குறைக்கப்படும்.

ஆனால் பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களைப்பொறுத்த அளவில் டிப்ளமா பாடத்தின் மூன்றாண்டு கால அளவில் மாற்றம் ஏதுமில்லை.

## பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் :

பொறியியல், தொழில் நுட்பவியல் தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும், பொறியியல், தொழில் நுட்பவியல் தொடர்புள்ள அறிவியல்கள் ஆகியவற்றில் மேற்படிப்பிற்காகவும், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் 'பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்' என்ற பெயரில் பல்கலைக் கழகம் ஒன்று தமிழக அரசால் 4.9.1978 அன்று சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் தொழில் நுட்பக் கல்விக்கான

ஒருமை வகை (Unitary type) பல்கலைக் கழகமாக இருக்கும். இப்பல்கலைக் கழகத்தில் சென்னை கிண்டி பொறியியல் கல்லூரி, சென்னை கிண்டி அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியின் அங்கங்களான வேதியல், தொழில் நுட்பவியல்துறை, தோல் தொழில் நுட்பவியல் துறை, நெசவுத் தொழில் நுட்பவியல் துறை, கட்டிடக்கலை மற்றும் நகர அமைப்புப் பள்ளி ஆகியவையும், குரோம் பேட்டையிலிருக்கும் சென்னை தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனமும் அடங்கும்.



**மண்டலப் பொறியியல் கல்லூரி (Regional Engineering College)**

இந்தியாவில் கீழ்க்கண்ட 14 இடங்களில் மண்டலப் பொறியியல் கல்லூரிகள் உள்ளன.

1. வாரங்கல், ஆந்திரப் பிரதேசம்.
2. சூரத்கல், கர்நாடகம்.
3. நாகபுரி, மஹாராஷ்டிரம்.
4. போபால், மத்தியப் பிரதேசம்.
5. துர்க்காபூர், மேற்கு வங்காளம்.
6. ஜாம்ஷெட்பூர், பீஹார்.
7. ஸ்ரீ நகர், ஜம்மு காஷ்மீர்.
8. அலகாபாத், உத்திரப்பிரதேசம்.
9. சூரத், குஜராத்.
10. கோழிக்கோடு, கேரளா.
11. ரூர்க்கேலா, ஒரிசா
12. ஜெய்ப்பூர், ராஜஸ்தான்
13. குருஷேத்ரா, பஞ்சாப்
14. திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

நம் மாநிலத்தில் திருச்சிராப்பள்ளியில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் மாணவர்கள் சேர்ப்பு எண்ணிக்கை 200 ஆகும். அதில் 50 சதவீத இடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்காகவும் மீதமுள்ள 50 சதவீத இடங்கள் பிற மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதே போன்று, தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களும் மேற்கூறிய அடிப்படையிலேயே இயங்கிவரும் பிற மாநிலங்களில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரிகளுக்கும் விண்ணப்பித்து உரிய பயன் பெறலாம்.

**தொழில் நுட்பவியல் பயிலகங்கள்:**

தற்போது தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழுள்ள 39 பயிலகங்களில் பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்கள் 30ம், கலை மற்றும் கைத்திறன், கல்லூரிகள் 3ம், சிறப்புத்தொழில் நுட்பவியல் பயிலகங்கள் 6ம் ஆகும். அதில் மேற்குறிப்பிட்ட 30 பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களில் நடத்தப்படும் வழக்கமான கட்டிடவியல், இயந்திரவியல், மின்னியல், தொழில் நுட்பப் பாடங்கள் தவிர விவசாய உபகரணங்கள் தொழில் நுட்பவியல், அழகுச் சாதனங்கள் சார்பான நுட்பவியல், குளிர் சாதனம் மற்றும் குளிர் பதனம் நுட்பவியல், எலும்பு முறிவு, மற்றும் முடவியல் சாதனங்கள் நுட்பவியல் முதலான 22 சிறப்புப் பாடத் திட்டங்களும், டிப்ளமா அளவில் நடத்தப் பெற்று வருகின்றன. சென்னை கும்பகோணம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள மூன்று கலை மற்றும் கைத்திறன் கல்லூரிகளில் ஓவியம், சிற்பம், விளம்பரக்கலை முதலான பாடத்திட்டங்கள் டிப்ளமா அளவில் நடத்தப்பெற்று வருகின்றன. சென்னையில் உள்ள கலை மற்றும் கைத்திறன் கல்லூரியில் நடப்பு கல்வியாண்டு முதல் புதிய பட்டப்படிப்புவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**மக்கள் தாங்கள் அறியாத கைளைத் தெரிந்து கொள்ளும் படி கற்பிப்பது கல்வியின் பொருளாகாது; அவர்கள் நடையை மாற்றிச் செம்மையாக நடந்துகொள்ளக் கற்பிப்பதே கல்வியாகும்!**

**—ரஸ்கின்.**

ஆறு சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களில் நடத்தப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. தோல் தொழில் நுட்பவியல் பயிலகம், சென்னை.

   அ) தோல் தொழில் நுட்பவியல் டிப்ளமா.
   ஆ) ஒரு சான்றிதழ் பாடத் திட்டம்.

2. நெசவுத் தொழில் நுட்பப் பயிலகம், சென்னை.

   அ) நெசவுத் தொழில் நுட்பவியல் டிப்ளமா

3. வேதியல் தொழில் நுட்பவியல் பயிலகம், சென்னை.

   அ) வேதியல் தொழில் நுட்பவியல் டிப்ளமா,
   ஆ) சர்க்கரை தொழில் நுட்பவியல் டிப்ளமா
   இ) ரப்பர் பிளாஸ்டிக் தொழில் நுட்பவியல் டிப்ளமா.

4. அச்சுத் தொழில் நுட்பவியல் பயிலகம், சென்னை.

   அச்சுத் தொழில் நுட்பவியல் டிப்ளமா அளவிலும் சான்றிதழ் அளவிலும் பயிற்றுவிக்கப்படுகின்றது.

5. மாநில வணிகவியல் பயிலகம், சென்னை.

   அ) வணிகவியல் செயல் முறை டிப்ளமா

   ஆ) விற்பனை முறைப் பாடத் திட்டம்-சான்றிதழ்.

பள்ளியிறுதி ஆண்டில் தேர்ச்சி பெற்றவர்களும், அல்லது அதற்கு இணையான படிப்பு பெற்றவர்களும் மேற்கூறிய டிப்ளமா பாடத்திட்டங்களில் சேருவதற்கு தகுதியுடையவர் ஆவார்கள்.

6. ஓட்டல் நிர்வாகமும் சமையற் கலையும் மற்றும் உணவியல் ஊட்டநெறிக் கல்லூரி, சென்னை

இக்கல்லூரியில் ஓட்டல் நிர்வாகம், சமையற்கலை, உணவியல் ஊட்ட நெறிக்கலை சம்பந்தமாக டிப்ளமா மற்றும் சான்றிதழ் அளவுகளில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. டிப்ளமா பாடத் திட்டத்தில் சேருவதற்கு புகுமுக வகுப்புத் தேறியவர்களும் சான்றிதழ் வகுப்புகளில் சேருவதற்குப் பள்ளியிறுதி வகுப்பில் தேறியவர்களும் தகுதியுடையவர்களாவார்கள்.

மேற்கூறிய சிறப்புப் பயிலகங்கள் தவிர திரைப்படவியல் பயிலகம் ஒன்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்ககத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது. அப்பயிலகத்தில் டிப்ளமா அளவிலும், சான்றிதழ் அளவிலும் திரைப்பட எடிட்டிங், நடிப்புக்கலை, இயக்குதல், மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல் முதலான படப்பிடிப்பு சம்பந்தமான பல பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல் டிப்ளமா பாடத்திட்டத்தில் சேருவதற்குப் பட்டப் படிப்பும், நடிப்புக்கலை சான்றிதழ் பாடத் திட்டத்தில் சேருவதற்குப் பள்ளியிறுதி ஆண்டிலும் தேறியிருத்தல் வேண்டும். மற்ற பாடத் திட்டங்களில் சேர விரும்புவோர் புகுமுக வகுப்பில் தேறியவர்களாக இருத்தல் வேண்டும்.

**படிப்பு உதவித் தொகை — கடன் வசதி**

கீழ்க்கண்ட வகையான படிப்பு உதவித் தொகை - கடன் வசதிகள் தொழில் நுட்பக் கல்விநிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் தேவை மற்றும் திறமையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

1. ராணுவச் சேவை படிப்பு உதவித் தொகை
2. அரசியல் தியாகிகள் படிப்பு உதவித் தொகை
3. பர்மா, இலங்கை அகதிகள் படிப்பு உதவித் தொகை.
4. தொழில் நுட்பக் கல்வித் துறை படிப்பு உதவித் தொகை.
5. ஷெட்யூல்டு வகுப்பினர், மலைச்சாதியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கான மத்திய மாநில அரசுகளின் படிப்பு உதவித் தொகை.
6. உயிர் நீத்த அரசு ஊழியர்கள் படிப்பு, உதவிதொகை
7. இந்திய அரசாங்க தேசிய படிப்பு உதவித்தொகை.
8. கட்டண சலுகைகள்.
9. தமிழ்நாடு கல்விக் கடன் வசதிகள்.
10. பரிசுகள் மற்றும் கட்டளைகள்.

**மாணவர்கள் படிப்புக்காக ஆகும் அரசின் செலவு :**

தொழில் நுட்பக் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனுக்காகவும் அவனுடைய பயிற்சிக்காலம் முடிய அரசு செலவிடும் தொகை 1978-79 நிதியாண்டு கணக்கின்படி கீழ்வருமாறு:

பொறியியல் கல்லூரி மாணவர்க்கு —ரூ. 15,800 -



தொழில் நுட்பப் பயிலக மாணவர்க்கு —ரூ. 5,200

தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி மாணவர்க்கு —ரூ. 4,500

**தன்னாட்சி**

புதிய கல்வித் திட்டங்கள், புதிய தேர்வு முறைகள் இவைகளில் சுதந்திரமாக பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்கள் செயலாற்ற உதவும் வகையில் பல உயர்மட்டக் குழுக்களின் பரிந்துரைக்கேற்ப சில பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை ஒரு பல்துறை தொழில் நுட்பப் பயிலகத்திற்கு அனைத்துப் பாடத்திட்டங்களுக்கும், ஐந்து பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பாடத் திட்டம்-துறைக்கு மட்டும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது. இத் தன்னாட்சி வழங்கும் திட்டத்தை நன்கு இயங்கிவரும் வேறு சில பல்துறை தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் விரிவாக்கும் திட்டம் ஆலோசனையில் உள்ளது.

**சமுதாய வளர்ச்சிக்கான தொழில் நுட்பப் பயிலகங்கள் :**

கிராமப்புற அபிவிருத்தி திட்டங்களாகிய வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், சாலைகள் மற்றும் கிராமப் புற போக்குவரத்து, குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்ப்பாசனம், விவசாயப் பண்ணைகளுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் மின்சாரவசதிகள் அளித்தல், விவசாயம் சார்ந்த தொழில் அபிவிருத்தி விவசாய உபகரணங்கள் பழுது பார்க்கும் பணிமனைகள் அமைத்தல் முதலான திட்டங்களுக்கு உதவும் பணியில் தொழில் நுட்பத்துறை பயிலகங்கள் சிறப்பான பங்கு ஏற்கும் நோக்கத்தோடு அரசினால் செட்டிநாடு, கோவை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் உள்ள மூன்று பல் தொழில் நுட்பப் பயிலகங்கள் சமுதாய வளர்ச்சி பல்துறை தொழில் நுட்ப பயிலகங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இப் பயிலகங்களுக்கு இத்திட்டத்திற்காக, ஆகும் செலவினங்களை முதல் ஐந்தாண்டு காலத்திற்கு மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இப்பயிலகங்கள் விரைவில் செயல்பட உள்ளன.

**புதிய பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் :**

தற்போது தமிழ் நாட்டில் தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பல்

துறை தொழில் நுட்பப் பயிலகங்கள் இல்லை. இதைக் கருத்திற்கொண்டு, அரசு முதலில் தர்மபுரி மாவட்டத்தில் 1979-80 நிதியாண்டில் ஒரு அரசு பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகம் நிறுவத் தீர்மானித்துள்ளது.

**சென்னையில் கொழும்பு திட்ட ஆசிரியர் கல்லூரியின் அங்கம் :**

சிங்கப்பூரிலுள்ள கொழும்பு திட்ட ஆசிரியர்கல்லூரி, தொழில் நுட்ப டிப்ளமா கல்வித்திட்டம், பாடத்திட்ட அமைப்பு, வளர்ச்சி மற்றும் கல்வி நிர்வாகம் ஆகிய பல்வேறு திட்டங்களை சிங்கப்பூர் மற்றும் வேறு பல மண்டல நாடுகள் சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்த உதவும் ஒரு நிறுவனமாக விளங்குகிறது. இக்கல்லூரி கீழ்க்காணும் நோக்கங்களுக்காக எல்லா உறுப்பினர் நாடுகளையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்துறைத் தொழில் நுட்பப் பயிலகங்களை இக்கல்லூரியின் இணைந்த பயிலகங்களாக அமைக்க கருத்து தெரிவித்தது.

1. தொழில் நுட்ப டிப்ளமா கல்வி மற்றும் பயிற்சிமுறைகளில் உரிய நாடுகளின் புதிய கண்டுபிடிப்புகளை அறிவதில் அக்கல்லூரியுடன் ஒத்துழைத்தல், புதிய முறைகளைக் கண்டறிதல், அவைகளைப் பரப்ப அறிக்கை தயாரித்தல்.

2. அக்கல்லூரியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட துறைகளில் தொழில் நுட்பப்பணியாளர் நடவடிக்கை ஆராய்தல், பாடத்திட்ட அமைப்பு பயிற்றல் - கற்றல் - செயல் முறை சம்பந்தப்பட்டவற்றில் பிற நாடுகளுக்கு உதவும் வளர்ச்சிப்பணி மேற்கொள்ளுதல்.

3 அக்கல்லூரியின் பயிற்சி திட்டங்களுக்குப் பயன்படும் மாதிரி நிகழ்ச்சி அறிதல் மற்றும் இதர இணையான பொருள் பற்றி அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் பிற நோக்கங்கள்.

மேற் சொன்ன நோக்கங்களுக்காக இந்தியாவில் சில முன்னேற்றம் அடைந்துள்ள சில பயிலகங்களை அதன் இணைக் கல்லூரியாகத் தேர்ந்தெடுத்துள்ளது அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட



# தமிழ்நாடு தொழில்நுட்பப் பள்ளியின் சாதனை

மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான சாதனங்களை உருவாக்குவதில் மதுரையிலுள்ள தமிழ்நாடு பாலிடெக்னிக் முன்னணி நிற்கிறது. குறிப்பாக கிராமப்புற மக்களுக்குப் பயன்படும் சாதனங்களாகவும், மாணவர்களுக்கு இன்றியமையாத உபகரணங்களாகவும் இவை இருக்கின்றன.

தமிழ்நாடு பாலிடெக்னிக் 'மெதநே' வாயு உற்பத்திச் செய்யக் கூடிய சாதனம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. வாயு உற்பத்தி செய்ய காய்கறிக் கழிவுகள் சமயலறைக் கழிவுப் பொருட்கள், தோட்டத்திலுள்ள புல் பூண்டுகள் முதலியவை பயன்படுத்தப்படுகின்றன. இது எளிதாகவும் குறைந்த செலவில் செய்யக்கூடியதாகவும் உள்ளது.

தமிழ்நாடு பாலிடெக்னிக், சைக்கிளில் பொருத்தக்கூடிய மரக் கடைசல் இயந்திரத்தையும் உருவாக்கியிருக்கிறது. எளிதாக எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பதால், கிராமக் கலைஞர்களிடம் இதற்குப் பெரும் வரவேற்பு இருக்கிறது.

மரவேலைகளைச் செய்வதோடு மட்டுமின்றிக் கருவிகளைக் கூர்மைப்படுத்தவும் இது பயன்படும். காந்தி கிராம கிராமீயப் பல்கலைக் கழகம், இந்த லேத்துக்களைப் பல்கலைக் கழகத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் பயன்படுத்தி வருகிறது.

மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கு ஒரு புதிய முறையையும் பரீட்சார்த்தமாகத் தமிழ்நாடு பாலிடெக்னிக் கையாண்டு வருகிறது. இம்முறையில் செயல் முறை விளக்கமும் வாய்மொழிப் போதனா மொழி முறையும் ஒருங்கே கையாளப்படுகின்றன.

ஆசிரியர் உதவியின்றித் தாமே புரிந்து கொள்வதற்கு வசதியாக ஆய்வுக்கூட வசதியும் செயல் முறையை விளக்குவதற்காக டேப் ரிக்கார்டும், வரைபடங்களை விளக்குவதற்காக நவீன சாதனங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## மேல் நிலைப் பள்ளிகளில்..!

சாதாரண மேல் நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில்பவர்கள் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வழக்கமாகவுள்ள கட்டணச் சலுகைகள் இங்கும் உண்டு.

மேல்நிலைப் பள்ளிகளில் எந்த மொழியைப் பாடமொழியாகக் கொண்டு பயின்றாலும், பின் வருமாறு ஆண்டுதோறும் சிறப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்:

| | | |
|---|---|---|
| சிறப்புக் கட்டணம் | ... | ரூ. 15 |
| வசதிக் கட்டணம் | ... | ரூ. 10 |
| ஆய்வகக் கட்டணம் | ... | ரூ. 20 |

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைகள் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 4 மாணவர்களுக்குப் புதியதாக வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகைகளைப் பெறுபவர்கள் தமது மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடியும் வரை அத் தொகைகளைப் பெறலாம். தாங்கள் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பள்ளியிலேயே மேல் நிலைப் பள்ளி வகுப்பைப் படித்தாலும் சரி, வேறு பள்ளிகளில் படித்தாலும் சரி, அவர்களுக்கு இச் சலுகை உண்டு.



இணைக் கல்லூரிகளில் சென்னை அடையாறில் உள்ள மையப் பல் துறைத் தொழில் நுட்பப் பயிலகமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கோள் இயல் கூடம் :**

கோள் இயல் கூடம் விண் ஆராய்ச்சியாளர்களுக்கும், பொறியியல் பயிலும் மாணவர்களுக்கும், பொதுவியல் மாணவர்களுக்கும் அவர்களின் பாடங்களை செவ்வனே கற்க மிகவும் உதவுகிறது. கோள் இயல் கூடம் பொது மக்களுக்குப் பொது அறிவை வளர்ப்பதோடு இளம் பள்ளி மாணவர்களை அறிவியலில் நாட்டமுறச் செய்து, பிற்காலத்தில் வானிலை ஆராய்ச்சியில் ஈடுபட ஊக்கம் ஊட்டுகிறது. ஆதலால் இதனின் சிறப்பையும் பயனையும் உணர்ந்த தமிழக அரசு சேலம் பொறியியற் கல்லூரியில் ரூ. 2.25 லட்சம் செலவில் கோள் இயல் கூடம் ஒன்றினை நிறுவியுள்ளது. இக்கூடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 6.2.1979 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இக்கோள் இயல் கூடம் தென்னிந்தியாவிலேயே இரண்டாவதும் ஆகும்.

தொழில் நுட்பக் கல்வியின் தரத்தையும் மேம்பாட்டையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஆசிரியர்களுக்கு மேற்படிப்பிற்கு வசதி செய்தல், தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி அளித்தல், தொழிற்கூட பயிற்சி அளித்தல், மாணவர்களுக்கான தொழில் நுட்பப் பாடப் புத்தகங்கள் உருவாக்குதல், குறுகிய கால வகுப்புகள் நடத்துதல், கருத்தரங்குகள் நடத்துதல், பலதரப்பட்ட பாடத்திட்டங்கள் உருவாக்குதல், பணியாற்றும் பொறியாளர்களுக்கான தொடர் கல்விக்கான திட்டங்கள் தீட்டுதல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் தொழில் நுட்பக் கல்வி, வரும் ஆண்டுகளில் மேலும் வளமும், வலிவும் பெற்றுப் பொலிவுறும் என்பதில் சிறிதளவும் அய்யமில்லை.



# நட்புறவுப் பாலம்!

திரு ம. சிவதாணு பிள்ளை
செயலர்
தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்கம்

**மா**ணவனை வளர்ப்பதில், புத்தகத்தில் அச்சடித்துள்ள எழுத்துக்கள் மாத்திரம் பங்கு கொள்வதில்லை. அவனுடைய அறிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தையும், உள்ளத்தையும் வளர்ப்பதில், அவனைப் பெற்றெடுத்த தாய் தந்தையரும், கல்விபோதிக்கும் ஆசிரியரும் பெரும் பங்கு கொள்கின்றனர் என்பதில் ஐயமே இல்லை.

நவீன காலக் கல்விமுறைகளில் பெற்றோரின் அரவணைப்பில் இருந்து கொண்டே, மாணவன் கல்விக்கூடம் சென்றுகல்வி பெற வழி ஏற்பட்டபின், மாணவனைப் பற்றிய முழுப்பொறுப்பையும் ஆசிரியர்களின் மீதே சுமத்துவது நியாயமற்ற செயலாகும். ஆகவே, கல்வியாலும், பண்பாலும், பண்பட்ட நிலைக்கு உயர்ந்துள்ள இந்த நாகரிக யுகத்தில், அவரவர் பொறுப்பை அவரவர் புரிந்து கொண்டதற்கான அத்தாட்சியாக விளங்குகிறது, இன்று உலகெங்கணும் தன்கிளைகளைக் கொண்ட ''பெற்றோர் ஆசிரியர் கழகம்''

ஆசிரியர்களும், மாணவர்களும், இவர்களோடு தொண்டுள்ளம் கொண்டவர்களும், கல்வியில், கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட நல்லவர்களும், ''பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்'' உறுப்பினர்கள் என்ற பட்டம் பெற்று இச்சமுதாயத்திற்கே நற்பணி புரிந்து வருகின்றனர்.

மாநில அளவிலான கழகமும் மாவட்ட அளவிலான கழகங்களும், ஒவ்வொரு பள்ளியிலும், இணைந்துள்ள கழகங்களுமாக; அருகு போல் வேரோடி, ஆல் போல் தழைத்துள்ள இக்கழகம், அகில உலகெங்கணும் பரவியுள்ள, சாதி, மத, இன, மொழி, அரசியல் வேற்றுமைகளளைக் கடந்ததோர் சமூக அமைப்பாகும்.

தரமான பண்பட்ட கல்வியை அளிப்பதிலும், பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்வதிலும், பெற்றோர் ஆசிரியர்களிடையே கூட்டுறவையும், நட்பு நல்ல சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதிலும் பெரும்பணி புரியும் இக்கழகத்தின் நோக்கங்களாந் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

குழந்தைகளின் உடல், உள்ளம், உயிர் ஆகியவற்றின் வளர்ச்சிக்குரிய தரமான கல்வியையும் ஒழுக்கத்தையும் அளிப்பது.

சமுதாய நலன்நாடும்சிறந்த குடிமக்களை உருவாக்குவது

பெற்றோர் ஆசிரியர்களிடையே நெருங்கிய உறவையும் கூட்டு மனப்பான்மையையும் வளர்த்து, குழந்தைகளை வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குதல்.

பள்ளிகட்கு அவ்வப்போது தேவைப்படும் கட்டடங்கள் விளையாட்டுத்திடல், தளவாடங்கள், அறிவியற் கருவிகள், கழிப்பிடங்கள், மற்றைய தேவைகள் இவற்றையெல்லாம் அவ்வப்போது அறிந்து அவற்றைப்பெற கூட்டு முயற்சி மேற்கொள்ளல்.

தொடக்கப்பள்ளியில் ஏற்படும் விரயத்தைத் தவிர்க்க. ஆக்க வழிகளைக் கையாளுதல்

மேல்நிலைப்படிப்பில், குறிப்பாகத் தொழிற்பிரிவில் வளர்ச்சிகான தனி முயற்சிகளை மேற்கொள்ளல்.

முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி ஆகியவற்றின்வெற்றிக்கு ஆக்கப் பூர்வமாக ஆவன செய்தல்

*1895*ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அலிஸ் மெக்லெள்ளன்

பெரினி' என்ற அம்மையாரால் (வழக்கறிஞரின் மனைவி) தோற்றுவிக்கப்பட்ட இக்கழகம், இன்று உலகம் முழுவதும் தனிக் கிளைகளைப் பரப்பி, நற்பணி புரிகிறது.

நமது இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகராக விளங்கும் தில்லியில் 1952ம் ஆண்டில் பெற்றோர் ஆசிரியர் கழகம் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில், 1964 ஆம் ஆண்டில்தான் இக்கழகம் நிறுவப்பட்டிருப்பினும் குறுகிய கால அளவில் செய்துள்ள சாதனைகள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்கனவாகும்.

1978-79ஆம் ஆண்டில் ஏறக்குறைய 20,000 பள்ளிகள், மாநிலப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இக்கழகத்தின் சாதனைகளை பட்டியலிட்டுக் கூறமுடியாதெனினும் குறிப்பாகவும், அதனினும் சிறப்பாகவும், கீழ்வரும் சாதனைகளைக் குறிப்பிடலாம்.

1. மாணவ, மாணவிகளின் பேச்சு, எழுத்து, கற்பனை, இசை ஆர்வத்தை ஊக்குவிக்க காந்தியடிகள் பிறந்தநாள்விழா, குழந்தைகள் தின விழா, பாரதியார் தினவிழா, தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, திருவள்ளுவர் தின விழா போன்ற நாட்களில் கட்டுரை, பேச்சு, இசை, ஓவியப் போட்டிகள் கல்வி மாவட்டவாரியாக நடத்துதல்

2. அரசுத் தேர்வகத்தில் இருந்து பெறப்பட்ட துணிகளை சீர்செய்து மாவட்டக் கிளைகளின் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு வழங்குதல்.

3. ஆசிரியர் திருநாளை முன்னிட்டு ஆசிரியர்களுக்குக்கட்டுரைப் போட்டி வருவாய் மாவட்ட அளவில் நடத்திப் பரிசு வழங்குதல்.

4. வருவாய் மாவட்ட அளவில் பெற்றோர் தினம் கொண்டாடுதல்.

5. 10, 11வது வகுப்புப் பொது தேர்வில் 100 சதம் தேர்ச்சி காட்டிய 93 பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல்.

6. சிறந்த முறையில் அகமதிப்பீட்டுத் திட்டத்தைச்செயல் படுத்திய 48 பள்ளிகளுக்குப் பரிசுப் புத்தகங்கள் அளித்தல்.

7. பள்ளிகளில் சிறந்த முறையில் செயல்படும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்குக் கேடயங்கள் வழங்குதல்



8. பள்ளிகளின் வளர்ச்சிக்காக கண்காட்சி, சீரமைப்பு மாநாடு நடத்துதல்.

9. கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 7 கிராமங்கள் வளர்ச்சியடைய நிதி உதவி அளித்தல்.

ஒவ்வொரு பள்ளியைச் சார்ந்த கழகங்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது, அவ்வூர்களின் அரிமா சங்கம் போன்ற பிற சங்கங்களின் துணை கொண்டோ பள்ளிக்கென குடிநீர்த் தொட்டி அமைத்தல், விளையாட்டு நிலம் பெறுதல், அதிகப்படியான வகுப்பறைகட்குக் கட்டடம் கட்டுதல், பாடபோதனைக்குரிய பொருள்கள், மின்விசிறி, ஒலிபெருக்கி, வானொலிப் பெட்டி, டேப் ரிக்கார்டர், தொலைக்காட்சி/கருவி, முதலுதவிப் பெட்டி, மரச்சாமான்கள் ஆகியவற்றை வாங்குதல் முதலிய ஆக்கப்பணிகளைச் செய்துள்ளன.

இவற்றையெல்லாம் காணும்போது மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதிலும், பள்ளியின் வசதிகளை அதிகரித்துக் கொடுப்பதிலும், மாணவர்களுக்குச் சத்துணவு அளித்தலிலும், மதிய உணவுத்திட்டத்தில் பங்கு கொள்வதிலும், ஓய்வுநேர விளையாட்டுக்கள் அமைப்பதிலும், தோட்டம் போடுவதிலும், உடற்பயிற்சி, உடல் நலக் கல்வி, விளையாட்டு விழாக்கள், இளைஞர் விழாக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி, மாணவர்களை ஊக்குவிப்பதிலும், பள்ளியில் நூல் நிலையம் அமைப்பதிலும், பொருட்காட்சிச் சாலை ஏற்படுத்துவதிலும் பெற்றோர் ஆசிரியர் இடையே நல்லெண்ணத்தையும் நட்புறவையும் உண்டு பண்ணுவதிலும், இளைஞர்கள் கல்வி, சமூகம், பொருளியல் ஆகிய துறைகளில் ஆக்கம் பெறச் செய்தலிலும், சிறுவர்களை நல்ல குடிமக்களாகத் திகழச் செய்வதில் மாணவர்களின் சிந்தனை மற்றும செயல்திறனைப் பெருகச் செய்வதிலும், தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை இளைஞர்களிடையே ஏற்படுத்தி நாட்டை வளமுறச் செய்வதிலும் இளைஞர்களைக் கலையுணர்வு பெறச் செய்வதிலும், சமூகத் தொண்டாற்றச் செய்வதிலும், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் எடுத்துக் கொண்டுள்ள பங்கு மகத்தானது என்பது தெள்ளென விளங்கும்.

ஒரு காலத்தில், பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கட்கும், மாணவர்களின் பெற்றோர்க்கும் எவ்விதத் தொடர்புமே இல்லாமல் இருந்ததுண்டு.

குடும்பச் சூழ்நிலையின் காரணமாக மாணவர்களின் மனமும், நடத்தையும் மாறுபடுவதை ஆசியர்கள் அறியாமலும், பள்ளியில் நிலவும் சூழ்நிலையால் மாணவர்களின் குணங்கள் மாறுவதை பெற்றோர்கள் உணராமலும் (இவற்றின் உண்மையான காரணத்தை அறிய முற்படல்) ஆசிரியரிடம் திறமையில்லையெனப் பெற்றோரும், பெற்றோர்கள் வளர்க்கும் முறை சரியில்லையென ஆசிரியர்களும் ஒருவரையொருவர் குறைபட்டுக்கொண்ட காலமும் இருந்தது. ஆயினும் வீதிகள் தோறும் பள்ளிகள் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து எல்லா பள்ளிகளிலும், பெற்றோர் ஆசிரியர் கழகம் நிறுவப்பட்டபின், பெற்றோர் ஆசிரியர்களிடையே நட்புறவுப் பாலம் அமைக்கப்பட்டுவிட்டது. இரு தரப்பினர்க்குமிடையே நட்புறவு மேலோங்கி வளர்ந்துள்ளது. இரு சாரரும் தத்தம் கடமையைப் புரிந்து கொண்டதில் மாணவர்களின் வளர்ச்சி மெருகிட்ட பொன்னாக ஒளி வீசுகிறது.

தாய் தந்தையரின் சொத்துக்களான குழந்தைகளைச் சான்றோராக்கும் தெய்விகப்பணியை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் ஆசிரியர்கள். அத் தெய்விகப் பணிக்குமாணவச்செல்வங்களைக் காணிக்கையாக்கும் அற்புதப் பணிக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டவர்கள் பெற்றோர்கள். இவ்விருவரின் கூட்டு முயற்சியால் மாணவச் செல்வங்கள் நன்னெறி படுத்தப்படும்போது, அவர்கள் பட்டை தீட்டிய வைரங்களாக ஒளிர்கின்றார்கள்!

# காலத்தில் மருந்தடித்து காத்திடுவோம் நெற்பயிரை!

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், காரக்கோட்டை கிராமத்தில் சமீபத்தில் வீசிய புயல் மற்றும் பலத்த மழைக்குப்பின் சுமார் 1000 ஏக்கர் நெல் பயிரில் குருத்துப் பூச்சி, இலை சுருட்டுப்புழு ஆகிய பூச்சிகள் தாக்கி, வயல்கள் எல்லாமே சாரி சாரியாகத் தீப்பிடித்தது போல் எரிந்து காணப்பட்டன. நாங்கள் பல்வேறு மருந்துகளை அடித்தும், பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், குடுமியான்மலை, வேளாண் ஆராய்வு நிறுவன இயக்குநர் அவர்களிடத்தில், நாங்கள் நேரிடையாகச் சென்று தெரியப்படுத்தினோம். உடனே அவர்கள் இந்த குடுமியான்மலை, அறந்தாங்கி ஆகிய இடங்களிலிருந்து விவசாய அலுவலர்கள் விரைந்து வந்து பாாவையிட்டு, தேவையான மருந்துகளையும், விஷைத் தெளிப்பான்களையும் கொண்டு வந்து சேர்த்து, வயலுக்கு அன்றே போர்க்கால நடவடிக்கை போல் மருந்தடித்தார்கள்.

மருந்தடிக்கும்போது மருந்தடிப்பதைப் பார்வையிடவும் மருந்து அடிக்கப்பட்ட பகுதிகளைக் கணக்கிடவும் என்று தனித்தனியாக விவசாய அலுவலர்கள் பிரிந்து செயல்பட்டார்கள். மேலும் மருந்தடிக்கு முன்னரும் மருந்தடித்த பின்னரும் பூச்சிகள் எண்ணிக்கை, பூச்சிகளின் இறப்பு விகிதம் போன்றவைகளையும் கணக்கெடுத்தார்கள். எங்கள் வயல்களில் மிதைல் பாரத்தியான் மருந்தையும், டிடிடீ மருந்தையும் கலந்து விசைத் தெளிப்பான் மூலம் மருந்தடித்தார்கள். இவ்வாறு போர்க்கால நடவடிக்கை போல மருந்து அடித்ததன் பயனாக, எங்கள் வயல்களைக் தாக்கிய பயங்கரமான பூச்சிகள் அழிக்கப்பட்டு, பயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இதே போல பயிர்களைத் தாக்கக்கூடிய பூச்சி, நோய்களுக்கு காலா காலத்தில் உரிய மருந்துகளை உரிய அளவு தக்சபடி அடித்தால் பயிர்களைக் காப்பாற்றலாம் என்பது நாங்கள் அனுபவ பூர்வமாக உணர்ந்த உண்மை.

—சி. மாணிக்கத் தேவர்
சித. காளியப்ப செட்டியார்,
காரக்கோட்டை கிராமம்
அறந்தாங்கி ஒன்றியம்.



## நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் பழங்குடி மக்கள்

நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவில் 3,403 குரும்பர்களும், 705 இருளர்களும், 5,178 பனியர்களும் வசிக்கிறார்கள்.

மத்திய அரசின் வழிமுறைகளின் பேரில் தமிழ்நாட்டில் நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப சில மாறுதல்கள் செய்து துணைத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டுப் பகுதிகள் வரையறுக்கப்பட்டன. அதாவது குறைந்தது, 10,000 மக்கள் வாழும் தொடர்ச்சியான கிராமங்களில் 50 விழுக்காடு, பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள் துணைத் திட்டப் பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற பழங்குடியினர் பகுதிகள் மேற்சொன்ன விதிமுறைக்குட்படாததால், இம்மாவட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனினும், 1978-83-ம் ஆண்டிற்கான மத்திய கால திட்டத்தின்கீழ் பண்டைய பழங்குடியினருக்கான திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய அரசின் ஒப்புதலுடன் இத்திட்டம் செயல்படும்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லாப் பண்டையப் பழங்குடியினரும், சமுதாயப் பொருளாதார முன்னேற்றம் பெறுவார்கள். இதற்கிடையில், அரிசனம் மற்றும் பழங்குடி நலத்துறையின் மூலமும், நீதித்துறையின் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிற மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் கூடலூர் தாலுகாவிலுள்ள 917 ஆதிவாசிகளுக்கு 1,258 04 ஏக்கர் நிலங்கள விவசாயத்திற்கு ஒப்படைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

[சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட தகவல்]

# மிகவும் நம்பிக்கையூட்டும் இணையற்ற ஆடைகள்...

## கோ-ஆப்டெக்ஸ்

அறிமுகப்படுத்தும்
ஈடு இணையற்ற
புதியவகை

# பாலியஸ்டர்

சர்ட்டிங்குகள்

எமது பிரசித்திபெற்ற விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





100% பாலியஸ்டர்



80X20 பாலியஸ்டர் பிளண்டட்



80X20 பாலியஸ்டர் பிளண்டட்



67X33 பாலியஸ்டர் பிளண்டட்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# விரைந்து செயலாற்றும் வீட்டு வசதி வாரியம்

தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதித் திட்டங்களைச் செயலாற்றுவதில் திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையில் சென்னையில் ஒரு பிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப் பிரிவாக மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 1961-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டது.

பின்னர் வேலூர், சேலம், ஈரோடு ஆகிய இடங்களிலும் வீட்டு வசதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டன.

வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 350-க்கு மேற்படாது, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டத்தின்கீழ், வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும், தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்தும் வீடுகளைக் கட்டித் தருகிறது. இவ்வீடுகளுக்குச் செலவு, வீடு ஒன்றுக்கு ரூ. 8,000. இவ்வீடுகள் ஒதுக்கப் பெற்றவர்கள் வீட்டின் செலவுத் தொகையில் 10 சதவீத அளவிற்கு முன்பணமாக அளிக்க வேண்டும். மீதமுள்ள தொகை 240 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இதற்கான தவணை முறை வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம். 1978-79-ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியத்தால் 1,643 வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும். ரூ. 55.61 இலட்சம் செலவில் இவ்வீடுகள் கட்டப்படும். 1979-80-ஆம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் 1,800 குடியிருப்புகளை ரூ. 83.28 இலட்ச செலவில் இத்திட்டத்தின்கீழ் கட்டும்.

**குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்:**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஆண்டு வருவாய் ரூ. 4,200-க்கும் ரூ. 7,200-க்கும் இடைப்பட்ட வருவாயினரின் நலனுக்காக இத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீட்டின் தற்போதைய உச்சவரம்புச் செலவு ரூ. 18,000 வீட்டின் செலவினத்தில் 25 சதவீதத்தை உடனடியாக முன்பணமாகச் செலுத்தும்படியான விதி இத்திட்டத்தில் உள்ளது. மீதியுள்ள தொகை 20 ஆண்டுக் காலத்தில் மாதத் தவணைகளாக, ஆண்டொன்றுக்கு 8.5 சதவிகித வட்டியுடன் வசூலிக்கப்படும்.

1955-56-ஆம் ஆண்டு முதற்கொண்டு இதுவரை இத்திட்டத்தின் கீழ் 9,684 வீடுகளை, வீட்டு வசதி வாரியம் கட்டி முடித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 337.02 இலட்ச மதிப்பில் 4,104 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80-ஆம் ஆண்டில், வீட்டு வசதி வாரியம் 4,500 வீடுகளைக் கட்ட ரூ. 396.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடம் பெறும் கடன் தொகையும், வீட்டு வசதி வாரியத்தின் சொந்த நிதியாதாரங்களும் இத்திட்டத்தைச் செயற்படுத்த பயன்படுத்தப்படும்.

**நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்**

இத்திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கும் ரூ. 18,000-க்கும் இடைப்பட்ட வருமானம் உள்ள நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்குப் பொருந்துவதாகும்.

நடுத்தர வருவாய்த் தொகுதியினரில் பயனடைவோரின் பண வசதியைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டுக்கான விலை உச்சவரம்பு ரூ. 42,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவினத்தில் 25 சதவீதம் முன்பணமாகவும், மீதமுள்ள தொகை மாதத் தவணையாகவும் 15 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டி விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது.

1959-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் முதற் கொண்டு, இதுவரை 6,383 வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1978-79-ஆம் ஆண்டில் 2,226 வீடுகள் ரூபாய் 363.60 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. 1979-80 ஆம் ஆண்டில், வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தின் கீழ், தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும், 2,400 வீடுகளைக் கட்ட ரூபாய் 432.35 இலட்சம் செலவிட உத்தேசித்துள்ளது.

**தொழிலாளர்களுக்கான மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கென குடியிருப்புகளைக் கட்டி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. மதுரை மாவட்டம், பசுமலையில் ரூ. 20 இலட்சம் செலவில் 150 குடியிருப்புகளைக் கட்டும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான 1978-79-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 20 இலட்சம். 1979-80-ஆம் ஆண்டிற்கும் இதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் 100 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். 1979-80 ஆம் ஆண்டில் 110 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர்ப்புறப் பகுதிகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டம் "முழு வசதிகளடங்கிய மனைகள்" திட்டமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணி வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் பொதுமக்களுக்கான வசதிகள், வாணிபக் காரியங்கள், சமுதாயக்கூடங்கள், சிறு கைத் தொழில்கள் ஆகியவைகளின் தேவைகளுக்கும் போதுமான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[தமிழ்நாடு சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட 'தமிழ் நாட்டில் வீட்டு வசதிக் குறித்த கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]

# வெண்பாப் போட்டி

## 'பெரியார் பெரும்புகழே பேசு'

'பெரியார் பெரும்புகழே பேசு' என்னும் ஈற்றடி கொண்ட வெண்பாப் போட்டிக்குக் கவிஞர்கள் எழுதியனுப்பிய நூற்றுக் கணக்கான வெண்பாக்களில், புலவர் திரு ந. கௌதமன் எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசுபெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த சில வெண்பாக்களும் இங்கே இடம் பெறுகின்றன.

மூடவிருள் நீக்கும் முழுநிலவாய், செந்தமிழர்
வாடல் அகற்றும் வளமழையாய்,-தேடற்(கு)
உரியவற்றைக் காட்டும் ஒளிவிளக்காய் வாழ்ந்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் ந. கௌதமன், எம்.ஏ., செந்தலை.

பாழ்படுத்தும் சாத்திரத்தை பாங்கொழிக்கும் சாதியை
கீழ்படுத்தும் பெண்ணடிமை போன்றவற்றை - வீழ்த்தி
உரியவழி யெல்லாம்மேற் கொண்டுழைத்து யர்ந்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் வே. கோதண்டராமன், பி.ஏ.,
கணியம்பாடி.

தன்மானம் காத்துத் தமிழினத்தை வாழ்விக்கத்
தன்வாழ்வை, பேருழைப்பைத் தந்ததனால் - என்றும்
உரிய நெறிமுறையால் ஊர்தோறும் நெஞ்சே
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் கே. ஏ. இராசன்,
குமரேசபுரம்

வித்தாம் பகுத்தறிவை மேதினியெங்கும் விதைத்து
நித்தமும் தன்மான நீர்பாய்ச்சி-மெத்த
அறிவுப் பயிர்விளைத்த ஆய்சொல் லுழவர்
பெரியார் பெரும்புகழே பேசு.

—தமிழருவி, கொண்டிசெட்டிபட்டி.

சான்றான்மைத் தேரேறி சாதியெனும் நச்சரவம்
தான்வந்து தீண்டாது தீவிரமாய் - நின்ற
அரிமாவாம் எங்கள் அழகுத் தலைவர்
பெரியார் பெரும்புகழே பேசு.

—தி.சிவசுப்பிரமணியன்,
தென்காசி.

பொன்போற் புகழ்பெற்றார்; நம்பொருட்டுத் துன்புற்றார்;
அன்பால் அனைவரையும் ஆட்கொண்டார் - என்றும்
உரியார் தமிழர்தம் உள்ளத்தே; நெஞ்சே!
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் ப. வெள்ளை, பி.லிட்,
திருவில்லிபுத்தூர்.

தங்கம்போல் மேனிவெள்ளிக் கம்பியைப்போல் தாடிமுகம்
சிங்கம்போல் சொல்முழக்கம் கொண்டவராய் - எங்கும்
சரிவாழ்வு நாம்வாழத் தன்வாழ்வு ஈந்த
பெரியார் பெரும்புகழே பேசு!

—க. தங்கமுத்து, கோம்பை.

பண்டைப் பழம்போக்கைப் பட்டெரித்த தீப்பிழம்பு,
தொண்டால் பழுத்தபழம்; தூய்மையுரு-அண்டும்
வெறிப்பகையைச் சாய்த்தொழித்த வீறுடைய தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு!

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

தீண்டாமைத் தீங்கொழித்துத் தீதில் அறங்காத்து
வேண்டாத சாதியினை வேரறுத்து-மூண்ட
அறியாமைப் போக்கொழித்து ஆய்ந்துணரச் சொன்ன
பெரியார் பெரும்புகழே பேசு!

—கவிதாயுதன், பொன்மலை.

பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவர் :
புலவர் ந. கௌதமன், எம்.ஏ.,
செந்தலை, தஞ்சை மாவட்டம்.

சாதிப் பிரிவை சழக்கவ்களின் தீங்கருத்தை
மோதித்து ளாக்கி முயன்றுழைத்து-நீதி
நெறிகாக்க வாழ்வெல்லாம் நின்றுழைத்த தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு.

—முல்லை நடவரசு, ஜி. தும்மலப்பட்டி.

பெண்ணினம் முன்னேற்றம் பெற்றிடவே, ஓய்விலாத்
தொண்டாற்றி ஓங்குபுகழ் தான்பெற்றார்-தென்றலே!
அறிவூட்டும் நற்பணியில் ஆன்ற முதல்வர்
பெரியார் பெரும்புகழே பேசு.

—பெமினா, மம்சாபுரம்.

தன்மானத் தேரோட்டித் தாயகத்தோர் வாழ்வுயர்த்தி
துன்புற்றோர் இன்புறவே தோன்றியவர்-என்றும்
அறியாமைப் பேயகற்றி அச்சத்தைக் கொன்ற
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் சு. செயராமன், இராசபாளையம்.

பெரிதுந் தமிழ்நாடு பீடு கொளவே,
அரிய செயல்க ளமைத்தார்! - விரித்தால்.
உரிய புகழ்க்கே யுரியார்நம் தந்தை!
பெரியார் பெரும்புகழே பேசு!

—செஞ்சடையான், திருக்கழுக்குன்றம்.

மூத்த பகுத்தறிவால் முன்னேற்றக் கொள்கைகளால்
வாய்த்த தமிழினத்தின் வாலறிவன்! - யாத்த
வரலாற்றில் மூட வழக்கொழித்த ஆசான்!
பெரியார் பெரும்புகழே பேசு!

—சின்னு. இராமசாமி, கொண்டிசெட்டிபட்டி.

சாதி சமய கழக்கர்தம் பொய்ம்மலையை
மோதி அழித்திட்ட மேதையவர் - ஆதி
அறியார் அகத்திருளைப் போக்கும் பகலவன்
பொரியார் பெரும்புகழே பேசு.

—ந. கயல்விழி, சென்னை-11.

மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
கேடதனை முற்றும் களைந்திடவே - சாட
அரியே (று) எனவெழுந்த ஆற்றல்சால் தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு

—க. இலக்குமி, அருப்புக்கோட்டை.

சிந்தனை யின்றிச் சிறுத்திருந்த மானிடத்தின்
மந்தமதி நீக்க மணிக்கதிராய் வந்த
கிரிநிகர்த்த வல்லதொரு கீர்த்தி படைத்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—ரமணகுமார், சென்னை-1

சாதிக் கொடுமை சாக்காடாம் மூடமதி
வீதி வழிபோக்கி வென்றவரை - ஓதி
அறியார் இருந்தாலும் அன்னவரும் கேட்கப்
பெரியார் பெரும்புகழே பேசு!

—அ. காந்தி, எம்.ஏ. பி.எஸ்சி. பி.டி.
தேவத்தூர்.

மூடத் தனத்தின் முதுகெலும்பைத் தான்முறித்து
வாட வருஞ்சாதி வம்பழித்துத் -தேட
அரியபல தொண்டால் அனைத்துலகும் போற்றும்
பெரியார் பெரும்புகழே பேசு!

—புலவர். க. கோபண்ணன், பி.லிட், வரகனேரி.

அஞ்சாமை நேர்மை அறிவுடைமை மாற்றாரை
எஞ்ஞான்றும் மதிக்கின்ற பேராண்மை-செஞ்சொல்லின்
அரிமாவாய் முழங்கி ஆர்ப்பரித்த போர்மறவர்
பெரியார் பெரும்புகழே பேசு!

—பெரும்பண்ணையூரான், தஞ்சாவூர்.

அறிவால் குணத்தால் அடக்கத்தால் கொள்கைச்
செறிவால் சிறந்த நெறியால்-சிறிதும்
பிறழா வழக்கால் புவியில் உயர்ந்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—பா. பாலகிருஷ்ணன், நாமக்கல்.

சாதியுயர் வகல சமுதாயம் முன்னேற
நீதிநெறி வகுத்த நெறியாளர்-மேதினியில்
உரிமை முழங்கி உயர்வாழ்வை அர்ப்பணித்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—சீனி திருவேங்கடம், சென்னை-15

பேரறிவுப் பெட்டகமாய் பேராண்மைச் சிங்கமாய்
யாரும் புகழ்ந்திடும் ஆற்றலொடு-பாரில்
அறியாமை நீங்க அருந்தொண்டு செய்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—பாலன், செந்துரை.

புல்லரைப் பேயரைப் போற்றிநீ என்கண்டாய்,
நல்லோராய்ச் சீறும் நயமிகு-சொல்லால்
புரட்சி குவித்தறிவு கொண்டிட்டார் நெஞ்சே!
பெரியார் பெரும்புகழே பேசு.

—தி. அ. இளங்கோ, ஆத்திகுளம்.

தீண்டாமை வைக்கமதைத் தீண்டாமல் தீய்த்துவிடப்
பூண்டாரே போர்க்கோலம் பூரித்தே! - ஆண்டு
சரிந்திடினும் மூப்பில் சரியாத ஆண்மைப்
பெரியார் பெரும்புகழே பேசு!

—வீ. பஞ்சவர்ணம், மேலக்கொண்டையம்பேட்டை.

பாதிப்பே இல்லாமல் பாரதத்தைப் பந்தாடும்
சாதிப்பேய் ஓட்டிய சாரதியே - வாதிட்(டு)
அரியே றெனநின்ற ஆசானாம் எங்கள்
பெரியார் பெரும்புகழே பேசு.

—எஸ்.பூவேந்த அரசு, பெரியமதியாக்
கூடலூர்

சாதிப் பேய்விரட்டிச் சரித்திரத்தில் இடம்பிடித்து
நீதிக்குத் தலைவணங்கி நின்றான்; -தீதில்லா
அரிமாவாய் அடுபுலியாய் ஆர்ப்பரித்துக் கருத்துரைத்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—ப. குமுருகேசபாண்டியன், கரப்பாடி.

மடமை இருள்சூழ்ந்த வண்டமிழர் நாட்டில்
கடமை உணர்வூட்டிக் காத்தார் - நடவா
அரிய செயலெல்லாம் ஆற்றியமா வீரர்
பெரியார் பெரும்புகழே பேசு.

—இமயபாரதி, சென்னை-1

பாரினிலே சீர்திருத்தம் பலகோடி செய்வதற்கு
காரிருளைக் களையவந்த கதிரவனாய் - சீரியநற்
கருத்தாலே சிந்தனைக்கு விருந்தளித்த ஈரோட்டுப்
பெரியார் பெரும்புகழே பேசு.

—மு. மணிவாசகன், நல்லாலம்.

கூனிக் குமைந்தநம்மை கோலோச்ச வைத்ததந்தை
தேனியாய் சுற்றித் திருத்தியவர் - மானி!
அரிமா எனச்சாடி ஆணவத்தை வென்ற
பெரியார் பெரும்புகழே பேசு.

—இராயகிரி-இளம் தமிழிறை, சென்னை-17

தாழ்ந்த குமுகாயம் தன்மானம் பெற்றோங்கி
வாழ்ந்த(து) எனவையம் மாண்புகள் - சூழ்ந்தே
அரசாளப் பொல்லா அறியாமை சாய்த்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர். அ. மோகனன், வங்கனூர்.

மொழியில் சீர்திருத்தம்! மூடத் தளத்தின்
வழியிலே சீர்திருத்தம்! வாழ்வில் - அழியா
நெறிபல கண்டுநம் நெஞ்சில் நிறைந்த
பெரியார் பெரும்புகழே பேசு!

—புலவர் சி. கண்ணப்பன், எம்.ஏ.,
அம்மையார்குப்பம்.

பேராற் பெரியார், பிறங்கிநின்ற கொள்கையினால்,
பேராப் பெரியார்; பெரிதுவந்தே - நேராய்
உரிய சமூகத்தொண் டுண்மையாய்ச் செய்த
பெரியார் பெரும்புகழே பேசு.

—வித்துவான் நா. சிவராமமுத்துக் குமரவேல், தேனி.

சாதிமத பேதமதை சாய்த்தமகன், தீய
போதனைகள் தீர்த்தமகன் புத்துலக - நீதிச்
சரித்திரத்தின் நாயகனாம் சிந்தனைச் சிற்பி
பெரியார் பெரும்புகழே பேசு.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

பெண்ணடிமைப் பேயகற்றி பித்தர்தம் நாவகற்றி
மண்ணடிமை போக்குவித்த மாவீரன்! -மண்டும்
அறியாமைச் சாக்காட்டை மூழ்கடித்த சிங்கம்!
பெரியார் பெரும்புகழே பேசு.

—'வெட்டிவயல்வளவன், முப்பையூர்.

வெண்தாடி வேந்தரிந்த வையமதில் வாழ்ந்ததால்
கண்மூடிக் கொள்கை கலைந்ததுகாண்-மண்ணில்
தெரியார் உளரோ, தமிழ்த்தலைவர் தந்தை
பெரியார் பெரும்புகழே பேசு.

—தி. நீலகண்டன், மன்னார்குடி.

எப்பாரும் போற்றுகிற ஈ. வே. ரா. அய்யாவை
ஒப்பான சான்றோரும் உண்டோசொல்? - தப்பா
அரியசெயல் செய்தோர் அறிவுநலம் ஓங்கப்
பெரியார் பெரும்புகழே பேசு.

—இரா.சித்தார்த்தான்,
அருப்புக்கோட்டை.

சாதிக் கொடுமையெனும் சாக்காடு போக்கிடவே;
போதித் தலைவனாய்ப் புறப்பட்டே - ஏதும்
அறியார் நிலைமாற்ற அலைந்திட்ட நம்தம்
பெரியார் பெரும்புகழே பேசு!

—எம். கலியமூர்த்தி,
தென்கீரனூர்.

சிந்திக்க வைத்திட்டார் சீர்திருத்தச் செம்மலவர்
முந்தை விதிசாய்த்த முன்னோடி! - விந்தைக்
குரியார் எவர்க்கும் படியார் அதனால்
பெரியார் பெரும்புகழே பேசு.

—சக்திதாசன்,
பெண்ணாடம்

புன்மையிருள் மாய்வதற்காய்ப் பாடிவந்த பொற்கோழி;
தன்னலத்தை வேரறுத்த செங்கதிரோன்; - ஒன்னார்
எரிந்துவிழப் போர்புரிந்த ஈரோட்டு ஏந்தல்;
பெரியார் பெரும்புகழே பேசு!

—வீரபாண்டியன்,
திருத்துறைபூண்டி.

# படிப்பு உதவித் தொகைகள்!

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971-72-முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவவொன்றிலும் புதியதாக நான்கு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இந்த உதவித் தொகையைப் பெறுவார்.

இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுககு ஆண்டொன்றுக்கு ரூ. 1000-மும், விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை வழங்கப்படும்.

இந்த உதவித் தொகை பெறும் மாணவர்களுள் தம் விருப்பப்படி சாதாரண பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 மட்டும் வழங்கப்படுகிறது.

இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 1979-80-ல் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 3,000 ஆக இருக்கும். 1978-79-லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்பு உதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது— அதாவது 2-லிருந்து 4-ஆக உயர்த்தப்பட்டது.

இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.



# படமும் செய்தியும்



நீலகிரி மாவட்டத்திலுள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சி முகாம் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 14.5.79 அன்று இராணுவ மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



கடற்கரைப் பாதுகாப்புப் பொது நெறியாளர், உதவி அட்மிரல் காமத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4-5-79 அன்று கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.



மதுரை மாநகராட்சி நவீன சிறப்பங்காடி கட்டடக் கால்கோள் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து, மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம. பொ. சி., மதுரை மேயர் திரு எஸ். முத்து ஆகியோர் உடனுள்ளார் (29.4.79).



ஈராக் நாட்டில், பாக்தாத் நகரில் நடைபெற்ற அனைத்துலக மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, 15-5-79 அன்று சென்னை திரும்பிய மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்களைவிமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றார்.



...லிம்பிக் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பரிசுகள் வழங்கும் விழாவிற்குத் தலைமை யேற்று, 6-5-79 அன்று மாண்புமிகு முதலவர் அவர்கள் வெற்றி பெற்றோருக்குக் கேடயம் வழங்கினார்..



செம்பரம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள மீன் இனப் பெருக்க நிலையத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் துவக்கி வைத்தார் (6-5-79).



கேரளத்தில் நிகழ்ந்த பயங்கர பஸ் விபத்தில் உயிர்நீத்தோரின் சடலங்கள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டபோது (11-5-79) அரசு பொது மருத்துவ மனைக்குச் சென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் இறந்தோர் உடல்மீது மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

குளுமை-விரைவு-திரைப்படப் பேருந்து போக்கு வரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் (9-5-79) துவக்கி வைத்தார். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன், மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.





# சங்கு குளிப்பு

பண்டை மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து தமிழ்நாட்டில் சங்கு குளித்தல் மாநிலத்தின் முழு உரிமையாக இருந்து வந்திருக்கிறது.

மக்களாட்சி ஏற்பட்ட பின்னரும் இவ்வுரிமை மாநிலத்தின் முழு உரிமையாக இருந்து வருகிறது. 1907-ஆம் ஆண்டு மீன் துறை ஏற்பட்டதிலிருந்து சங்கு குளிப்பு மீன்துறையால் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் கடற் பகுதிகளில் கிடைக்கும் சங்குகள் அவற்றின் தோற்றம், தொழிற்தேவை மற்றும் தரம் இவற்றின் அடிப்படையில் (1) ஜாதி (2) பட்டி (3) இரு பிறவி என பிரிக்கப்படுகின்றன. இவற்றில் திருநெல்வேலி மாவட்டக் கடற்பகுதியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் மட்டுமே கிடைக்கும் ஜாதிச் சங்குகளில் திருநெல்வேலி மாவட்டக் கடற்பகுதியில் கிடைக்கும் ஜாதிச் சங்குகளே மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்டக் கடற்பகுதியில் சங்குகுளி ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒன்றாகும். இச்சங்கு குளிப்பு, கடல் அமைதியாகவும், தெளிவாகவும் இருக்கும் மாதங்களாகிய அக்டோபர் முதல் மே முடிய உள்ள காலத்தில் நடத்தப்படுகிறது. காற்றுக் குறைவாய் உள்ள நேரங்களில் துறைப்படகுகளின் உதவியுடன் சங்கு குளி வள்ளங்கள் இழுத்துச் செல்லப்படுகின்றன.

திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் கடலோரப் பகுதியில் வாழும் சுமார் 1,000 குளியாட்கள் இச்சங்கு குளியில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். 1978-79-ஆம் ஆண்டு பருவ காலச் சங்கு குளிப்பு சுமார் 5,00 முதல் 600 குளியாட்களுடன் கடந்த நவம்பர் திங்களிலிருந்து துவங்கப் பெற்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சங்கு குளியில், ஒரு குளியாளின் தினசரி சராசரி வருமானம் ரூ. 50லிருந்து ரூ. 100 வரை உள்ளது. தாம் குளிக்கும் சங்குகளை ஒவ்வொரு நாளும் அரசு சங்குக் கிடங்கில் ஒப்புவித்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதப்படி சங்குகளுக்குரிய கிரயத்தினைக் குளியாட்கள் பெற்றுச் செல்கின்றனர். $2\frac{3}{4}$" விட்டமுள்ள முழு அளவு சங்கு ஒன்றிற்கு ரூ. 2.60 வழங்கப்படுகிறது. $2\frac{3}{4}$" அதற்கு மேலும் ($2\frac{3}{4}$" விட்டத்திற்கு உட்பட்ட) அடங்கிய முழு அளவு சங்கு ஒன்றிற்கு ரூ. 2.25 வழங்கப்படுகிறது. முழு அளவு சூத்தைச் சங்கு ஒன்றிற்கு ரூ. 0.20 வழங்கப்படுகிறது.

குழாய்ச் சங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு அவற்றின் உயிருள்ள சங்குகள் மீண்டும் கடலில் கொண்டுபோய் விடப்படுகின்றன. 6 பாகம் முதல் 12 பாகம் வரையுள்ள ஆழங்களில் இருக்கும் சங்குப் படுகைகளில் சங்குகள் பிடிக்கப்படுகின்றன. இச்சங்குகள் கைவினைஞர்களால் வளையல்கள் மற்றும் இதர ஆபரணங்கள் செய்ய மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதால், மேற்கு வங்கத்தில் இச் சங்குகளுக்கு நல்ல கிராக்கி உள்ளது. மேற்கு வங்காளத்திலுள்ள இந்து மகளிர் தங்கள் கைகளைச் சங்கு வளையல்களால் அலங்கரித்துக் கொள்கின்றனர்.

1978-79-ஆம் பருவ காலச் சங்குகள் துவங்கப் பெற்ற $3\frac{1}{2}$ திங்களுக்குள்ளேயே 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட முழு அளவு சங்குகள் குளியாட்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, அரசு சங்குக் கிடங்குகளில் இருப்பு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தந்த ஆண்டு சங்குகளைக் கொள்முதல் விலையிலிருந்து 15 சதவீதம் கூடுதல் செய்து சங்குகளின் விற்பனை விலை மாநிலக் கணக்காய்வுத் தலைவரால் நிர்ணயிக்கப்படுகிறது.

''வலம்புரி'' என்று பிரபலமாக அழைக்கப்படும் அபூர்வப் பிறவி சங்கு கிடைக்கப் பெறும்போது, அவற்றின் விசித்திரத் தோற்றத்தாலும், மிகவும் அபூர்வமாகக் கிடைக்கப் பெறுதலாலும் இந்து மதக் கோட்பாடுகளுக்கு உட்பட்ட மத நம்பிக்கைக்கு உரியதாக இருப்பதாலும் இச்சங்கு அதிக விலையைப் பெற்றுத் தருகிறது!





## முதல்வரின் முத்துக்கள்

* எளிமையாக வாழ்வதை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும்; அடக்கமும் அன்பும்தான் வாழ்வில் பெருமை சேர்ப்பதாகும்! உள்ளத்து அன்பு வழியினால் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணலாம்!

* ஒரு விளையாட்டு வீரன் உடல வலிமை பெற்றவனாக இருந்து விட்டால் மட்டும் போதாது. அவனுக்குச் சிறந்த மனநலம், பண்பாடு, துணிச்சல், தோழமை உணர்வு, நாட்டுப்பற்று ஆகிய குணநலங்களும் இருக்கவேண்டும்!

* நல்லவன் என்ற பெயரை எடுப்பதற்கு ஒருவனுக்குப் பல ஆண்டுகள் ஆகலாம்; ஆனால், கெட்டவன் என்ற பெயரெடுப்பதற்கு ஒரு வினாடி போதும்!

* மனிதனுக்குச் சங்கடம் தோன்றும் போது நிம்மதி வேண்டுமென்றால், 'அவன் தன் மனச்சாட்சிக்குக் கேள்விபோட்டு, அந்த மனச்சாட்சியின் பதிலைப் பெற்று எதுசரி-எது நியாயம் என்று படுகிறதோ அதன்படி செயல்பட்டால்தான் மன நிம்மதி அடையமுடியும்!

* சோதனையைக் கண்டு துவண்டு விடக் கூடாது. சோதனைகளுக்கு இடையே மனிதன் உணர்ச்சி வயப்படுவது தடுக்க முடியாது. ஆனால், மறுகணம் கடமை என்ன என்பதை அறிந்து அந்தப் பாதையில் சென்றால், சோதனைகள் நீங்கும். மனம் நிம்மதி பெறும்!

* பிரச்சினைகள் ஏற்பட்டால், அதற்காகக் கவலைப்பட்டுச் சிந்தித்துக் கொண்டு இருக்கக்கூடாது. அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து அதன்படி நடக்கவேண்டும். 'ஐயோ, இப்படி ஆகி விட்டதே' என்று கவலை கொண்டு இருக்கக்கூடாது. இந்த உறுதி மனிதனுக்கு என்றும் இருக்க வேண்டும்.

# மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம்

“மாநிலக் கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிறுவனம்” புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்குத் தொழில் கல்வி பயிற்றுவிப்பதற்காக 1975-76 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் துவங்கப்பட்டது. அது தன்னுரிமை உள்ளது.

கல்வி அமைச்சர் இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவிற்குத் தலைவராவார். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அதன் துணைத் தலைவராவார். அது 42 மாதங்கள் கொண்ட (27 மாதங்கள் நிலையப் பயிற்சியும், 15 மாதங்கள் வேலை அனுபவமும் உடைய) கல்வித் திட்டங்களை நடத்தி வருகிறது.



(1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவிகளும் முறைகளும் (3) நெசவும் நவீன அழகு வேலைப்பாடும் என்ற மூன்று பாடத் திட்டங்கள் அங்கு உள்ளன.

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாநில அரசு இந்நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2½ இலட்சம் மானியம் அளிக்கின்றது.

# செய்தித்தாள் காகித ஆலைத்திட்டம்

கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகப் பயன் படுத்தி, நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாள் மற்றும் 50 டன் காகிதம் உற்பத்தி செய்யும் செய்தித்தாள் காகித ஆலை ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் திட்ட முதலீடு ரூ. 132 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆலை மூலம் சுமார் 4,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும். இத்திட்டத்தில் உள்ள முக்கிய அனுகூலம் என்னவென்றால் தமிழ்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய மூலப் பொருளான கரும்புச் சக்கையைப் பயன்படுத்துதல்தான்.

சாதாரணமாக இதுபோன்ற திட்டங்களுக்கு மூலப் பொருளாகப் பயன்படும் மரத்துண்டுகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இரண்டாவதாக செய்தித்தாள் விநியோகம் மற்றும் தேவைக்கு இடையிலே உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு இத்திட்டம் உதவுகிறது. இதன் மூலம் செய்தித்தாள் இறக்குமதி செய்வதற்கான அந்நியச் செலாவணி மிச்சமாகிறது. இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக ரூ. 50 கோடி அங்கீகாரம் பெற்ற மூலதனத்தில் ''தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்'' என்ற பெயரில் தனியாக ஒரு நிறுவனத்தைநிறுவுவதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுவரை இத்திட்டத்திற்கான ஆரம்பக் கட்ட வேலைகளை டிட்கோ செய்து வருகிறது.

இத் திட்டத்திற்குத் தேவையான தொழில் உரிமம், அந்நிய நாட்டு முதலீடு, வாரிய அனுமதி மற்றும் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கான ஒருங்கிணைந்த விண்ணப்பங்கள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தவிர இத்திட்டத்திற்குத் தேவையான கரும்புச் சக்கை, நிலக்கரி ஆகியவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் இறுதியாக்குவதற்கான நடவடிக்கை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்று ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறும். இத்திட்டத்தில் அரசு போட வேண்டிய மொத்த பங்கு மூலதனம் ரூ. 11 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு அரசு ரூ. 5 கோடி அளவில் பங்கு மூலதனம் அளிக்க வேண்டியதிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் சேஷசாயி பேப்பர் நிறுவனத்தார் அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ளது.


தந்தி
''கோமில்ஸ்''

தொலை பேசி
ஆலை அலுவலகம் : 214
நிர்வாக இயக்குநர் : 215

## கோவை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை

(வரையறுக்கப்பட்டது)

**தபால் பெட்டி எண். 8, தாராபுரம்—638656.**

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | : | 100 இலட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | : | 88.15 இலட்சம் |
| தமிழ்நாடு அரசு பங்கு | : | 71.65 இலட்சம் |
| துவக்கத்தில் கதிர்கள் | : | 12,420 |
| 1978-ல் அதிகரிக்கப்பட்ட கதிர்கள் | : | 12,600 |
| 1978-ஆம் ஆண்டு நிகர லாபம் | : | 16.23 இலட்சம் |
| கடந்த ஆண்டுகளில் நூல் ஏற்றுமதி | : | 39.00 இலட்சம் |

**நூல் ரகங்கள்**

| சிட்டம் | கோன் |
|---|---|
| 20S, 40S, 60S, 80S.<br>2/17S, 2/17 (சூப்பர் டீலக்ஸ்) | 34S, 40S, 60S, 80S. |

ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதியாகும் துண்டுகளுக்கான 2/17S சூப்பர் டீலக்ஸ் நூல் கோ-ஆப்டெக்ஸு-க்காக உற்பத்தி செய்யப்படுகிறது.

சிறப்புடன் வளர்ந்து வரும் இவ்வாலையில் மதிப்புள்ள பங்குதாரராகச் சேர்ந்து கைத்தறித் தொழிலுக்கு ஊக்கமளிக்குமாறு பொதுமக்களையும், கூட்டுறவு நிறுவனங்களையும் கனிவுடன் வேண்டுகின்றோம்.

கே. எச். மொய்னுதீன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர்,
(மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை)

மா. சத்தியமூர்த்தி, எம்.ஏ.,
துணை ஆட்சியர்/
நிர்வாக இயக்குநர்



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

**(1-5-79 முதல் 16-5-79 முடிய)**

2—5—79

தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டங்களில் 31 புதிய விதிகளை இணைத்து விரைவில் ஒரு சட்டத் திருத்தம் வரவிருக்கிறது. அது தற்சமயம் பொறுக்குக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது என மேலவையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

4—5—79

தமிழ்நாடு அரசு சமூகநலத்துறை சார்பில் ஏழை விதவைகளின் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படவிருக்கின்றன என்று அரசு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களிடம் இடைத்தரகர்கள் கொள்ளையடிப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டி, நெசவாளர்களுக்குச் சங்க அடையாளக் அட்டை மூலம் நூல் விநியோகிக்கப்படும் என மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் அறிவித்தார்.

எல்லாருக்கும் வேலை என்ற திட்டத்தைச் செயல்படுத்த 40 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை இந்த ஆண்டிலேயே துவக்க அரசு ஆணையிட்டுள்ளதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து அவர்கள் அறிவித்தார்.

5—5—79

சாலை விபத்துக்களில் உயிர்ப் பலியாவதைத் தடுக்கும் வகையில் விபத்துக்குக் காரணமான ஓட்டுநர்களுக்குக் கடுமையான தண்டனையளிக்கும் புதிய சட்டம் கொண்டுவரப்படுமென மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

6—5—79

தென் மாநிலங்களில் ஏற்பட்டுள்ள ஃபிலிம் பற்றாக்குறையைத் தீர்க்க இரண்டுமாதக் காலத்திற்கு ஃபிலிம் இறக்குமதிக்கு அனுமதி தரக்கோரி, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசுக்குத் தந்தி அனுப்பினார்.

சேராக்குப்பம் கிராம விவசாய சேவைக கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் வடலூரில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், ஏழை விவசாயிகளுக்குக் கறவை மாடுகளும், மருந்து தெளிக்கும் கருவிகளும் வழங்கினார்.

8—5—79

கடல் ஓரப் பகுதிகளில் இரால் மீன் வளர்க்கும் புதிய திட்டத்தினை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்தால் ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரம் வரை இலாபம் கிடைக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

தஞ்சை மாவட்டம் நாகூர் பேருந்து நிலையத்தில் ரூ. 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள பயணிகள் தங்கும் விடுதியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் நிலமற்ற 30 ஏழைகளுக்கு நிலப் பட்டாக்களையும் வழங்கினார் அமைச்சர். தஞ்சை மாவட்டத்தில், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 4.5 இலட்சத்தைக் கடனாகவும் மானியமாகவும் வழங்கினார் அமைச்சர். திருவோணத்தில் ரூ. 18 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைக் கிடங்கு துணைக் கட்டடம் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

9—5—79

தமிழக எடைகள் அளவுச் சட்டத்தின் கீழ் இனிமேல் எடைக் கணக்கிலேதான் பூ வியாபாரம் நடத்தவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**10—5—79**

பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவு சென்னை-பெங்களூர் வழித்தடத்தில் குளுமை-விரைவு திரைப்பட வசதியோடு கூடிய பேருந்து ஒன்றையும், சாய்வு இருக்கை, சொகுசு விரைவுப் பேருந்துகள் சென்னை-சேலம், சென்னை-தஞ்சாவூர் வழித்தடத்திலும், புதிய விரைவுப் பேருந்துகளைச் சென்னை-சென்னை-போடிநாயக்கனூர், பரமக்குடி சென்னை-பாபநாசம் வழித்தடங்களிலும், சென்னை நகரில் தானியங்கு கதவு கொண்ட 11 விரைவுப் பேருந்துகளையும் விட்டுள்ளது. இவற்றின் வெள்ளோட்டத்தை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் துவக்கி வைத்தார்.

தொழில் அமைதிக்காகவும், தொழிலாளர் பிரச்சினைகளில் தொழிலாளர்களின் கருத்தினை அறிய இரகசிய வாக்கெடுப்பு நடத்திட வழிசெய்யும் வகையிலும் விரைவில் புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

**11—5—79**

பால்வள நிறுவனம் சீரிய முறையில் பால் வழங்குவதற்குப் புதிய முறையினைக் கொண்டுவரும். இதன் மூலம் தற்போதுள்ளதைப்போல பால் வழங்கும் முறையில் உள்ள முறைகேடுகள் அறவே நீக்கப்படும் என்று மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு கே. ராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்.

கொச்சி அருகில் ஏற்பட்ட பயங்கர பஸ் விபத்தில் மாண்டவர்களின் குடும்பத்திற்குத் தமிழக அரசு தலா ரூ. 500ஐ அவர்களது சடலங்கள் சென்னை வந்த அன்றே வழங்கியது.

**12—5—79**

வறுமையில் வாடும் தமிழ்ப் புலவர்கள் 33 பேர்களுக்குத் தமிழக அரசு உதவித் தொகையாக மாதம் ரூ. 100 வழங்கி வருகிறதல்லவா? அத்தொகை அளவு ரூ. 250 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

* சென்னை நகரில், காற்றழுத்த மண்டலம் காரணமாக ஏற்பட்ட சூறைக் காற்றால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவும் வகையில் 8 இடங்களில் மாநகராட்சி நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன. ஒரு இலட்சத்திற்கும் மேலான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

* தமிழகத்தில் 470 பஞ்சாயத்துக்களைத் தொட்டுச் செல்லும் வகையில் புதிதாக 486 பஸ் வழித்தடங்கள் ஜூன் மாதத்திற்குள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

**3—5—79**

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள 15 ஆயிரம் மக்களுக்காக, விமானத்தின் மூலம் உணவுப் பொட்டலங்கள் அவ்வப்பகுதிகளில் வழங்கப்பட்டன. அந்தந்தப் பகுதிகளில் அரசின் நிவாரணப் பணிகள் தீவிரமாக்கப்பட்டன.

**4—5—79**

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆனந்தநல்லூர், பாலையூர், அசிக்காடு ஆகிய கிராமங்களில், ரூ .57 இலட்சம் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார்.

* சென்னையில் புயலால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளிலெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரிலேயே சென்று நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தினார்.

**15—5—79**

லால்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெரிஞ்சலக்குடி ஊராட்சியில் ரூ. 25 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார்.

ரேஷன் கார்டுகளுக்குத் தரப்படும் மண்ணெண்ணெய்யின் அளவை ஆறு லிட்டராக உயர்த்தித் தரும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

* மழையாலும், சூறாவளிக் காற்றாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களை நேரில்கண்டு அவர்கள் மருத்துவ உதவி பெறச் செய்தார் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சவுந்திரராசன் அவர்கள்.

* நீலகிரி மாவட்டம் வெலிங்டனில்உள்ள இராணுவப் பயிற்சி முகாமின் பெயர் 'மதராஸ் ரெஜிமெண்ட்' என்றிருப்பதை 'தமிழ்நாடு ரெஜிமெண்ட்' என மாற்ற வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

* சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்க முன்னாள் இராணுவ வீரர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து இரவு-பகலாக ரோந்து சுற்ற ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்!"

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"



— பேரறிஞர் அண்ணா

# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 86

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!